உ

# மாணிக்கவாசக சுவாமிகள்

# சரித்திரம்



[திருவாசகத்திரட்டுடன்]

ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

உ

கணபதி துணை

# மாணிக்கவாசக சுவாமிகள்

# சரித்திரம்

---

இஃது

பண்டிதர்: ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையால்

எழுதி

திருவாசகத்திரட்டுடன்

வண்ணார்பண்ணை

ஆசிரியர் திரு. வீ. சண்முகரத்தினம் அவர்களால்

அச்சிடுவிக்கப்பெற்றது.

மன்மத ௵ பங்குனி ௴

(*Copy right Reserved*)

1956

விலை நபா 1-25.

ஆறும் பதிப்பு :

பதிப்பாளர்

ஆசிரியர் வீ. சண்முகரத்தினம் அவர்கள்

வண்ணார்பண்ணை

பதிப்பு :

ஸ்ரீ காந்தா அச்சகம்

யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

எங்கள் சமய குரவர் நால்வருள் ஒருவராக விளங்கும் ஸ்ரீமந். மாணிக்கவாசக சுவாமிகளுடைய திவ்விய சரித்திரம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் எழுதிய பெரிய புராண வசனத்தின் முறையையும் நடையையும் இயன்றவரை பின்பற்றி எழுதப்பெற்றதாகும். சைவமக்கள் எல்லாருக்கும் பயன்படக்கூடியது. சமய அறிவு குன்றி வருமிக்காலத்தில் இதுபோன்ற சமய அறிவையூட்டும் பலநூல்கள் வெளிவரவேண்டுமென்பது எனது வேணவா. எனவே எனது மாமனூரால் எழுதப்பெற்ற மாணிக்கவாசக சுவாமிகளுடைய திவ்விய சரித்திரத்தை யான் கையேற்றுப் பதிப்பித்து வெளியிட்டுள்ளேன். கொழும்பு விவேகானந்த சபையார் தாம் வருடந்தோறும் நடாத்தி வரும் அகில இலங்கைச் சமயபாடப் பரீட்சைகளுள் மேற்பிரிவுக்கு இதனையொரு பாடமாக விதித்துள்ளனர். எனவே சைவக் கல்லூரிகளும் கலாசாலைகளும் சைவ உலகமும் இதனை ஆதரித்து எம்மை ஊக்குவிப்பார்களாக.

வண்ணார்பண்ணை
3-4-56.

வீ. சண்முகரத்தினம்

# நூன்முகம்

எங்கள் சமயகுரவர் நால்வருள் ஒருவராக விளங்கும் ஸ்ரீமத். மாணிக்கவாசக சுவாமிகளுடைய திவ்விய சரித்திரம், எமது தந்தையார் இயற்றிய திருவாதவூரடிகள் புராண விருத்தியுரையை ஆதாரமாகக் கொண்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் எழுதிய பெரியபுராண வசனத்தின் முறையையும் நடையையும் இயன்றவரையிற் பின்பற்றி எழுதப்பெற்றதாகும்; இந்நூல் சைவ மக்களெல்லார்க்கும் பெரிதும் பயன்படத்தக்கது. சைவ வித்தியாசாலைகள் கல்லூரிகளிற் பயிலும் மாணக்கருக்குச் சமயபாடமாக உபயோகிக்கக்கூடியது. மார்கழிமாசந்தோறும் நிகழும் திருவெம்பாவைப் பூசைக் காலத்தில் திருக்கோயில், திருமடம், வித்தியாலயம் முதலிய பரிசுத்த தலங்களிற் படனஞ் செய்யற்பாலது.

இந்நூலின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ள திருவாசகத் திரட்டிற் சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருப்பள்ளியெழுச்சி, திருப்படைஆட்சி முதலான பாராயணத்துக்கு இன்றியமையாத் திருவாசகங்கள் தொண்ணூற்றுக்கு மேற்பட்டவை அடங்கியுள்ளன.

இந்நூல் இங்குள்ள சைவக் கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் பயிலும் மாணவர்களுக்குச் சமய பாடமாக உபயோகப்படுகின்றது. கொழும்பு விவேகானந்த சபையார் தாம் வருடந்தோறும் நடத்திவரும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீக்ஷைகளுள் மேற் பிரிவுப் பரீக்ஷைக்கு இதனையும் ஒரு பாடமாக விதித்துள்ளனர்.

வண்ணார்பண்ணை,
1–2–54

ம. வே. தி. ச.

உ

# மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்.

---

**காப்பு**

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

இதன் பொருள்: *மால் பவள வரையில் நிலவு எறிப்பது போல் பரந்த நீற்று அழகு*—பெரிய பவள மலையின்கண்ணே சந்திரிகை பிரகாசிப்பது போலச் செம்பவளத் திருமேனியிலே பரவப் பூசிய வெண்மையாகிய விபூதியினது கோலமானது,—*மாது பச்சு உடம்பில் திவள*—உமையம்மையினது பசுமையாகிய திருமேனியிலே துவளாநிற்ப,—*உடன் நின்று ஆடிய பரமன் சிறுவனை*—அவ்வம்மையுடனின்று திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமானுடைய திருக்குமாரரை,—*தவள மா மருப்பு ஒன்று ஒடித்து ஒரு கரத்தில் தரித்து*—வெண்மையாகிய பெரிய ஒரு திருக்கொம்பை முரித்து ஒரு திருக்கரத்தில் எழுத்தாணியாகக் கொண்டு,—*பெரும் பாரதப்போர் உயர் கிரிப் புறத்து எழுதும்*—மகா பாரத யுத்த சரித்திரத்தை உயர்ந்த மேருகிரியாகிய ஏட்டின்கண் ணெழுதியருளிய,—*கவளமா களிற்றின் திருமுகம் படைத்த கடவுளை*—கவளவுணவையுடைய கரிய களிற்றியானையினது திருமுகத்தையுடைய விநாயகக் கடவுளை,—*நினைந்து*—ஈண்டெடுத்துக்கொண்ட இலக்கியம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு மனத்திலே தியானித்து,—*கைதொழுவாம்*—கைகளினாலே அஞ்சலி செய்வாம் என்றவாறு.

## கடவுள் வாழ்த்து

### சபாபதி

இதந்தரு மடந்தையொ டியைந்துயி ருடம்புபோல்
விதம்படுல கங்களின் விரிந்தொளி விளங்குவார்
மதங்கமொடு துந்துபி வழங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழ லிறைஞ்சுவாம்.

இ-ள்: இதம் தரு மடந்தை ஒடு இயைந்து—ஆன்மாக்கட்கு இன்பத்தைத் தரும் சிவகாமியம்மையோடு கூடி,—விதம் படு உலகங்களின் உடம்பு உயிர் போல் விரிந்து ஒளி விளங்குவார்-பலவகைப்பட்ட உலகங்களிலெல்லாம் உடம்பின்கண் உயிர்போல வியாபித்து நின்று அறிவுருவாய் விளங்குஞ் சபாநாயகரது,—மதங்கம் ஒடு துந்துபி வளம்கெழ முழங்க—மிருதங்கத்தோடு தேவதுந்துபிகள் வளம்பொருந்த ஒலிக்க,—சிதம்பர நடம்பயில் செழுங்கழல் இறைஞ்சுவாம்—சிதம்பரத்தின்கண்ணே திருநடனஞ் செய்தருளுகின்ற செழுமையாகிய திருவடிகளை யாம் வணங்குவாம் எ-று.

### சிவகாமியம்மை

ஆடக சிதம்பர வணங்குமை யணங்கிலா
நாடக னனந்தசுக நன்குபுனை பங்கினுள்
ஏடக மணம்பொருவ வெங்கணு மியைந்துளாள்
பாடக மிலங்குசிறு பங்கய மிறைஞ்சுவாம்.

இ-ள்: ஏடு அகம் மணம் பொருவ எங்கணும் இயைந்து உளாள்—மலரின்கண் மணம்போல் உலகெங்கும் வியாபித்து நிற்பவரும்,—அணங்கு இலா நாடகன் அனந்த சுகம் நன்குபுனை பங்கினுள்—உள்ளவாறே தரிசித்த ஆன்மாக்கட்குப் பிறவித்துன்பத்தை இன்மை செய்யுந் திருநடனத்தையுடைய சபாநாயகரது வரம்பிலின்பத்தை இனிதாக அனுபவிக்கும் (அவரது) வாமபாகத்தை யுடையவரும்,—சிதம்பர ஆடக அணங்கு உமை—சிதம்பரத்தின்கண்ணுள்ள கனகசபையிலே நிருத்தசாக்ஷியாய் நிற்கின்றவருமாகிய அழகையுடைய சிவகாமியம்மையினது,—

பாடகம் இலங்குசிறு பங்கயம் இறைஞ்சுவாம்—வேதமாகிய பாதகடகங்கள் விளங்குஞ் சிறிய திருவடித் தாமரைகளை யாம் வணங்குவாம் எ—று.

## சுப்பிரமணியக்கடவுள்

துங்கமத கும்பவுயர் தும்பிமுகர் தம்பிசீர்
தங்குநெகி ழஞ்சிறு சதங்கைகள் புலம்பவே
மங்கையுமை கண்குளிர வந்துலவு கின்றதாள்
அங்கைமலர் கொண்டுமிகு மன்புட னிறைஞ்சுவாம்.

இ-ள்: துங்க மத உயர் கும்ப தும்பிமுகர் தம்பி—சுத்தமாகிய மதம் பில்கும் உயர்ந்த மத்தகத்தையும் யானை முகத்தையுமுடைய விநாயகக் கடவுளுக்குத் தம்பியாகிய சுப்பிரமணியக் கடவுளது,—சீர்தங்கு நெகிழம் சிறு சதங்கைகள் புலம்ப—அழகிய சிலம்புகளும் சிறு சதங்கைகளும் சத்திக்கவும்,—மங்கை உமை கண்குளிர வந்து உலவுகின்றதாள்—நித்திய கன்னிகையாகிய உமையம்மையினது திருக்கண்கள் குளிரவும் அவர்முன் வந்துலாவி விளையாடியருளுந் திருவடிகளை,—அங்கை மலர் கொண்டு மிகும் அன்பு உடன் இறைஞ்சுவாம்—அங்கையிற் பூக்களைக் கொண்டருச்சித்து மிக்க அன்போடு யாம் வணங்குவாம் எ—று.

## மந்திரியானமை

செந்தமிழ் வழங்கும் நிலமாகிய பாண்டிநாட்டின் கண்ணே சகல செல்வங்களும் மலிந்த திருவாதவூர் என்னும் ஓர் ஊர் உண்டு. அந்த ஊரிலே ஆமாத்தியப் பிராமணர் குலத்திலே சம்புபாதாசிரயர் என்னும் நாமத்தினை உடையவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்; கடவுட் பக்தி உடையவர். அவருடைய மனைவியார் பெயர் சிவஞானவதியார். அவ்வம்மையாரிடத்தில் ஒரு சற்புத்திரர் அவதாரஞ் செய்தார். அக் குழந்தைக்குத் திருவாதவூரர் என்று பெரியோர் பெயரிட்டனர். அன்னப் பிராசனம், சௌளகன்மம், வித்தியாரம்பம், உபநயனம் முதலிய கருமங்கள் அவ்வக்

காலத்தில் விதிப்படி அப்பிள்ளைக்குச் செய்யப்பட்டன. பதினாறும் வயசிலே திருவாதவூரர் சகல கலைகளிலும் வல்லுநரானார்.

அக்காலத்திலே பாண்டி நாட்டை அரசு செய்த அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரருடைய கல்வியறிவொழுக்கங்களைப் பெரியோர் சொல்லக் கேள்வியுற்று, அவரைத் தன்னிடம் அழைத்துத் தனக்கு முதன் மந்திரியாக நியமனஞ் செய்தான். அவர் பாண்டிய ராசனுக்குத் துணையாகவிருந்து நீதி திறம்பாது பரிபாலனஞ் செய்து வந்தார்.

இங்ஙனமாக, திருவாதவூரர் மனத்திற் பதி பசு பாசம் என்னும் இவைகளைப்பற்றிய விசாரம் உண்டானது. இச்சையே பிறவிக்குக் காரணம் என்றும், இப்பிறவித்துன்பத்தை யொழித்தற்குச் சிவபிரானுடைய திருவருள் வேண்டுமென்றுந் துணிந்து திருவாதவூரர் பரமசிவனைப் பத்தியோடும் வழிபடுவாராயினர். அவர் பிரபஞ்ச வாழ்க்கையிற் பயனில்லை யெனக் கண்டார். உண்மை ஞானத்தைத் தருவதாகிய நான்காஞ் சத்தி நிபாத மென்னும் அதிதீவிர பக்குவ நிலையை அவர் அடைந்தார். விளாங்கனியைப் பெறவிரும்புவோர் விளா மரத்திலிருக்கும் குரங்கிற்குக் கல்லாலெறிய, குரங்கு மரத்திலிருந்த விளாங்கனியைப் பிடுங்கியெறிய, அக்கனியை விரும்பியவர் பெற்றுச் செல்வதுபோல், சற்குருவை அடைதல் வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு, திருவாதவூரர் கற்றவர்களுடன் தர்க்கஞ்செய்து வருவாராயினர்.

இஃதிங்ஙனமாக, ஒருநாள் அரிமர்த்தன பாண்டியன் தனது அத்தாணி மண்டபத்தின் கண்ணே கொலு வீற்றிருக்கும்போது, அவனுடைய தூதுவர்கள் சிலர் வந்து அவனை வணங்கி "மகாராசாவே, ஆரிய தேசத்து வணிகர் சோழநாட்டின் கடற்கரையிற் சிறந்த குதிரைகளைக் கொண்டுவந்திருத்தலை நாங்கள் நேரிற் கண்டோம்" என்று சொன்னார்கள். பாண்டிய ராசன் தூதர்சொன்ன

வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து தனதுமுதன் மந்திரியாராகிய வாதவூரரை நோக்கி, "நீர் நான் தரும் பணத்தைக்கொண்டு சோழநாட்டிற்குச்சென்று சிறந்த குதிரைகளை வாங்கிவாரும்" என்று சொன்னான், பாண்டியன் கொடுத்த நாற்பத்தொன்பது கோடி பொன்னையும் பெற்றுக்கொண்டு திருவாதவூரர் நால்வகைச் சேனை சூழச் சகல வரிசைகளோடும் ஒரு சுபதினத்திற் புறப்பட்டு ஆலவாயின்கண்ணே கோயில் கொண்டருளிய சோமசுந்தரக் கடவுளை வணங்கிக்கொண்டு மதுரைப் பதியைக் கடந்து சென்றார்.

---

## திருப்பெருந்துறையில் உபதேசம் பெற்றமை

கைலாயமலையின் கண்ணே சிவபிரான் அரிபிரமேந்திராதி தேவர்களும், முனிவர்களும், சிவகணத்தவர்களும் மற்றைய அடியார்களும் தம்மை வழிபட, அவர்களுக்குத் திருவருள் பாலித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார். இவ்வாறு எழுந்தருளியிருந்த கைலாசபதியானவர் திருவாதவூரரை ஆண்டருளத் திருவுளங்கொண்டு தமது திருமருங்கில் நின்ற கணநாதர்களைப்பார்த்து, "நீவிர் மானுட வடிவங்கொண்டு எம்முடன் வருதிர்" என்று கட்டளையிட்டருளித் தாமும் ஒரு பரமாசாரியத் திருக்கோலத்தைத் தாங்கி அக்கணநாதருடன் பூவுலகத்திற்கு எழுந்தருளினர்.

இப் பூவுலகின்கண்ணே நீர்வளம் நிலவளம் பொருந்தியதும், பூஞ்சோலைகள் மலிந்ததும், தைவிகம் வாய்ந்ததுமான திருப்பெருந்துறையென்னும் ஒரு பதி யுள்ளது. அத் திருப்பெருந்துறையிலுள்ள அழகிய பூஞ்சோலையொன்றன் மத்தியிலே ஒரு குருந்தமர மூண்டு. அக் குருந்தமர நீழலின்கண்ணே பரமபதியாகிய பரமாசாரியர் தமது தொண்டர்கள் புடைசூழத் தெய்வத்தன்மை பொருந்திய ஒரு ஆசனத்தில் எழுந்தருளியிருந்தார். இப்

படியிருக்கும்போது அரிமர்த்தன பாண்டியனுடைய முதன் மந்திரியாராகிய திருவாதவூரர் மற்றை மந்திரிமாரும் நால்வகைச் சேனைகளும் தம்மைச் சூழ்ந்துவர அத் திருப்பெருந்துறை மார்க்கமாகச் செல்வாராயினர். அவர் அங்ஙனஞ் செல்லும்போது சமீபத்திலுள்ள பூஞ்சோலையில் யாரோ சிவாகமங்களை ஓதும் ஒலி காதிற் படுதலும், அவர் தம்முடன் வந்த ஏவலரைப் பார்த்து "இச் சிவாகம ஒலி எங்கிருந்து வருகின்றதென்பதை அறிந்து வருதிர்" என ஆஞ்ஞாபித்தார். சென்ற ஏவலர்கள் மீண்டு வந்து மந்திரியாரை வணங்கி "மந்திரியாரே! சிவபெருமானுக்குச் சமானமானவரென்று சொல்லத்தக்க ஒரு பரமாசாரியர் பத்தர்கள் பலர்சூழ இச்சோலையின் மத்தியில் நிற்கும் ஒரு குருந்தமர நீழலில் இருக்கின்றார்" என்று சொன்னார்கள்.

ஏவலர்கள் கூறிய செய்தியைக் கேட்ட திருவாதவூரர் அந்தப் பரமாசாரியைத் தரிசிக்க வேண்டுமென்னும் வேணவாவுடையராய்த் தாம் ஏறிவந்த சிவிகையைவிட்டு இறங்கி நடந்துபோய்ப் பரமாசாரியரும் சிவபத்தர்களும் இருக்கும் அச் சபையைக் கண்டார். பரமாசாரியர் சந்நிதியிற் சிவாகமங்களை ஓதுபவர்களும், அவற்றைச் சிந்திப்பவர்களும், சிந்தித்துத் தெளிந்து தம்வயமழிபவருமாகத் தொழாயிரத்துத் தொண்ணூற்றென்பதின்மர் என்னுந் தொகையினையுடைய அடியவர்கள் அங்கிருப்பதைப் பார்த்துக்கொண்டு வாதவூரர் அகத்தில் அப்பரமாசாரியரை வணங்கிப் புறத்தில் வணங்கார் போல நடித்துமந்திரிக்குரிய மேன்மையோடு சமீபத்திற்சென்று நின்றார்.

சிரசிலும் செவிகளிலும் கழுத்திலும் மார்பிலும் கரங்களிலும் உருத்திராக்கந் தரித்துக்கொண்டு நெற்றியில் விபூதி விளங்க எழுந்தருளியிருந்த பரமாசாரியரை, வாதவூரர் மிக்க விநயத்தோடு பார்த்து "சுவாமி, தேவரீருடைய கரத்திலுள்ள புத்தகம் என்ன" என்று வினவ,

அவர் "பொய்மையிலாச் சிவஞான போதம்" என்றார். என்று சொல்லுதலும் "சிவம் என்றலென்ன? ஞானமென்றலென்ன? போதமென்றலென்ன? இவைகளைத் தமியேனுக்கு விளக்குவீரேல், பூர்வத்திற் கல்லால கீழ்லிருந்து சநகர் முதலாம் முனிவர்கட்கு ஞானோபதேசம் செய்தருளிய தக்கிணமூர்த்தியாகத் தேவரீரை மதித்துத் தேவரீருக்கு நானும் அடிமையாவேன்" என்று திருவாதவூரர் விண்ணப்பஞ் செய்ய, அப்பரமாசாரியர் "சிவமாவது நித்த முத்த சுத்த சித்தாகிய ஓர் வஸ்து; அந்த வஸ்துவைச் சந்தேக விபரீதக் காட்சிகளின்றி அதன் அருள்வழிநின்று உள்ளவாறு அறிதலே இடைநின்ற ஞானமாகும்; இறுதிக்கண் விளங்கும் போதமாவது, அங்ஙனம் ஆகமவளவையின் வைத்தறிந்ததனை அநுபூதிநிலையில் வைத்து நிச்சயஞ் செய்தலேயாகும்" என்று கூறியருளினர்.

பரமாசாரியர் இங்ஙனங்கூறியருளக்கேட்ட திருவாதவூரர் வெயிலிடைப்பட்டவெண்ணெய்போல் தமது உள்ளம் நெக்கு நெக்குருக நின்றார். அவர் சத்திநிபாதம் நான்கனுள் இறுதிக்கண்ணதாகிய அதிதீவிர பக்குவமடைந்திருந்தாராதலின், பொன்னம்பலத்தின் கண்ணே ஆனந்தத்தாண்டவம் புரிந்தருளும் நடராசப்பெருமானே தம்மை ஆட்கொண்டருளும்படி இப் பரமாசாரியத் திருக்கோலங்கொண்டு இங்கு எழுந்தருளினர் என்ற உண்மையை யுணர்ந்தவராய்ப் பரமாசாரியரை வணங்கி "என் ஆன்மநாயகரே, மேகத்திலே தோன்றி மறையும் மின்னலைப்போன்ற நிலையற்ற இப்பிரபஞ்சப் பொருள்கள் ஒன்றையும் விரும்பமாட்டேன்; தேவரீருடைய திருவடிகளையே புகலிடமாக அடைந்து இப்பிறவித் துன்பத்தை நீக்க ஆசைகொண்டேன்; ஆதலின் தமியேனை இப்பொழுது அடிமைகொண்டருள வேண்டும்" என்று விண்ணப்பம்செய்து முகமெலாங் கண்ணீர் வார நின்றார்.

இங்ஙனம் நிற்ப, அங்கு நின்ற அடியவர்களுள் ஒருவர் "சுவாமி, கொடிய வினைகளை நீக்கி இவ்வடிமையைத்

தேவரீர் ஆண்டருள வேண்டும்" என இரந்தார். பரம கருணாநிதியாகிய பரமாசாரியர் அங்ஙனஞ் செய்தற்குத் திருவுளஞ் சம்மதித்துத் திருவாதவூரரை நோக்கி "அப்பனே, நீ முன்னர் ஈட்டிய தவத்தின் பயனாக உன்னை இன்று அடிமைகொள்ளும் வண்ணந் திருப்பெருந்துறை யென்னும் இத்தலத்தை அடைந்தோம்; மனம் வருந்தற்க" என்று திருவாய் மலர்ந்தருளினார். பின்பு பரமாசாரியர் தமது தொண்டர்கட்கெல்லாம் அதிபரான பிரேரகாசிரியரைப் பார்த்து "இந்த அன்பனை இப்பொழுது ஆட்கொள்ளல் வேண்டும்; ஆதலின் இதற்கு வேண்டிய கருமங்களை நீ விரைவிற் செய்குதி" என்று பணித்தருளினார். பரமாசாரியர் சொற்படி அப் பிரேரகாசிரியர் ஆங்குள்ள பூஞ்சோலையின் கண்ணே பட்டு வஸ்திரத்தினாலும் பூமாலையினாலும் ஒரு சிறந்த தீக்ஷா மண்டபத்தைச் செய்து அதன் மத்தியில் ஒரு சிறந்த ஆசனத்தையும் அமைத்துப் பரமாசாரியரிடம் மீண்டும் சென்று "சுவாமி, தீக்ஷா மண்டபம் சமைத்தாயது" என விண்ணப்பஞ்செய்தார்.

அன்றிரவு பதினைந்து நாழிகை யாதலும் பரமாசாரியர் "நமது அன்பனை அடிமைகொள்வதற்கு இதுவே வாய்த்தகாலம்" எனத் திருவுளத்திற்கொண்டு, அடியார் கூட்டத்தைவிட்டு நீங்கி மஞ்சனச் சாலையை யடைந்து ஸ்நானம் செய்து பீதாம்பரந் தரித்துத் தீக்ஷாமண்டபத்தின் கண்ணே சேர்ந்து, அங்கு வைக்கப்பட்ட ஆசனத்தின்மீது தெற்குத்திசையை நோக்கியிருந்தருளினார். வாதவூரரும் நீராடி வெண்ணிற வஸ்திரந் தரித்துப் பரமாசாரியருடைய சந்நிதியிற்போய் அவருடைய திருவடிகளை அபிஷேகஞ் செய்து அருச்சித்துப் பனிநீர் கலந்த சந்தனக்குழம்பைப் பரமாசாரியர் திருமேனி முழுவதுஞ் சாத்திச் செங்கழுநீர்ப் பூமாலையையுஞ் சாத்திப் பேரானந்தங்கொண்டு சிறிது நேரம் நின்றார். அதன்பின்னர் பருப்போடு தேங்காய்த் துருவலும் சருக்கரையும் கலந்து பாலிற் சமைக்கப்பெற்ற திருவமுதைப் பொற்றட்டில்

இட்டு நெய்யும் முக்கனியும் அதன் கண் விநியோகித்து "சுவாமி, இதனைத் திருவமுது செய்தருள வேண்டும்" என்று இரத்தலும். பரமாசாரியர் அங்ஙனஞ் செய்தருளினார். அதன் பின்னர் வெற்றிலை பாக்கு என்னுமிவைகளை நிவேதித்துச் சோடசோபசாரங்களைக் கொண்டு பூசித்துத் திருவாதவூரர் பரமாசாரியருடைய சந்நிதியில், தமது கையிலே ஒரு பூவை வைத்துக்கொண்டு இருந்தார்.

இங்ஙனம் விநயத்தோடு இருந்த திருவாதவூரடிகளைப் பரமாசாரியர் அன்போடு பார்த்து அவர் காதிலே ஸ்ரீ பஞ்சாக்கரத்தை முறைப்படி உபதேசித்தருளினார். உடனே திருவாதவூரடிகள் பிறவிப்பிணி நீங்கப் பெற்றாராய்ப் பரவசமடைந்து பரமாசாரியருடைய பாதங்களில் தமது சிரம் பொருந்தும்படி அடியற்ற மரம்போல வீழ்ந்து சாஷ்டாங்கமாக அவரை வணங்குதலும், பரமாசாரியர் அவருக்குத் திருவடி தீக்ஷை செய்தருளினார். திருவாதவூரடிகள் தமது தலையில் மிதிக்கப்பட்ட பரமாசாரியருடைய பாதங்களை இரு கைகளினாலும் சேர்த்துப் பற்றித் தம் கண்களிலும் இதயத்திலும் ஒற்றி மிக்க உவகையோடு எழுந்தார். அச் சமயத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் பூமாரி பொழிந்தனர். பூதரும் கணநாதரும் இறைவனைப் புகழ்ந்து பரவினர். முனிவர்கள் பணிந்தனர். திருவாதவூரடிகள் பரமாசாரியர் முன்னிலையில் நின்று,

"ஐயனே யெனை ஆண்டருள் புரியும்
 ஆதியே யுழையணி மழுவிருக்குங்
கையனே கோடுங்காலனை முனியுங்
 காலனேயிரு கண்ணினுண் மணியே
செய்யனே யடிபோற்றி என்பெரிய
 செல்வமே யடிபோற்றி பொய்யினர் தம்
பொய்யனே யடிபோற்றி எவ்வுயிர்க்கும்
 போதமே யடிபோற்றி" என்றழுதார்.

அன்று வைகறைக் காலமாதலும் வாதவூரடிகள் பரமாசாரியருடைய திருமேனியின் கண்ணுள்ள சந்தனம் மாலை என்னும் இவைகளைக் கழித்துத் துன்பத்தினின்றும் நீங்கியவராய் மற்றை யடியார்களோடு உடனிருந்து விளங்கினர். சூரியன் உதயஞ் செய்தலும், பரமாசாரியர் திருவாதவூரடிகளை வேறோரிடத்தில் இருத்தி ஞானோபதேசஞ் செய்வாராயினர்.

"செம்புள்ள ஞான்றே அதனோடு சகசித்த களிம்பைப்போல, இருண் மயமாகிய மலமானது, ஆன்மாவாகிய உன்னை அநாதியே சகசித்திருக்கும். ஆதலால் உன்னியல்பானது சார்ந்ததன்வண்ணமாய் நிற்கும் படிகம்போல, நீ சார்ந்துள்ள கருவிகளின் வண்ணமேயாய் நின்றது. அந்த மல வாசனையின் பற்றினாலேயே நீ பல உடம்புகளையெடுத்துப் பிறந்திறந்து சுவர்க்க மத்திய பாதல உலகங்களிற் சுழன்று திரிந்தாய்; அந்தப் புவனங்கள் தோறும் நீ முன் செய்து கொண்ட இருவினைப்பயன்களாகிய சுக துக்கங்களை அனுபவிக்க வேண்டிய வினைவிளைவின் கிரமந் தவறாமல் நாம் அளந்துதர நீ அனுபவித்தாய். அங்ஙனம் அனுபவிக்குமிடத்து யான் எனது என்னும் முனைப்பாகிய மலக்குற்றங்களினாலேபின்னரும்உடம்பெடுத்துஉறப்பவித்தற்கேதுவாகிய ஆகாமிய வினைவிளைவுகளையும் உன் கருத்துவகையாற் செய்து திரிந்தனை. செய்து கொண்டவர் தாமே அனுபவிக்கத் தகும் வினைப்பயன்களைக் கடவுள் இடையே நின்று கூட்டவேண்டுவதில்லை; அவரும் அவையும் தாமே கூடுதல் பெறப்படுமென்று சொல்லுகில், நீ முற்றறிவுடையையல்லை யாதலின், அவ் வினைப்பயன்களுள் இவ்வினை மேல்வரற்பாலது, அதற்கு இன்ன பயன் மேல் அனுபவிக்கற்பாலது என்று அறியமாட்டாய்; அந்த வினைப்பயன்கள் தாமாக வந்து உன்னைக் கூடாவோ வெனின், அவை அசேதனப் பொருள்கள் ஆதலின் அறியவும் கூடவும் மாட்டா; இங்ஙனமாதலின் முற்றறிவுடைய நாமேகடைத்தேறும் நன்னெறியை அறி

யாத உன்னையும் உன் வினைப்பயன்களையும் காலக்கிரமத்தோடு அறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைத்து நித்தியமாகிய நிரதிசய இன்பவாழ்வை உனக்குந் தருவோமென்று நீ அறிந்துகொள்வாயாக.

எல்லாருக்கும் ஒருங்குசேர இந்தமலத்தை நாம் நீக்காதிருத்தற்குக் காரணம் என்னவென்று கேட்பின், துன்பத்தோடு கூடிய சன்னபந்தத்திற்கு ஏதுவாகிய தமது இருவினைப் பயன்களும், தராசுக்கோலின் இருதட்டுகளிலும் இடப்பட்ட சம நிறையுடைய பொருள்போலத் தம்முள் ஒத்திருக்குமாயின், அப்படிப்பட்ட ஒப்புடைய பக்குவர்களுக்கு நமது திருவடி தீக்ஷை செய்து மலத்தை நீக்குவோம்: அந்த இருவினை யொப்பில்லா அபக்குவிகள் அதனை அடையும் வரை வருந்திப் பெரிய பிறவியாகிய துன்பத்தில் வீழ்வர். அப்படிப்பட்ட அவர் தாம் இருவினையொப்பு மலபரிபாகங்களைத் தம்பொருட்டு எதிர்நோக்கியிருக்கும் பதியாகிய நம்மையும். பிறத்தல் இறத்தல் என்னும் வேதனைகளைப் பட்டு உழலும் பசுக்களாகிய தம்மையும் விசாரிக்க மாட்டார். இந்த மல பரிபாகம் ஒருவர்க்கு எப்பொழுது பொருந்துமென்று கேட்பின், நாம்உறைந்திருக்குந் தலங்கள்தோறும்போய் நம்மைத் தரிசித்து வணங்கி நல்ல சிவ புண்ணியங்களைச் செய்யும் விசேஷத்தினலே இது வந்து கைகூடுமென அறிவாயாக.

[இருவினையொப்பாவது நல்வினையால் வரும் இன்பத்திலும், தீவினையால் வரும் துன்பத்திலும் முறையே விருப்பும் வெறுப்புமின்றிச் சமபுத்தி பண்ணுமியல்பாகும். ஓடும் பொன்னும் ஒப்ப நோக்குவது மிதுவே.]

இது நிற்க. பொன்னம்பலத்தின் கண்ணே பொருந்திய நமது தடத்த இலக்கணமாகிய பொதுவியல்பை உனக்குச் சொல்லுதும்; எமக்கு மூன்று வடிவங்கள் உள்ளன; அந்த மூன்றனுள் ஒரு வடிவம் அருவமாகும், மற்றொரு வடிவம் தேசோமயமாகிய அருபாருபமாகும்.

ஒழிந்த மற்றொன்றே அருண்மயமாகிய உருவமாகும். இந்த மூவகை வடிவங்களுள், பக்குவத்தையுடைய உனக்கு ஞானோபதேசஞ் செய்யும் பொருட்டுக் கொண்டிருக்கும் இக் குரு வடிவமே உருவமாகும். அரூபாரூபம் சகலரும் வந்து வணங்குதற்குரியதாகிய சிவலிங்க வடிவமாகும்; அருவமாவது அநாதி பந்தமாகிய ஆணவ மலத்தை நீக்கும் ஞானபானுவாய் ஆன்மாக்கள் தோறும் அந்தரான்மாவாய் ஆதி நடு ஈறு அற்றதாய் விளங்கும் நிர்மலமாகும். அன்புடனே பத்திர புட்பங்களுக்குரிய மரங்களை வைத்து வளர்த்தலும், அப் பத்திர புட்பங்களை விதிப்படி கொய்தலும், அவற்றைக் கொண்டு மாலை கட்டுதலும், எமது கீர்த்திப் பிரபாவமாகிய தோத்திரங்களைச் சொல்லுதலும், நாம் இருக்கும் ஆலயங்களைத் திருவலகிடுதலும், திருமெழுக்கிடுதலும், ஆலயங்களிலே திருவிளக்கேற்றுதலும், எமது அடியார்கட்குக் குற்றேவல் செய்தலுமாகிய சரியாபாதத்தை அநுட்டிப்போர்க்குச் சிவலோகத்திலிருத்தலாகிய சாலோக பதவியைக் கொடுப்போம்.

இனி, வாசனா திரவியங்களும், நறுமணங் கமழுந் தூபமும், திருமஞ்சனமும், பூக்களும், மற்றும் பூசோபகரணங்களுங் கொண்டு, மாயாகாரியமாகிய காமம் முதலிய துர்க்குணங்களுள் ஒன்றுமில்லாதவராய், பூதசுத்தி தான சுத்தி திரவிய சுத்தி மந்திர சுத்தி இலிங்க சுத்தி யென்னும் பஞ்ச சுத்திகளையுஞ் செய்து, அகப் பூசை புறப்பூசைகளையும் அக்கினி காரியத்தையும் முடித்து, திருவருளை முன்னிட்டு மேலான நன்மையுடைய கிரியா பாதத்தை யனுட்டிக்கத் தக்கவர் எமது சமீபத்தில் இருத்தலாகிய சாமீப பதவியை யடைவர்.

இனி, சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களையும், சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய ஐம் புலன்களோடு சேர அடக்கி, மூலாதாரத்தினின்றும் பிராண வாயுவை மேலெழுப்புகின்ற இடை பிங்கலையாகிய இரு நாடிகளையுஞ் செவ்வனே யடைத்து

சுழுமுனையாகிய நாடியைத் திறந்து தியானத்தானமாகிய புருவ மத்தியிற் சூக்கும வகையாற் செய்யப்படும் அருவரத தாண்டவச் சிலம்பொலியோடு போய் ஸ்ரீ பஞ்சாக்கரங்களும் ஏகாக்ஷரமாந் தன்மையை ஞானக்கண்ணினாலே தரிசித்து, திருவருள் சுரக்கும் பரமவெளியின்கட் புகுந்து லயித்த சிவயோகிகள், இப்பூமியின்கண் வேட்டுவன் என்னுஞ் செந்துவினால் எடுக்கப்பட்ட புழு பின்னர் அந்த வேட்டுவனுடைய வடிவத்தைப் பெறுதல் போல, எமது உருவைப் பெறுதலாகிய சாரூபத்தைப் பெறுவர். மேலும் பல கலைகளையும் ஆகமங்களையும் சமய நூல்களையும் ஓதியுணர்ந்து, அந்நூல்களிற் பிரதிபாதிக்கப்பட்ட பதி பசு பாசமென்னும் திரிபதார்த்த லக்ஷணமே முக்கியமான பொருளென்று நிச்சயித்து, முன்செய்து போந்த சிற்றறிவு சிறு தொழில்கள் அனைத்தும் பயனில்லாதனவெனக் கண்டு கழித்து, முன்னர் அச்சிற்றறிவின் விரிவைப் போலப் பின்னர்ச் சிவஞானம் விரிந்து தோன்றப்பெறும் மனத்தினையுடைய சாதுரியர்களாகிய சிவஞானிகளே பதமுத்தி மூன்றுக்கும் மேலாகிய சாயுச்சியமெனப்படும் எமது சத்திய முத்தியைத் தலைப்படுவர்.

சரீரக்குற்றமுடையவர், தாழ்ந்தவருணத்தவர், நல்லொழுக்க மில்லாதவர், நம்மிடத்திற் பத்தியில்லாதவர் என்னும் இவர்களாக விருந்தாலும், அவர்களுடைய சரீரத்திலே விபூதி முதலிய சிவ சின்னங்களைக் கண்டால், சிறிதும் தாமதஞ் செய்யாது அவர்கட்கு முன் சென்று அவர்களை வணங்கி உபசரித்துத் திருவமுது அருத்தி அவர்களுடைய குறிப்பறிந்து குற்றேவல் செய்பவர்களே 'யான்' 'எனது' என்னும் அகங்காரமமகாரங்களை நீக்கிய மெய்யடியாராவர்.

அன்பனே, புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே பரந்து கிடந்த நின் சஞ்சித கன்மமெல்லாம் நாம் நயன தீக்ஷை செய்யவே ஞானக்கினியிலே தகிக்கப்பட்டொழிந்தன. இப்பிறப்பில் நீ முகந்து கொண்ட பிரா

ரத்த கன்மம் இவ்வுடம்பு நீங்கும்போது அதனோடு அனு பவிக்கப்பட்டு நீங்கும்; உன் மனத்திற் படிந்துள்ள நம் திருவருளானது இனிமேல் ஆகாமிய கன்மங்கள் ஏற வொட்டாது தடுத்துவிடும்; உடல்பொருள் ஆவியென்னும் இம்மூன்றும் இனிமேல் நம்முடையவல்லாமல் உன் னுடையவல்ல; இங்கே உன்னைப்போல மானுடச்சட்டை சாத்தியெழுந்தருளி வந்திருக்கின்ற நம் குருவடிவத்தை மனசிற்பதிப்பாய்; இதுவே ஆகமங்கள்வாயிலாக அறிந்து கொள்ளற்குரிய சித்தாந்தப் பொருளாகும்;" என்று பரமாசாரியர் வாதவூரடிகளுக்கு வாசிக தீக்ஷை செய் தருளினர்.

இந்தப் பிரகாரம் பரமாசாரியர் செய்தருளிய உப தேசத்தைக் கேட்ட மாணிக்கவாசக சுவாமிகள் எல்லை யற்ற மகிழ்ச்சியுடையவராய்த் தம் பிறவித் துன்பத்தை நீக்கியருளிய பரமாசாரியருடைய பாதங்களிற் சிரசு தோ யச் சந்நிதியிலே சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கியெழு ந்துநின்று "பிரபஞ்சப் பிராந்தியை உடையேனாகிய தமி யேன் பொருட்டுத் திருவுளமிரங்கியருளுஞ் சுவாமீ! அஞ் ஞானத்தால் மூடுண்டு கிடந்த தமியேன் மல முத்தனாகும் படி சித்தாந்த நெறியைச் சந்தேக விபரீதம் நீங்கப் புலப் படுத்தியருளினீர்" என்று விண்ணப்பஞ் செய்து, தமது கரங்களைச் சிரசின்மீது வைத்துக் கூப்பி வணங்கினர்.

திருவாதவூரடிகள் பின்னரும் பரமாசாரியரைப் பணிந்து "கருணாநிதியே, இதுகாறுந்தமியேன் என்னுடை யனவென மதித்திருந்த பொருளும், யானல்லாத இந்தச் சரீரமும், ஆன்மாவாகியயானும் இப்பொழுதுதேவரீருடை யனவென்ற உண்மையைத் திருவருள்வாயிலாகவுணர்ந்து தேவரீருக்கே சமர்ப்பித்தேன்" என விண்ணப்பஞ் செய்து. தாம் தரித்திருந்த ஆடைஆபரணங்களையும், அரி மர்த்தன பாண்டியன் குதிரை கொள்ளும்படி கொடுத்த திரவியத்தையும் குருசந்நிதியில் தக்கிணையாக வைத்து நின்றார். அவர் செயலைக்கண்ட தருமமூர்த்தியாகிய பர

மாசாரியர் தமது தொண்டர்களுள் மேன்மை பொருந்திய வராகிய பிரேரகாசிரியரைப் பார்த்து "இந்தப் பொருள் களை யெல்லாந் திருப்பணிக்கும் தவப்பேற்றையுடைய வர்களாகிய சற்பாத்திரர்கட்கும், பரம ஏழைகட்குங் கொடுங்கள்" என்று பணித்தருளினர். தங்கள் பரமா சாரியருடைய திருவாக்கின்படி அடியவர் அத்திரவியத் தைத் தானஞ் செய்தனர்.

நால்வகைச் சேனைகளும் தம்மைச் சூழ, வெண்குடை நிழற்றப் பொற்சிவிகை மீது சிறிது முன்னர் அரசனுக் குரிய சகலவரிசைகளோடும் வந்த தென்னவன்பிரமராய னென்னும் முதன் மந்திரியார், இப்பொழுது தமது திரு மேனி மறையப் பூசிய விபூதியும், கௌபீன உடையும், மயிர் விரிக்கப்பெற்ற சிரமும், ஆனந்த பாஷ்பம் இடை யறாது பொழியும் விழிகளுமுடையராய்ச் சீவன்முத்தநிலை யிற் காணப்பட்டார். அவர் தம்முடைய பரமாசாரி யரை மிக்க அன்போடு கண்ணாரத் தரிசித்து நிற்பர்; அழு வர்; கைதொழுவர்; அடியற்ற மரம்போலக் குரு முன்னி லையில் வீழ்ந்து கிடப்பர்; பின் எழுந்து நிற்பர்; பரமாசாரி யரின் பின்புறத்தே செல்வர்; பிரிவாற்றாது பரிவுற்று மீண்டு வருவார். இங்ஙனம் இராப்பகலை யுணராராய்ச் சிவஞானத்தையே தெளிந்தவராய்ப் பித்தர் போலவும், பாலர் போலவும், பைசாசத்தின்கட் பட்டார் போலவும் தம்வசமிழந்து பரவசப்பட்டு நின்றார்.

இந்த நிலைமையிலே திருவாதவூரடிகள் நிற்ப, அவரு டன் வந்தவர்களாகிய சேனா வீரரும் பிறரும் அவர் சமீ பத்திற் சென்று அவரது கோலத்தைக் கண்டு, ஆச்சரிய முடையவர்களாய் அவரை நோக்கி, "மந்திரியாரே!எங்கள் அரசன் கோபிக்காதபடி நாம் குதிரைகளை விரைவாகக் கொண்டு செல்ல வேண்டும்; ஆதலாற் குதிரை வாங்குவ தற்கு வருதிர்" என்று பணிவோடு சொல்லுதலும், திரு வாதவூரடிகள் அவர்களை நோக்கி, "அறியாமையின்பாற் பட்ட நீவிர் யாவீர்? உமக்கும் எமக்கும் யாதுந் தொடர்

பில்லை; மாயாகாரியமாகிய பொய்களையெல்லாம் எம்முன் நீவிர் சொல்லாது அப்பாற் போய்விடுங்கள்" என்று கடிந்து கூறினர். வாதவூரடிகள் கூறிய வார்த்தையைக் கேட்ட சேனைத்தலைவரும் பிறரும் கவலையடைந்து "இவர் யாது கூறுகின்றார்; எங்கள் அரசன் இவரைத் தண்டிக்கப்போகின்றானே; இவர் நாம் சொல்லும் வார்த்தையைப் பொருட்படுத்துகின்றாரில்லையே; இனி என்செய்வோம்! எங்களரசனுக்கு உண்மையைக் கூறிவிடுவோம்." என்று சொல்லிக்கொண்டு மதுராபுரிக்கு மீண்டனர்.

மீண்டவர்களாகிய சேனைவீரரும் பிறரும் அரிமர்த்தன பாண்டியன் முன்னர்ச் சென்று அவனை வணங்கி "மகாராசாவே, உமது முதன் மந்திரியார் செய்த செயலை நாம் எப்படிச் சொல்லுவோம்; அவர் எங்களுடன் கூடிக்கொண்டு திருப்பெருந்துறை வரையிற் சென்றார்; அந்தத் திருப்பெருந்துறையிலுள்ள ஒரு பெரிய பூஞ்சோலை மத்தியில் குருந்தமர நிழலிலே பல அடியவர்கள் சூழ ஒரு தபோதனர் இருப்பக்கண்டு, நமது முதன் மந்திரியார் அங்கே போனார்; போய் அந்தத்தபோதனருடன் ஏதோ இரகசியமாய்ப் பேசினார்; இருவருங் கலந்து பேசியபின் முதன் மந்திரியார் சங்கரா! சிவனே? யென்று சொல்லி அத் தபோதனருடைய கால்களில் வீழ்ந்து வணங்கியெழுந்து, தாம் அணிந்திருந்த ஆடையாபரணங்களையெல்லாம் கழற்றி அந்தத்தபோதனர் முன்பு வைத்தார். அவ்வளவிலமையாது குதிரை வாங்கி வரும்படி நீர் கொடுத்த திரவியத்தையும் அவருக்குக்கொடுத்து விட்டுக் கௌபீனதாரியாய்த் தேகம் முழுவதும் திரு நீற்றைப் பூசிக்கொண்டு அழுத கண்ணும் சிந்திய மூக்கும் தலைவிரி கோலமுமாய் நிற்கின்றார்; இப்படிச் செய்வது சரியல்ல, நீர் குதிரை கொள்ளும்படி எங்களோடு வருதல் வேண்டும் என்று நாங்கள் பலமுறை இரந்து கேட்டபோது, உமக்கும் எமக்கும் என்ன சம்பந்தம்? எம்முன் நில்லாது அப்பாற் போய்விடுங்கள், என்று எங்களைச் சினந்தார்; நாங்கள் செய்வது இன்னதென்றறியாது மீண்டு இங்கே வந்தோம்;

இதுதான் நடந்த செய்தி, மகாராசாவே" என்று அதி விநயத்தோடு கூறினர்கள்.

இங்ஙனஞ் சேனைத் தலைவர் கூறிய வார்த்தையைப் பாண்டியராசன் கேட்டமாத்திரத்தே கண்களினின்றும் நெருப்பெழக் கோபித்து நிந்தகாசஞ் செய்து "இந்தப் பிரமராயன் போன்ற மந்திரிகள் இருப்பரேல் நமது இராச்சியத்துக்கு யாதுகுற்ற வரப்போகிறது" என்று கூறி, உடனே ஒரு கடிதத்தை வரைந்து ஏவலாளரை நோக்கி "குதிரை கொள்ளும்படி யான் கொடுத்த திரவியத்தை அங்ஙனஞ் செய்யாது துர்விநியோகஞ் செய்த முதன் மந்திரியிடங் கொடுத்து, இக்கடிதங் கண்ட வுடனே வரும்படி தெரிவியுங்கள்" என்று சொல்லித் தான் எழுதிய கடிதத்தையும் அவர்களிடங் கொடுத்தான். தூதுவர்கள் விரைவிற் சென்று திருப்பெருந்துறையை யடைந்து திருவாதவூரடிகளைக் கண்டு வணங்கி, அரி மர்த்தன பாண்டியன் விடுத்த பாசுரத்தைக் காட்டினர். வாதவூரடிகள் அப்பாசுரத்தைப் பார்க்க விரும்பாதவ ராய், அயலே நின்ற ஒருவனைப் படிக்கும்படி பணிக்க, அவன் பின்வருமாறு படிப்பானாயினன்:

"தென்னவ னெழுது மோலை
தென்னவன் பிரம ராயன்
என்னுநம் அமைச்சர் காண்க
எல்லையில் தனங்கொண் டேகிக்
கொன்னுறு பரிகொ ளாமற்
கோவணங் கொண்டி ரீது
மன்னர்தங் கருமஞ் செய்வார்
வண்மையென் றுவகை யுற்றேம்."

"மேலும் இராச்சியத்திற்குரிய அதிகாரத்தைப் பெற்று வாழ்தலைக் காட்டிலும் வீட்டுக்கு வீடு திரிந்து பிச்சையெடுத்து வயிறு வளர்ப்பது உசிதமாகுமென் பதையும், அல்லாமலும் தம்மைப் பரிபாலித்த அரச

னுக்குத் துரோகஞ் செய்து தவநெறியைக் கைக்கொள் வது முறையாகுமென்பதையும் இப்பொழுது உம்மிடத் திற்றான் கண்டேம்; அரசனையண்டி வாழுதல் கொடிய நாகபாம்போடு கூடிவாழுதற்கு ஒப்பாகுமென்ற உண் மையை நீர் அறிந்திருப்பீராயின், யாம் அனுப்பிய தூதுவர்களுடன் கூடிக்கொண்டு விரைவில் எம்மிடம் வருதல் வேண்டும். இங்ஙனம் அரியர்த்தன பாண்டி யன்'' என்று கரணன் கடிதத்தை வாசித்து நின்றான்.

பாண்டியன் எழுதிய பாசுரத்தைப் படிக்கக்கேட்ட வாதவூரடிகள் ''அந்தச் சிவபிரானொருவரே நமக்குத் தலைவராக விருப்ப, தான் எனக்குத் தலைவனென்றும் தனக்கு நான் பிழை செய்தேனென்றும் இப்பாண்டிய ராசன் நினைத்தமை தவறாகும்; யமன் விடுக்கும் காலமுடிவைக் காட்டும் ஓலையை எங்களிறையவர் திரு வருட்டிறத்திற்குப் பயந்து காலதூதர்தாமும் ஒருபோதும் எம்முன் கொண்டுவரத் துணியமாட்டார்; சிவபிரானு ருடைய அடியேங்கள் அஞ்ச வருவது யாதுமில்லையாம்'' என்று மனத்தில் நிச்சயித்துக் கொண்டு பரமாசாரியர் எழுந்தருளியிருக்கும் இடத்திற்குச் சென்றார். சென்ற மாணிக்கவாசகசுவாமிகள், பரமாசாரியரைப் பணிந்து, அரசன் தமக்கு நிருபம் விடுத்த செய்தியை விண் ணப்பஞ் செய்தார்.

திருவாதவூரடிகள் செய்த விண்ணப்பத்தைக் கேட்ட டருளிய பரமாசாரியர் திருப்புன்முறுவல்செய்து, ''அன் பனே, அறிவிலாதவர் போல் நீ வருந்தற்க; இந்த உலகம் மதிக்கத்தக்க சிறந்த குதிரைகளை நாமே கொண்டு சென்று பாண்டியனுக்குக் கொடுத்து மீள் வோம்; நீ இப்பொழுது அரசனிடஞ் சென்று, உனது கடிதத்தைக்கண்டு முந்திவந்தேன்; குதிரைகள் ஆவணி மாசத்து மூல நக்ஷத்திரத்தன்று வரும் என்று அவ னுக்குச் சொல்லுதி; பாண்டியராசன் உன்னைத் தண்டிப்பானோயென்று மனசிலே சிறிதுங் கவலை கொள்ளேல்'' எனத் திருவாய் மலர்ந்து, தமது அருமைத்

திருக்கரத்தினால் மாணிக்கவாசகரது நெற்றியில் விபூதி சாத்தி, ஆடையாபரணங்களையுங் கொடுத்து, அரசன் மகிழும்படி மந்திரிக்கோலம் புனைவித்தார். அதன் பின்னர் விலைமதித்தற்கரிய ஒரு மாணிக்கத்தைப் பரமாசாரியர் வாதவூரடிகள் கையிற்கொடுத்து "இதனை அரசனுக்குக் கையுறையாகக் கொடுப்பாயாக" என்று கூறியருளினார்.

இறையவர் கொடுத்தருளிய விலைமதித்தற்கரிய மாணிக்கமணியைப் பெற்ற திருவாதவூரடிகள் இளங் கன்றை விட்டுப்பிரிய நேர்ந்த தலையீற்றுப் பசுவைப் போல மனம் நெக்குநெக்குருக, கண்களினின்றும் நீர் அருவிபோற் பெருக, இடையிடையே நின்று வணங்கி "சுவாமி, தமியேனைக் கைவிடுகின்றீரோ" என்று மனங் கலங்கிக் கொண்டு பரமாசாரியரிடம் அனுமதி பெற்று அவரை அரிதிற் பிரிந்து தனிவழிக்கு உறு துணையாகவுள்ள ஸ்ரீபஞ்சாக்கரத்தைச் செபித்தபடியே அரசனுடைய தூதுவருடன் மதுரைமாநகரைச் சேர்ந் தார். மாணிக்கவாசக சுவாமிகள் அரிமர்த்தன பாண் டியன் முன்னர்ச் சென்று மனமிலா வணக்கஞ் செய்து பரமாசாரியர் கொடுத்தருளிய மாணிக்க மணியை அரசனிடங் கொடுத்தார். ஏற்ற அவ்வரசன் அந்த மாணிக்கமணியை மிக்க ஆச்சரியத்துடன் பலமுறை பார்த்து அதிக உவகை உடையவனாய் மாணிக்க வாசகரை நோக்கி, "நீர் குதிரை வாங்கும்படி இம் மதுரை மாநகரை விட்டு நீங்கியபின் செய்ததென்ன சொல்லுதிர்" என்று கேட்டான்.

"அரசனே, நீ குதிரை கொள்ளும்படி தந்த பணத் தைப் பெற்றுச் சென்று இலக்கணக்குறைவு யாது மில்லாத பரிகளை விலைக்கு வாங்கியபின், அப்பரிகளை மதுரைமாநகருக்குக் கொண்டு வருதற்காகிய சுப தினத்தை விசாரித்தபோது, சோதிடர் ஆவணிமாசத்தில் நிகழும் மூலநக்ஷத்திர தினமே வாய்த்த முகூர்த்தமாகு

மென்று சொல்லக்கேட்டு, அக்காலே எதிர் பார்த்துக் கொண்டு திருப்பெருந்துறை என்னுமூரில் இருந்தேன்; இதற்கிடையில் என்னுடன் வந்த உனது சேனுவீரர்கள், இங்கே விரைவில் மீண்டு வரவேண்டுமென்ற ஆசையால், முந்தி வந்து என் விஷயமாகப் பெரும்பொய் சொல்ல, நீ அதனை மெய்யென்று நம்பிக் கோபங் கொண்டு கடிதம் விடுக்க, அதனுல் இப்பொழுது வந்தேன்; சொன்ன பிரகாரம் ஆவணி மூலதினத்தன்று குதிரைகள் இங்கேவரும்" என்று திருவாதவூரடிகள் கூறினர்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட அரசன் "மந்திரியாரே, உமக்கும் எனக்கும் பரஸ்பரம் உள்ளதாகிய நட்பைப் பேதிக்க நினைத்துச் சேனுவீரர் சொன்ன சொல்லை மெய்யென நம்பிக் கடிந்து கடிதம் விடுத்தேன். அதனைப் பொறுத்துக் கொள்க" என்று தொன்மை பாராட்டி ஆடையாபரணங்களை ஈந்து இராச்சிய விஷயமாகச் சில சொல்லி மாளிகைக்குச் செல்லும்படி அநுமதிசெய்தான். திருவாதவூரடிகளும் அரசனுடைய அநுமதியைப் பெற்றுக்கொண்டு தமது மாளிகையை அடைந்தார்.

இங்ஙனம் திருவாதவூரடிகள் தம்முடைய மாளிகையிலிருக்கும்போது, அவர் குதிரைகள் வரும் என்ற தவணைக்கு இருதினங்களிருப்ப, ஒரு தினம் அரிமர்த்தன பாண்டியன் தனியே இருக்குஞ் சமயம் பார்த்து மந்திரிகளுள் ஒருவன் அரசனிடம் சென்று அவனை வணங்கி "மகாராசாவே, தமியேன் உமக்குச் சொல்வதொன்றுண்டு; உமது முதன் மந்திரியாகிய தென்னவன் பிரமராயன், என்பவர் குதிரை கொள்ளும்படி நீர்கொடுத்த திரவியத்தைப் பெற்றுச் சென்று திருப்பெருந்துறையிலிருந்த சிவனடியார் கையிற் கொடுத்தது உண்மை; நீர் விடுத்த கடிதத்திற்குப் பயந்து இங்கே மீண்டுவந்து, முதன்மந்திரியார் உமது கோபமாறும்படி குதிரை வருமெனப் பெரும்பொய்

சொல்லினர். இவைகள்தாம் நடந்த சமாசாரம்" என்று சொன்னான்.

மந்திரி சொன்ன மாற்றத்தைக் கேட்ட மன்னவன் உண்மையை அறியக் கருதித் தன்னுடைய தூதுவரை விளித்து "நீவிர் விரைவாகத் திருப்பெருந்துறைக்குச் சென்று, அங்கே எமக்கெனக் கொள்ளப்பட்ட குதிரைகள் உண்டோ என்பதை அறிந்து வருதிர்" என்று ஆஞ்ஞாபித்தான். தூதர்கள் உடனே புறப்பட்டுத் திருப்பெருந்துறைக்குப் போய் அங்குக் குதிரைகள் உண்டோவென எங்குந்தேடிக் காணாது மீண்டுவந்து அரசனை வணங்கி "மகாராசாவே, பெருந்துறையிலும் அயலிலுள்ள ஊர்களிலும் குதிரைகள் உண்டோவென்று தேடிப்பார்த்தும் கண்டிலேம்" எனப் பணிவுடன் சொன்னார்கள். தூதுவர்கள் சொன்ன வார்த்தையைக் கேட்டமாத்திரத்தே பாண்டியன் அடங்காச் சீற்றங் கொண்டு, தன்னுடைய தண்டலாளரை விளித்து "எனது முதன் மந்திரியென்றிருந்து எனக்குப் பெரும் இடர் செய்வானைப் பெரிதும் தண்டித்து நான் குதிரை கொள்ளும்படி, கொடுத்த திரவியம் முழுவதையும் அறவிடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

தண்டலாளர்உடனே திருவாதவூரடிகளிடஞ்சென்று "நமது அரசன் குதிரைகொள்ளும்வண்ணம் தந்தபொருளையெல்லாம் உம்மிடத்தில் அறவிடும்படி நமக்குக் கட்டளையிட்டான்; அரசன் அப்படிச் சொன்னதற்குக் காரணம் யாதெனில், அரசன் அனுப்பிய தூதர்கள் திருப்பெருந்துறைக்குப்போய்ப் பார்த்தபோது அங்கே குதிரைகள் கொள்ளப்படவில்லையென மீண்டுவந்து கூறினதேயாம்; இதனால் அரசனும் உம்மீது இதுகாறும் பாராட்டிவந்த அன்புநீங்கவெறுப்படைந்தான்; இனிமேல்உம்மைமுதன் மந்திரியாக வைத்துக்கொள்ளவும் மாட்டான்; ஆனமையினால் நீர் காலதாமதமின்றி இப்பொழுதே பணம் முழுவதையும் தருதல்வேண்டும்" என்று கூறினர்.

திருவாதவூரடிகள் பதில் யாதும் சொல்லாது மௌனமாயிருந்தார். உடனே தண்டலாளர் திருவாதவூரடிகளுடைய மந்திரிக் கோலத்தை நீக்கி அவரைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோயினர். அச்சமையத்திலே சூரியனும் அஸ்தமித்தான்.

வைகறையாதலும், அரசன் துயில்நீத்தெழுந்து காலைக்கடன் முடித்து, சிறந்த ஆடையாபரணந் தரித்தவனாய், தனது மாளிகையின் அத்தாணிமண்டப முற்புறத்து வீற்றிருந்தான்; அதன்பின் தண்டத்தலைவர்கள் மாணிக்கவாசகசுவாமிகளை வெயிலின்கண்ணே நிற்கச் செய்து நெற்றியிலுங் கரங்களிலுங் கல்லை வைத்து, குதிரை கொள்ளும்படி அரசன் கொடுத்த திரவியத்தைத் தரல் வேண்டுமென்று வருத்தினார்கள். அப்பொழுது திருவாதவூரடிகள் தம்மைத் திருப்பெருந்துறையில் அடிமைகொணடருளிய பரமாசாரியருடைய திருவடிகளைத் தியானித்து,

"சுவாமீ, தமியேன் படும்பாட்டைத் தேவரீர் திருவுள்ளத்திற் கொள்ளவில்லையோ! நாம் குதிரை கொண்டு வருவோம், அன்பனே, நீ அஞ்சாமற்போகுதி யென்ற திருவாக்கு இப்பொழுது திருவுளத்தில் ஞாபகமாகவில்லையோ"

"ஊனுடம் புடைய வாழ்க்கை யொழித்துனக் கடிமையென்று
மாநிலம் புகலா நிற்ப வந்துனை யடைந்தேன் றன்னை
மீனவன் றன்பான் மீள விடுத்தனை வேலை நீருள்
ஆனபி னங்நீ ராற்று நீரென வாவதுண்டோ"

"அறத்தனிச் செல்வி பாக வன்பிலே நின்பா லென்று
வெறுத்திடி னடியேற் கிங்கு வேறொரு துணையு மில்லை
செறுத்தவர் புரங்க ளெல்லாஞ் செற்றவ ரடியான் றன்னை
நிறுத்தினர் வெயிலி னென்றால் நின்புகழ்க் கேற்ற மாமோ"

"வானநா டவர்க்கு மோலோய் வந்துனக் கடிமை யிப்போ
தானநா னிடும்பை யுற்றால் ஆருனக் கடிமை யாவார்
நானென மனத்தார் சொல்லு நல்லுரை யன்றி நின்ற
ஈனன மொருவன் சொல்வ தேறுமோ உளத்தில்" என்றார்.

## குதிரையிட்டமை.

திருவாதவூரடிகள் வருந்துகின்றமை தமது திருவுளத்திற் படுதலும், அடியார்க் கெளியராகிய சோமசுந்தரப்பெருமானனவர் வாதவூரடிகளுடைய துன்பத்தை நீக்குதற்குத் திருவுளங் கொண்டார்; காட்டிலுள்ள நரிகளெல்லாம் பரிகளாகும்படியும், தேவர்களே குதிரைராவுத்தராகும் படியும் நமது இறையவர் திருவிளையாடல் செய்தருளினர். நரிகள் குதிரைகளாகவும், தேவர்கள் பரி வீரராகவும் வந்த மாத்திரத்தே, சோமசுந்தரப் பெருமானர் வேதமாகிய வெண்பரியின்மேல், தாமே குதிரைவர்த்தகராகத் திருக்கோலங்கொண்டு எழுந்தருளினர். குதிரைவீரர்கள் சவுக்கைக் கையிற் கொண்டவர்களாய் இருமருங்கும் முன்னும் பின்னும் பரிகளில் ஏறிவர, கொம்பு, உடுக்கை முதலிய வாத்தியங்கள் ஒலிப்ப, இறைவர் வேதமாம் வெண்பரிமீது அவர்கள் மத்தியிற்சென்று மதுராபுரியை அடைந்தார்.

மதுரை வீதியின்கண்ணே நின்றவர்கள் சிலர் குதிரைகளைக் கண்டமாத்திரத்தே ஓடிச்சென்று அரிமர்த்தன பாண்டியனை வணங்கி "மகாராசாவே, ஆரியதேசத்துக் குதிரைகள் இந்த மதுராபுரியின் எல்லையின் கண்ணே வருகின்றன" என்று சொன்னர்கள்.

அதுகேட்ட பாண்டியராசன் மிக்க மகிழ்ச்சியுடையவனாய்த் திருவாதவூரடிகளை அன்போடு வருவித்து மந்திரிக்கோலம் புனைவித்து, அழைத்துக்கொண்டு சிவிகைமீதுஏறி, அரசவரிசைகள் பொருந்தப் புறப்பட்டுச் சென்று வையாளி வீதியின் கண்ணே இடப்பட்டதாகிய முத்துப்பந்தரின் கீழ் வீற்றிருந்தான்.

சைவசமயம் தழைத்தோங்க, விபூதியும் பஞ்சாக்கரமும் மேலும் மேலும் விளங்க, ஆவணிமாசத்து மூலநக்ஷத்திர தினமே சோமசுந்தரப்பெருமானர் குதிரை கொண்டுவந்தருளிய தினமாம். குதிரைகளின் சிறப்பைக்

கண்ட அரிமர்த்தன பாண்டியன் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லையாகும். பரிவீரர்கள் அரசன் பார்க்கும்படி தங்கள் குதிரைகளை நாட்டியஞ் செய்வித்தனர். திருவாதவூரடிகள் பரிவீரர்கட்கெல்லாந் தலைவராக எழுந்தருளிய சோமசுந்தரப் பெருமானுடைய திருக்கோலத்தைக்கண்டு அகத்தேவணங்கி யற்புதமெய்தி நின்றார். பாண்டியன் வாதவூரடிகளைப் பார்த்து "மந்திரியாரே, இந்தப் பரிவீரர்களை ஒரு வீதியிற் குதிரையேற்றம் செய்யும்படி சொல்லுதிர்" எனலும், வாதவூரடிகள் "இம் மன்னவனுடைய அறியாமை இருந்தபடி யென்னை" யெனத் தம்மனத்தில்நினைத்துக் கொண்டு சோமசுந்தரப் பெருமானுடைய சந்நிதியிற் சென்று, கண்களில் நீர் ததும்பநின்று, "பிரம விஷ்ணுக்களால் அன்றுமுதல் இன்றுவரை முடியும் அடியுந் தேடிக் காண்டற்கரியராய் நின்றருளுஞ் சுவாமீ, வேதமாகிய வெண்பரியின்மீது தேவரீருடைய திருக்கோலத்தைத் தரிசித்தல் முடியுமேயன்றித் தேவரீர் அருவத் திருமேனி கொள்ளின் அதனை யார் தரிசிக்கவல்லார்" என்று இந்தப் பிரகாரம் உபசாரவார்த்தைகள் கூறி அதன்பின் அரிமர்த்தன பாண்டியனுடைய வேண்டுகோளையும் விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமான் அதற்குத் திருவுளஞ் சம்மதித்தார்.

அரசன் குதிரைவணிகர் தலைவரைமெச்சி,விலைமதித்தற்கரிய ஒரு பீதாம்பரத்தை அவருக்குச் சன்மானமாக நீட்ட, பரமபதி அதனைத் தமதுதிருக்கரத்துள்ள குதிரைச் செண்டில் ஏற்றுக்கொண்டு புன்முறுவல் செய்தருளினர். இதனைப்பார்த்த பாண்டியன் "இக்குதிரைவணிகன்யான் கொடுத்த பட்டுவஸ்திரத்தை வணக்கத்தோடுவந்து இரு கைகளினால் வாங்கினனல்லன்; தன் சிரசிலே தரித்தானுமல்லன்" என்று நினைத்துச் சிறிது கோபங் கொண்டான். அரிபிரமேந்திராதி தேவர்கட்கு அதீதராகிய பரம்பொருள் வேதமாகிய வெண்பரியின்மீது எழுந்தருளிவந்து தன்முன்னர் நிற்பவும், இப்பாண்டியன்

அஞ்ஞானத்தின்பாற் பட்டவனுதலின், அப்பெரு மானுரை உள்ளபடி உணர்ந்து தரிசிக்கப்பெற்றிலன். அவனருளாலன்றி அவனை வணங்க யாரால் முடியும்! அரசனுடைய கோபக்குறிப்பை உணர்ந்த திருவாதவூரடிகள் "மகாராசாவே! தங்களுக்குக் கொடுக்கப்படுஞ் சன்மானத்தைச் செண்டினுல் ஏற்றல் இவர்களுடைய தேசாசாரமாகும்" என்று சமாதானஞ் சொல்லி அவனுடைய கோபத்தை யாற்றினர்.

அதன்பின்னர்ப் பாண்டியராசன் அசுவநூலுணர்ந்தவர்களை நோக்கி "நீவிர் இப்பரிகளின் அங்க இலக்கணங்களை ஆராய்ந்து உள்ள குறைவு நிறைவுகளைச் சொல்லுங்கள்" என்று பணித்தான். அசுவநூல் வல்லுநர் நன்கு ஆராய்ச்சிசெய்து அரசனிடம் மீண்டுவந்து "மகாராசாவே, இப்பரிகளெல்லாம் நல்லிலக்கணத்தோடு கூடியவைகளாகும்; நீர் இவைகளின் பொருட்டுக் கொடுத்த விலையிலும்பார்க்க அதிகவிலை மதிக்கத்தக்கன" என்றுசொல்லிப் போனுர்கள். அதன் பின்னர் அரசனுடைய ஏவலர் கயிறுமாறிக் குதிரைகளைக் கொண்டுபோய்ப் பந்தியிற் சேர்த்தனர். அரசன் திருவாதவூரடிகளைப் பார்த்து "உம்மால் எனக்குச் சிறந்த குதிரைகள் கிடைத்தன" என்று உபசார வார்த்தை கூறி அவருக்கு விடைகொடுத்துத் தானும் பரிவாரங்கள் புடைசூழத் தன் மாளிகையை அடைந்தான்.

அன்று இராக்காலமாதலும் சோமசுந்தரப்பெருமானுருடைய திருவிளையாட்டினுல், அங்குவந்த குதிரைகளெல்லாம் குறு நரிகளாகி மிக்க ஒலியோடு கூவி அந்நகரின்கண்ணுள்ள சனங்களின் நித்திரையைப் பங்கஞ்செய்யலாயின. அந்நரிகள் அங்குநின்ற குதிரைப் பந்திக் காவலாளர்மீது சென்று தாக்கி, முந்திநின்ற குதிரைகளையும் கொன்றெழித்தன. பட்டினம் முழுவதும் நரிகள் கூக்குரலிட்டுக்கொண்டு பரந்து சென்றன.

மதுரைமாநகரவாசிகள் சிலர் நரிகட்குப்பயந்து ஓடி ஒளித்தனர். அரிமர்த்தன பாண்டியனுடைய சேனு வீரர்கள் ஆயுதங்களைப்பிடித்தவர்களாய் அக்குறுநரிக ளோடு போர்செய்தார்கள்; பலர் பெருஞ்சத்தமிட்டு நரி களைத் துரத்த முயன்றனர். பற்பலர் தங்கள் அரிய உயிரைக் காக்கும்வண்ணம் தெய்வத்தை வணங்கினர்; இன்னும்பலர் நரிகட்குப்பயந்து மாடமாளிகைகள் மீதும் செய்குன்றுகள் மீதும் நெடிய மதில்கள் மீதும் ஏறி நின்றனர். நரிகள்செய்த சத்தமும் அந்நரிகளாற் கடி யுண்ட பரிகள்செய்த சத்தமும் மதுரையிலுள்ளார் இட்ட ஓலமும் பாண்டியராசன் காதிற்படுதலும், அவன் அடங்காக் கோபங்கொண்டான். இங்ஙனமாதலும் சோமசுந்தரக் கடவுள் அங்குள்ள நரிகளெல்லாவற்றை யும் மறைத்தருளினர்.

பெருஞ் சீற்றங்கொண்ட பாண்டியன் தன் ஏவ லாளரைப் பார்த்து "எனது முதன்மந்திரியை இங்கே பிடித்துக்கொண்டு வருதிர்" எனப்பணிக்க, அவர்கள் காற்றெனை வேகமாய்ச் சென்று "ஐயா, உம்மை நம் அரசன் வரும்படி கட்டளையிட்டான்" என்று சொன் ஞர்கள். திருவாதவூரடிகள் விபூதியெடுத்துத் தமது நெற்றியிலே தரித்துப் பரமாசாரியரைத் தியானித்து அத் தூதர்களுடன் கூடிக்கொண்டு மன்னவன் முன்புபோய் நின்றார். வேந்தன் அடிகளின் முகத்தைப்பார்க்கச் சித்தமில்லாதவனாய், அயலே நின்ற அமைச்சரைப் பார்த்து "இம் முதன்மந்திரி நாம் குதிரைவாங்கும்படி கொடுத்த பொருள் முழுவதையும் அபகரித்துக்கொண்டு காட்டிலேயுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கிய மாயத்தைப் பார்த்தீர்களா!" என்றுகூறிப் பின் னருஞ் சொல்லுகின்றான்: "தத்தம் கடமையினின்றுந் திறம்பியோரைத்தண்டித்தல் அரசனுடைய கடனாலும், பிராமணர், தபோதனர், பெண்கள், விருத்தர், பாலர் ஆகிய இவர்களுக்குப் பெருந்தண்டனை செய்யவொண்ணு தென்பது அரசதருமமாகும். ஆனதினால் இவரைக்

கொண்டுபோய்க் கொடியவெயிலில் நிறுத்திநெற்றியிலுங் கரங்களிலுங்கற்களை வைத்துளமதுபொருளை அறவிடுமிர்' என்று தண்டலாளருக்குக் கட்டளை செய்தான்.

சிறிதும் இரக்கமில்லாதவர்களாகிய தண்டலாளர் திருவாதவூரடிகளைப் பிடித்துக்கொண்டுபோய் நிலத்திற் கோடுகீறி அக்கோட்டுள் நிறுத்தி அவருடைய நெற்றியிலுங் கரங்களிலும் கற்களையேற்றி உச்சி வெயிலில் நிற்கச்செய்தார்கள். சிவாநுபூதிச் செல்வ ராகிய மாணிக்கவாசக சுவாமிகள் அத்துயரத்தைச் சகிக்க முடியாதவராய், திருப்பெருந்துறையின் கண்ணே தம்மை யடிமைகொண்டருளிய பரமாசாரியருடைய பாதங்களை நினைந்து தோத்திரஞ் செய்கின்றார்

"தொல்லையோ ரிருவர் தேடுஞ் சோதியே யாது செய்வேன்
தில்லையோர் பரவ நின்ற தெய்வமே யாது செய்வேன்
இல்லையோ கருணை நின்பால் றின்றெனை யடிமை கொண்டா
யல்லையோ தமியே னின்னல் அறிதியோ அறிந்தி லாயோ."

"என் ஆன்மநாதராகிய சுவாமி! தேவரீர் கொண்டு வந்தருளிய குதிரைகளெல்லாம் நரிகளானமையைக் கண்டு, அரசன் கட்டளைப்படி ஏவலாளர் என்னைத் தண்டித்து வருத்துகின்றனர்; இத் துன்பத்தை மாற்றியருள வல்ல தேவரீர் மாற்றாதொழியின் யான் வேறு யாரிடத்தில் முறையிடுவேன். சுவாமி, எனக்கு நேர்ந்த இப் பேரிடரை மாற்றாதொழிவீரேல், பூர்வத்திற் பாற்கடலில் எழுந்து தேவர்களைத் துரந்த கொடிய விடத்தைத் திருக்கண்டத்து அடைத்தருளினீரென்பதும், எவர்க்கும் பெரும் இன்னல் விளைத்த முப்புரங்களை எரித்தருளினீரென்பதும் பொய்யாய்விடுமே."

இங்ஙனம் மாணிக்கவாசக சுவாமிகள் புலம்புதலும் சர்வ வியாபகரும் அடியவர்க் கெளியவருமாகிய சோம சுந்தரக் கடவுள் தமது அடியவராகிய மாணிக்கவாசக சுவாமிகளுக்கு நேர்ந்த இன்னலைத் தீர்த்தருளும்வண்ணந் திருவுளங் கொண்டார்.

## சோமசுந்தரக்கடவுள் மண் சுமந்தமை

கருணாநிதியாகிய சோமசுந்தரக்கடவுளுடைய திருவுளக் குறிப்பின்படியே, ஆகாயகங்கையானது மதுராபுரியிலுள்ள வைகையாற்றோடு கலந்து பெருக்கெடுத்து மதுரைமூதூர் முழுவதும் சமுத்திரமெனும்படி பரந்தது. அங்குள்ள வயல்களும் சோலைகளும் மற்றை இடங்களும் வெள்ளப்பெருக்காகவே காணப்பட்டன. பெருகிய வெள்ளம் மதுரைமாநகரின் மதில்கண்மீது மோதிப் பட்டினத்தினுள்ளே புகுவதுபோற் காணப்பட்டது. இதனைக் கண்டு அங்குள்ள சனங்கள் ஏக்கமுடையவராய்ச் செய்வதின்னதென அறியாதவராய்ப் பாண்டியராசனுக்கு முறையிட்டார்கள். அதனைக்கேட்ட அரசன் கவலையுடையவனாய் வைகைநதியையடைந்து அதன்கண் பொன்னையும் நவரத்தினங்களையும் பட்டுவஸ்திரங்களையுமிட்டு "இந்த மதுராபுரியிலுள்ளார்க்கெல்லாம் தாய் போன்ற கங்காதேவியே! நீ கொண்டகோபந் தணிதல் வேண்டும்" என்று இரந்து நின்றான். ஆனால் வைகை நதி பிரவாகங் குறைதலில்லாதிருப்பதைக்கண்ட அரசன், தன் மந்திரிமாரைப் பார்த்து "மந்திரிமாரே, எங்கள் குலதெய்வமாகிய சொக்கலிங்கப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் நித்திய நைமித்திகங்கட்கு யாதும் முட்டு நேர்ந்ததுண்டா? இன்றேல், பெரியோர்மனம் வருந்தும்படி யாம் அவர்கட்கு யாதும் தீமை புரிந்தோமா? இந்நதி பெருகியதற்குக் காரணம்யாது? ஆராய்ந்து சொல்லுதிர்" என்றான்.

மந்திரிமார் சிறிது நேரம் ஆராய்ந்து பின்னர் அரசனைப்பார்த்து "மகாராசாவே! சிவபத்தராகிய தென்னவன் பிரமராயன் என்னும் முதன்மந்திரியாரை அவர் இப்போது அநுபவிக்கிற சிறைத்தண்டனையினின்று நீக்கி, அவர் மனசை மகிழ்வித்தால்,வைகைநீர்ப்பிரவாகம் எமது நாட்டினை அழியாதொழியும்" என்று அரசனுக்குச் சொல்லி அவனை வணங்கி நின்றனர்; அரசனும்

அமைச்சரை மெச்சி "யான் நினைத்தவாறே நீவிரும் சொன்னீர்" என்று கூறி, உடனே மாணிக்கவாசக சுவாமிகளைச் சிறைச்சாலையினின்றும் நீக்குவித்துத் தன் முன்னர் அழைத்து "முதன் மந்திரியாரே, நீர் வருந்துவதொழிக; பாம்பணி செய்யவேணிப் பரம்பர னடியார் கையில் ஆம்பொருள் நமதேயாயின் அறம் பிறர்க்காவதுண்டோ; யான் இதனிமித்தம் உம்மைத் தண்டித்தமை என்மேற் பெருந்தவறுகும்; அதனைப் பொறுத்துக்கொண்டு, தவத்திற் சிறந்தீரே இவ் வைகைநதிப்பிரவாகம் நமதுநாட்டை அழியாதொழியும் படி கரைகட்டுவித்தல் வேண்டும்" என்று பரிவுடன் சொன்னுன். அரசன் முன்பு வன்சொற் கூறிய போதும் பின்பு இன்சொற் கூறிய போதும் முறையே வெறுப்பும் விருப்பும் இல்லாத திருவாதவூரடிகள் அங் ஙனஞ் செய்தற்கு உடன்பட்டு, வைகைநதிக் கரையினை யடைந்து, அந்நீர்ப்பெருக்குஒழிந்துவிடல்வேண்டுமென்று பரமாசாரியருடைய திருவடிகளைத் தியானித்தார். உடனே பெருக்குக் குறைந்தது.

அதன் பின்னர் மாணிக்கவாசகசுவாமிகள் தம்மைப் பணிந்துநின்ற காரியதரிசிகளைப் பார்த்து, "இந்த வைகைநதிக் கரையை விரைவில் அடைப்பித்தல் வேண்டும்; ஆதலால் இந்நகரத்தின்கணுள்ளார் எல்லாரையும் வந்து கரையை யடைக்கும்படி பறை யறைவித்து விளம்பரப்படுத்துதிர்" என்று கட்டளை செய்ய, காரியதரிசிகள் கடிதிற்சென்று, அங்ஙனஞ் செய்வித்தனர். உடனே மதுரையிலுள்ளார் கூடை மண்வெட்டி என்னும் இவைகளை முறையே தலையிலும் தோளிலும் வைத்துக்கொண்டு வைகையாற்றங்கரையினை யடைந்தனர்; வாதவூரடிகள் கட்டளைப்படி காரிய தரிசிகள் ஒவ்வொருவரும் அடைக்கவேண்டிய பாகங் களைக் கோலால் அளந்து கூறுசெய்து விட்டனர். "இராசகாரியம்" எனப்படும் இக்கருமத்தை மதுரையி லுள்ள சனங்கள் மிக்கமுயற்சியோடு செய்வாராயினர்.

இங்ஙனமாக, மதுரைமாநகரின்கண்ணே வசிப்பவளும், மிக்க தரித்திரத்தோடு கூடியவளும், பிட்டு விற்று அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு வயிறு வளர்ப்பவளும், சோமசுந்தரக் கடவுளிடத்து மெய்யன்பு உடையவளும், செம்மனச் செல்வியென்றும், வந்தி யென்றும் அழைக்கப் படுபவளுமாகிய ஒரு கிழவி தனக்கென அளந்து விடப்பட்ட பாகத்தை அடைப்பவர் ஒருவருமில்லாமையினால், காரியதரிசிகள் அவளை வருத்த, அவள் சொக்கநாத சுவாமி கோயிலை யடைந்து அப்பெருமான் சந்நிதியிற் பின்வருமாறு முறையிடுவாளாயினாள்; "கருணையங்கடலே, பரமபிதாவே, அடியாளுக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை, தமருமில்லை, நான் பேயினுடன் நின்றாலும் என்னைப் பிரித்தறிதல் முடியாது, என்னை வருத்தும் வறுமையோ மிகக் கொடியது; இப்பொழுது எனக்கென்று விடப்பட்ட கோலறையை அடைப்பிக்க எவருமில்லாததினால், அரசனுடைய ஏவலாளர் என்னை வருத்துகின்றார்கள்; இந்தச்சமயத்திலே தேவரீர் எனக்குத் துணைபுரியாவிட்டால் நானே என்னுயிரை நீக்கிக்கொள்வேன்; நான் செய்யக்கூடிய மார்க்கம் வேறு எதுவுமில்லை" என்று தன்குறையைச் சோமசுந்தரப் பெருமானுக்கு முறையிட்டாள்.

அடியார்க் கெளியாராகிய சோமசுந்தரப் பெருமானார், வந்தியென்னும் மூதாட்டிக்கு நேர்ந்த இன்னலை நீக்கத் திருவுளங்கொண்டு, கந்தைத்துணியைத் திருவரையிலே தரித்தவராய், திருமுடியில் மண் சுமக்கும் கூடையையும்,திருத்தோளில் மண்வெட்டியையுந் தாங்கியவராய், ஒரு கூலியாளின் வடிவங்கொண்டு, பெரும்பசியுடையார் போலத் திருவாலவாய் வீதியின் கண்ணே செம்மனச் செல்வியின் இல்லத்துக்குச் சமீபமாக எழுந்தருளி "என்னை யாராகிலும் கூலியாளாக ஏற்றுக் கொள்வார் உண்டோ?" என்று கூறிக்கொண்டு

வந்தருளினர். தனக்குக்கூலியாளாய் வருவாரில்லையே என்று பெரிதும் கலங்கிக்கொண்டிருந்த செம்மனச் செல்விக்கு இத்திருவாக்குச் செவியிலே தேவாமிர்தம் பெய்தாற்போற் பட்டது.

இறைவனையும் ஏவல் கொள்ளத்தக்க தவத்தைப் பூர்வத்தில் ஈட்டிக்கொண்ட அந்த நரைமூதாட்டி அக் கூலியாளர் முன்சென்று "மகனே, நீ எனக்குக் கூலியாளாய் வா" என்று கேட்க, பெருமான் "முற்கூலி தந்தாற்றான் வருவேன்" என்று சொல்லியருள, "எடாதம்பி, என்னிடத்தில் முற்கூலி தருவதற்குக் கையிற்பணமில்லை; இப்பொழுது வேண்டுமானல் இந்தப் பிட்டைத்தின்று உன்பசியை ஆற்றிக்கொள்; இல்லையேல் வேலைசெய்துவிட்டுஅந்திநேரம் வா, அதற்கிடையில் நான் இந்தப்பிட்டை விற்று உன்கூலிப்பணத்தைத் தருகிறேன்" என்றாள்.

"தாயே, இப்பொழுது எனக்கு அதிக பசியாக இருக்கிறது. உந்த இனிமையான பிட்டை எனக்கு உண்ணத்தருவையாகில் நான் உண்டபின் உனது பாகத்தைச் சீக்கிரத்தில் நன்கு அடைத்து விடுவேன்" என்று அக்கூலியாளர் கூறுதலும், உடனே வந்தியம்மையாகிய மூதாட்டி "இந்தா, இந்தப்பிட்டை நீ தின்" என்று சொல்லிப்பிட்டை அள்ளி ஆதரவோடு கொடுத்தாள். சோமசுந்தரக்கடவுளாகிய கூலியாளர், தாம் உடுத்திருந்த கந்தை வஸ்திரத்தின் ஒரு பாகத்தை நீட்டி, அப்பிட்டினை வாங்கித் திருவமுது செய்துகொண்டு, "தாயே, எவராலும் ஆற்றுதற்கரிய பசியை நீ ஆற்றிவிட்டாய்; இனி நான் வைகையாற்றங் கரைக்குச் சென்று உனக்கென வகுத்துவிடப்பட்ட கரைப்பங்கை அடைக்கின்றேன்" என்றுகூறியருளினர். பின்னரும் அக்கூலியாளர் வந்தியம்மையாரைப் பார்த்து "அன்னையே, நீ தந்த பிட்டு தேவாமிர்தம் போலத் தித்திப்பாய் இருக்கின்றது. இன்னும் கொஞ்சம் அதில் எனக்குத் தருதி" என்று பின்னரும் பிட்டினைக்

கந்தைத்துணியில் வாங்கித் தெருவழியே தின்று கொண்டு, அடைக்க வேண்டிய பாகத்தைக்காட்டும்படி வந்தியம்மையையும் வைகையாற்றங்கரைக்குத் தம்முடன் அழைத்துக்கொண்டு சென்றார்.

நதி தீரத்தை யடைந்த மாத்திரத்தே வந்தியம்மை கூலியாளரைப் பார்த்து "தம்பீ, இதுதான் எனக்கென விடப்பட்டபாகம்; இதனை நீ சீக்கிரம் அடைத்துவிடுதி" என்று தனக்குரிய பாகத்தைச் சுட்டிக் காட்டினள். கூலியாளரும் வைகைநதிக்கரையை அடைக்கத் தொடங்கினர்; அக்கூலியாளர்மண்வெட்டியினல் மண்ணை வெட்டிப் பேர்ப்பார்; பேர்த்தமண்ணைக் கூடையில் இடுவார்; தம்முடைய திருமுடியிற் சும்மாட்டை வைத்து மண்ணைச் சுமந்து கொண்டுபோய் நதிக்கரையிற்போட்டு மீண்டு வருவார்: திருமேனி வியக்கப்பெற்றவராய் அதிக பசியடைந்தவர்போல் தாம்கொண்டுவந்தபிட்டினை எடுத்து அருந்துவார்; வந்தியம்மை மீது கிருபா நோக்கஞ் செய்வார்; "இந்தப்பிட்டு மிகவும் நன்றாயிருக்கின்றது" என்று தலையை அசைப்பார்; கூடையைத் திருமுடியிலும் மண்வெட்டியைத் திருத்தோளிலும் வைத்துக்கொண்டு கூத்தாடுவார்; பின்னர் மண்ணை வெட்டிக்கூடையில் இட்டுச் சுமந்து கொண்டுபோய்க் கரையிற்போடுவார்' மண்மீது அடிஅளந்து கீறிவிட்டுத் தாம் அளந்த தூரத்திற்குப் பாய்வார்.

தவத்திற் சிறந்த செம்மனச்செல்வி யானவள் அக்கூலியாளருடைய திருவிளையாடலைப் பார்த்து, தனக்கென அளந்துவிடப்பட்ட பாகத்தை அவர் அடைக்கின்றிலரே என்பதையிட்டு வருந்தாது, "இவர் செயலைக்காரியதரிசிகள் காணில் இவரைப் பெரிதுங் கண்டிப்பார்களே" என்று நினைந்து வருந்தி நின்றாள். இங்ஙனம் இரங்கி நின்ற அம்மையை இறையவராகிய கூலியாளர் பார்த்து "தாயே, நீ சிறிதுங் கவலை கொள்ளேல்; உனக்கு உரிய இக்கரையின் பாகத்தை

நான் விரைவில் நன்கு அடைத்து விடுகின்றேன்; நீ நின் வீட்டிற்குச் செல்லுதி; சிறிதும் சந்தேகப்படாதே" என்று கூறியருள, வந்தியம்மை வைகை நதிக்கரையினின்றும் நீங்கித் தன் மனையை அடைந்தாள். பரமசிவனார் கூலியாளராக வந்து கோலறை அடைப்பதைக் கண்ட வைகை நதியெனப்படும் கங்காதேவியானவள் பதை பதைத்துத் தன் அலைகளாகிய கரங்களால் எம்பெருமானை வணங்குதலும், அவனுடைய உள்ளக்குறிப்பைக்கண்ட கூலியாளர் கரைஅடைப்பதை விடுத்து அப்பாற் சென்று அழகிய ஒரு கொன்றைமர நீழலிலே நுண்ணிய வெண்மணலின் மீது கூடையைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்துறங்கினர்.

இங்ஙனமாக, மாணிக்கவாசக சுவாமிகளின் கட்டளைப்படி வைகைக் கரையை அடைப்பிக்குங் காரியதரிசிகள் தங்கள் பக்கத்தே நிற்கும் ஏவலாளரை நோக்கி, "எல்லாரும் தத்தமக்கு வகுத்து விடப்பட்ட கோலறைகளை நன்கு அடைத்திருக்கின்றார்களோ என்பதைப் போய்ப் பார்த்து வந்து சொல்லுதிர்" என்று பணிக்க, அவர் அவ்வாறு சென்று பார்த்தனர். பார்த்தவிடத்து எல்லாப் பாகங்களும் நன்கு அடைக்கப் பட்டிருக்க, சோமசுந்தரக்கடவுளாகிய கூலியாளர் அடைத்த பாகமே நன்கு அடைக்கப்படாது இருத்தலைக் கண்டு "இது எவர்க்கு விடப்பட்ட பங்கு" என்று அயலே நின்று வேலைசெய்வோரை ஏவலாளர் வினவினர்.

"இந்த மதுரைமாநகரிலே பிட்டு விற்றுச் சீவனம் செய்யும் வந்தி என்னும் கிழவிக்கு விதிக்கப்பட்ட பங்கு இதுவாகும்; அம்மூதாட்டியின் கூலியாளாக இங்கே ஒருவன் வந்தான்; அவனுடைய செயலை நாங்கள் என்னவென்று சொல்வேம்; அவன் மண்ணை வெட்டிக் கூடையிற் பெய்து விட்டு, தலையில் எடுத்து வைக்க முடியாதவனாய் வருந்தி நிற்பான்; பின்னொருவாறு

மண் கூடையைத் தலையின்மீதுஎடுத்துவைத்துக்கொண்டு போய்க் கரையிற் கொட்டுவான்; கொட்டிவிட்டு நின்று சிரிப்பான்; பாடுவான்; கூத்தாடுவான்; பின்னரும் ஒரு கூடைமண்ணைக் கொண்டுபோய்க் கரையிற் சிந்திவிட்டு நெடிதுநேரம் சும்மா நிற்பான்; காரணம் இன்றி ஓடுவான்; இங்கு நிற்பவர்கள் போவென்று சொன்னால் வருவான்; வா என்று சொன்னாற் போவான்; தான் கொண்டு வந்த பிட்டை எடுத்துத் தின்பான்; அப்பிட்டு நன்றாய் இருக்கின்றது என்று சிரித்துக்கொண்டு கை கொட்டுவான்; அவனுடைய செய்கைகளைப் பார்த்தால் அவன் கூலிக்காரன் போற்காணப்படாது ஒரு இராச குமாரன்போற் காணப்படுவன்; நாங்கள் சொல்வதை அவன் ஒருபோதுங் கேட்பதில்லை; அங்கே பாருங்கள், அக்கொன்றைமர நீழலில் அவன் படுத்து நெடிது நேரம் நித்திரை செய்கிறான்" என்று அயலே நின்றகூலிக்காரர் கூறினர். இவ்வார்த்தையைக் கேட்ட காரியதரிசி ஒருவன் அயலே நின்ற ஏவலாளனைப் பார்த்து, "அவனை இங்கே பிடித்து வருதி" என்று சொல்லுதலும், ஏவலாளன் விரைவிற் சென்று சமீபத்திற் போதலும், ஞானயோகச் செழுந்துயில் கொண்டருளிய இறைவ ராகிய கூலியாளர் விழித்தெழுந்தார்.

விழித்தெழுதலும், ஏவலாளன் கண்களினின்றுங் கோபாக்கினி சிந்த எம்பெருமானைப் பார்த்துக் கடுஞ் சொற்கூறி, தன் எஜமானனாகிய காரியதரிசியிடம் வரும் படிகேட்க, அக்கூலியாளர் செல்லாது பயந்து நின்றார்; ஏவலாளன் "இதுதானா உன்னுடைய வீரம்" என்று பரிகசித்து, எம்பெருமானுடைய அருமைத் திருக்கரத்தை வலிதிற்பிடித்துச் சிறிதும் இரக்கமின்றி இழுத்துக் கொண்டுபோய்க் காரியதரிசியின் முன்னர் விடுத்தான். காரியதரிசி அதுகண்டு கடுஞ் சீற்றங்கொண்டு தன் பக்கத்தே நின்ற ஒருவனைப் பார்த்து "இவனுடைய முதுகில் இரத்தஞ் சிந்தும்படி உறைக்க அடிக்குதி" என்று பணிக்க, அந்தப் பாதகன் எம்பெருமானை

அடிக்கும்படி தன்கையிற் பிரம்பை எடுத்தான்; அச்செயலைக் கண்டு அரிபிரமேந்திராதி தேவர்களும் முனிவர்களும் கையெடுத்து வணங்கினர். ஏவலாளன் ஒரு அடி அடித்த மாத்திரத்தே, இறையவராகிய கூலியாளர் மீனாட்சியம்மையாருக்கு உரியதாகிய வாம பாகத்தில் அந்த அடியை ஏற்காது மற்றைப்பாகத்தில் ஏற்று மறைந்தருளினர்.

சோமசுந்தரப் பெருமானாராகிய கூலியாளரின் திருமேனியிற் பிரம்படி பட்டபோது, அரிமர்த்தன பாண்டியன் மேலும், மந்திரிமார்மேலும், நால்வகைச் சேனைகண்மேலும், அரிபிரமேந்திராதி தேவர் மேலும், சந்திர சூரியர் மேலும், முனிவர்கள் மேலும், நிலத்திலும் நீரிலும் உள்ள சராசரங்கண்மேலும், அந்த அடியானது பட்டது. சகல உலகங்களிலும் உள்ளவர்கள் தங்கள் மீது அடிபட்டது என அச்சமையத்திற் கூறினர்; எம்பெருமான் தாம் ஆன்மாக்கள் தோறும் அந்தரியாமியாய் விளங்குகின்றார் என்னும் உண்மையை ஆன்மகோடிகள் உணர்ந்து தமது பாதாரவிந்தங்களை வழுத்தி முத்தி அடைதல் வேண்டும் என்ற பெருங் கருணையினால் இத் திருவிளையாடலைச் செய்தருளினார் போலும்.

இந்த அடியானது சிவாநுபூதிச் செல்வராகிய திருவாதவூரடிகளது திருமேனியிலும் பட்டபோது, அவர் பதைபதைத்து "என்னிறையவர் என்னை ஆட்கொண்டருளும் வண்ணம் இங்ஙனம் எழுந்தருளினரோ" என்று மிக மனம் வருந்திக் கண்களினின்றும் நீர் அருவிபோற் பெருகக் கவற்சி கொண்டு நின்றார். அப்பொழுது காரியதரிசிகள் சிலர் அவர் முன்னிலையிற்போய் எம்பெருமானார் அத்தினத்திற்செய்த திருவிளையாடலை எடுத்துச் சொன்னார்கள். மாணிக்கவாசகப்பெருமான் அச்செய்தியைக் கேட்ட மாத்திரத்தே நடுக்குற்று, என்பெலாம் நெக்கு நெக்குருகக் கண்ணீர் பெருக, பெரிதுங் கலக்கங்கொண்டவராய், சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளி வந்து மண்சுமந்த இடத்தைத்

தமக்குக் காட்டும்படி சொல்லி, அவர்களுடன் கூடிக் கொண்டு வைகைக் கரைக்குப் போனார். காரியதரிசிகள் அந்தப் புண்ணியமான இடத்தைக் காட்டுதலும், வாதவூரடிகள் அடியற்ற மரம்போல நிலத்தில் வீழ்ந்து புரண்டு புலம்புவாராயினர்:—

"ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டுப் பொன்போன்ற திருமேனியில் விபூதியையும் சடாமுடியிற் கங்காநதியையுந் தரித்தருளிய சுவாமீ! அடியார்க்கெளியவரே! திரிபுரங்களைத் தகனஞ் செய்தவரே! தேவரீருடைய திருமேனியிற் பிரம்படி பட்டபோது, அத்திருமேனியின் பாகமாகவுள்ள ஈசுவரியின் திருவுளம் வருந்திற்றிலையோ! மேலும் ஈசுவரியானவள் தேவரீர் மண்சுமத்தற்குத் திருவுளஞ் சம்மதித்தாளோ! உமது சடாமுடியில் உள்ள கங்காதேவி திருமுடியிலுள்ள மண்சுமையைத் தன் அலைகளாற் கரைக்கவில்லையோ? பிரமதேவர் அன்னவடிவங் கொண்டு பல்லாயிர வடிவங் காண்டற்கரிய திருமுடியென்பதைக் கங்காதேவி அறிந்திலளோ, சுவாமீ! தேவரீர் மண்சுமக்கும்படி திருமுடியிற் கொண்ட சும்மாடு யாதோ? அது பிரம விஷ்ணுக்கள் தங்கள் பிறவித் துன்பம் நீங்கி ஈடேறும்படி தேவரீரைத் தினந்தோறும் அர்ச்சித்த வில்வம் முதலாம் பத்திரங்களால் ஆக்கப்பட்டதோ? இன்றேல் தேவரீருடைய முறுகிய சடைதானோ? அன்றேற் பிறைதானோ? இல்லையாயின் திருமுடியிற் பொருந்திய சர்ப்பங்களினால் ஆக்கப்பட்டதோ?"

"வைகை நதிக்கரையே பொன்னம்பலமாகவும், அந்நதியின் திரையொலியே தேவதுந்துபியாகவும், இத்திருக்கூத்தைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற கூலியாளரும் அங்கு நின்ற மற்றையோரும் வியாக்கிரபாதர் பதஞ்சலி என்னும் முனிவர்களாகவும் வைத்து எண்ணப்பட்டனரோ! எம்பெருமானே, பாண்டியராசன் தேவரீர் குதிரைகளைக்கொண்டு வந்தருளியமையைக் கண்டு

தேவரீருக்கு ஒரு பீதாம்பரத்தைச் சன்மானமாக உதவ, தேவரீர் அதனைக் குதிரைச்செண்டிலேற்க, தேவரீருடைய திருமுடியில் மண்ணேற, தமியேன் சிவப்பேற்றை அடைதல் தமியேனுக்குத் துன்பத்தைத் தருவதாகுமே! இறையவரே,. இந்திரன் முதலிய தேவர்களும் பிரம விஷ்ணுக்களும் தேவரீருக்கு வழித்தொண்டு செய்துவர, தேவரீர் வந்தியம்மை என்னும் மூதாட்டிக்குக் கூலியாளராகப் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்பினல் அடியும் பட்டோ நாயிற் கடைப்பட்ட தமியேனை ஆண்டருளத் திருவுளங்கொண்டீர்!"

"என் ஆன்மநாயகரே! தேவரீர் திருவரையிலே கந்தைத்துணியைக் கட்டிக்கொண்டு திருத்தோளில் மண் வெட்டியையும் திருமுடியில் மண்சுமக்குங் கூடையையும் வைத்துக்கொண்டு, வைகைநதியில் தனக்குரிய பாகத்தைத் தேவரீருக்குக் காட்டும்படி வந்தியம்மை முன்செல்ல, அவ்வம்மையின்பின் கூலியாளராகத் தேவரீர் சென்றபொழுது, அத்திருக்கோலத்தைப் பாவியேன் கண்ணாரப் பார்த்துக் கருத்தாரச் சிந்தித்துக் கையார வழிபடுதற்குப் பாக்கியம் பெற்றிலேனே,"

"எம் பரமபிதாவே! தேவரீர் செய்த இத் திருவிளையாடலைத் தரிசிக்கப்பெற்றவருள் வைகைநதிக் கரையில் நின்று தேவரீருடன் மண்சுமந்தவர்களோ, பாண்டியனே, மதுராபுரி வாசிகளோ, தேவரீருக்குப் பிட்டமுதருத்திய வந்தியம்மையாரோ, யார் தவத்தில் மேம்பட்டவர்?"

"சுவாமீ, தேவரீர் பொன்போன்ற அருமைத்திருமுடியில் மண்சுமத்தற்குப் பாக்கியம் பெற்ற வைகை நதிக்கரையும், தேவரீர் வேதமாகிய குதிரையின்மீது எழுந்தருளிவரப் பாக்கியம்பெற்ற மதுரைமாநகரும் அல்லவோ மேலான சிவலோகமாகும்" என்று இந்தப் பிரகாரம் திருவாதவூரடிகள் புலம்பினர். இங்ஙனமாக வைகைநீர்ப் பெருக்கும் வடிந்தது. இவற்றையெல்லாம்

உணர்ந்த அரிமர்த்தன பாண்டியனும் வாதவூரடிகளை வந்தடைந்து வணங்கிப் பின்வருமாறு கூறுவான்:—

"தவத்தான் மேம்பட்ட சுவாமீ! கைலாயகிரியினின்றும் வந்து இப்பூவுலகத்தின்கண்ணே திருவாதவூரில் ஆமாத்தியப் பிராமண குலத்தில் அவதாரஞ் செய்து, தமியேனுக்கு மந்திரியாகி, சோமசுந்தரப் பெருமான் வேதமாகிய குதிரையில் எழுந்தருளி வந்த காட்சியையும் தமியேன் தரிசித்து உய்யும் வண்ணந் தருவித்து, அடியேனுடைய பாவங்களையெல்லாம் போக்கி அருளினீர்; பிரம விஷ்ணுக்களால் முறையே முடியையும் அடியையுந் தேடிக்காண்டற் கரிதராயுள்ளசோமசுந்தரப் பெருமானர் தமியேனுடைய பிறவித்துன்பத்தை யொழித்தருளும்படி குதிரைமீது எழுந்தருளினர் என்ற உண்மையை உணராமல், நாயேன் ஒரு அழுக்குத் துணியை அப்பெருமானுருக்குச் சன்மானமாகக் கொடுத்துப் பெரும் அபராதத்தைச் செய்து விட்டேன்; கங்காநதியைத் தரித்த சொக்கநாதசுவாமியை வேதமாகிய பரியின்மீது எழுந்தருளச்செய்த பெருந்தகையாளரென்பதை யுணராமற் சிறியேன் பிரபஞ்சத்திற் குரிய அற்பமான பணத்தை விரும்பித் தேவரீருக்குப் பெருந்துன்பங்களைச் செய்து விட்டேன்; அபுத்திபூர்வமாக அடியேன் செய்த அபராதங்களை யெல்லாம், தமியேன் நரகத்திற்கிடந்து வருந்தா வண்ணம் தேவரீர் பொறுத்தருளவேண்டும்; மேலும் எங்கள் குலதெய்வம் பரிமீது எழுந்தருளிவந்த புகழும், திருமுடியின்மீது மண் சுமந்த புகழும் தமியேனுக்குப்போதியவாகும்; சிறியேன் தேவரீருடைய குற்றேவலை நாடோறுஞ்செய்யத் தேவரீரே என்னுடைய இந்த இராச்சியத்தையேற்றுப் பரிபாலித்தல் வேண்டும்."

இவ்வாறு அரிமர்த்தனபாண்டியன் இரந்து நிற்ப, மாணிக்கவாசகசுவாமிகள் பாண்டியராசனைப் பார்த்து "மகாராசாவே, இந்த மந்திரி எனப்படும் பாரத்தை எம்மிடமிருந்து நீக்கி எம்மைத் திருப்பெருந்துறைக்குப்

போதற்கு விடுதலே நீ எனக்கு இவ்விராச்சியத்தை ஆளும்படி தந்ததற்குச் சமானமாகும்'' என்றார். அது கேட்ட பாண்டியன் "பரமசிவனுடைய மெய்யடியார்க்கு இந்த இராச்சியத்தில் விருப்பம் வருமா, ஒருபோதும் வரப்போவதில்லை'' என்று தன் மனத்தில் நினைத்துப் பிரிவாற்றாது பெருந் துன்பங்கொண்டு "சுவாமீ, தங்கள் திருவுளத்திற்கு எது சம்மதமோ அதன்படி செய்க'' என்றுகூறி மணிவாசகப் பெருமானைப் பின்னரும் வணங்கிக்கொண்டு, நால்வகைச்சேனைகளுஞ் சூழத் தன் மாளிகைக்கு மீண்டான்.

அதன் பின் திருவாதவூரடிகள் தமது மந்திரிக் கோலத்தை நீக்கித் தவவேடம் புனைந்து, திருவாலவாயிற் கோயில் கொண்டருளிய சொக்கலிங்கப் பெருமானைச் சென்றிறைஞ்சி, அப்பெருமானுடைய திருவருளைப் பெற்றுக்கொண்டு, திருப்பெருந்துறையிலே தம்மை யாண்டருளிய பரமாசாரியரைத் தரிசிக்கவேண்டுமென்ற ஆசை பிடர்பிடித் துந்த, மதுராபுரியைவிட்டு நீங்கிக் கற்றாவின் மனம்போலக் கசிந்துருகிக் காடுகளையும் மலைகளையும் விரைவாகக் கடந்து சென்றார். திருப்பெருந் துறையிலே குருந்தமர நீழலில், கொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது அடியார்களுஞ் சூழப் பரமா சாரியர் முன்போல் எழுந்தருளியிருப்பதைக் கண்ட திருவாதவூரடிகள் அடியற்ற மரம்போல வீழ்ந்துவணங்கி எழுந்து நின்று பின்வருமாறு விண்ணப்பஞ் செய்வாராயினர்:—

"தீண்டுதற் கரிய மார்பிற் சேயிழை தனத்தினாலும்
ஈண்டொரு மாற்றினாலும் எய்திய தழும்ப போற்றி
வேண்டிய வடிவமாகி வெம்பரி மேல்கொண் டெம்மை
ஆண்டருள் செய்ய வந்த அண்ணலே போற்றி போற்றி.''

"அண்டருக் கரியாய் போற்றி அடியவர்க்கெளியாய்போற்றி
வண்டமிழ்ப் பாண்டி நாடு வாழமண் சுமந்தாய் போற்றி
கண்டனக் கினிய மேனி காட்டியென் சென்னி மீது
முண்டகத் திருத்தாள் வைத்த முத்தனே போற்றி போற்றி.''

இந்தப் பிரகாரம் தோத்திரஞ்செய்து வணங்கிய திருவாதவூரடிகளைப் பரமாசாரியர் எழச்செய்து, தமது அருமைத் திருக்கரத்தினல் அவருடைய நெற்றியில் விபூதியையும் பூசி, ஞான நோக்கம் பாலிக்க, திருவாதவூரடிகள் ஏனைய அடியார்களோடு வீற்றிருந்தனர்.

இங்ஙனமாக, பரமாசாரியர் தமது அடியார்களை நோக்கி "யாம் வந்த கருமம் முடிந்தது; கைலாயத்துள்ள மெய்யன்பர்கள் எம் வடிவத்தைக்காண அபேட்சிக்கின்றனர்; ஆனமையினல் யாம் அங்குச் சேர்தல் வேண்டும்; நீவிர் எல்லீரும் இங்குத்தானே சிலகாலம் இன்புடனிருங்கள்; யாம் செல்கின்றேம்" என்று திருவாய் மலர்ந்தருளி எழுதலும், அதனைக்கண்ட அடியார்கள் எல்லாரும் பிரிவாற்ருதவராய்த் தங்கள் பரமாசாரியரைப் பன்முறை தாழ்ந்து வணங்கித் துதித்து "சுவாமீ! தேவரீரைப் பிரிந்து வாழ அறியேம்; பிரிதற்றுன்பம் எங்களாற் சகித்தற்கரிது" என்று மண்மேல் வீழ்ந்து புரண்டு புலம்பினர். பிரிவாற்ருது வருந்துகின்ற அடியார்களைப் பரமாசாரியர் கண்டு பரிவு கொண்டு "அன்பர்களே, கவலை கொள்வதொழிதிர்; இந்தக்குருந்தமர நீழலிலுள்ள மணலில் ஒரு தெய்வபீடம் அமைத்து அப்பீடத்தின் மீது எமது பாதங்களை நிருமித்து, உங்கள் கவலையை ஒழித்து அப்பாதங்களை நாமென்றே பாவித்துப் பூசித்துக்கொண்டு இருங்கள்: இப்படியிருப்பின் ஒரு தினம் இத்தடாகத்தின் கண்ணே அக்கினி வந்து தோன்றும்; அவ்வக்கினியில் நீங்கள் எல்லீரும் பிரவேசித்து எம்மிடம் வருதிர்" எனத்திருவாய் மலர்ந்து சிறிது தூரம் செல்ல, அடியார்களும் வணங்கியபடி தொடர்ந்து சென்றனர்; பரமாசாரியர் பின்னரும் தமது அடியார்களைப் பார்த்து "நீவிர் இங்கே நிற்குதிர்" எனலும், "சுவாமீ, தேவரீருடைய வதனரவிந்தத்தை இனிமேல் எப்போது நாம் காண்பது" என்று சொல்லித் தாயிற் பிரிந்த பிள்ளைபோற் பரிதபித்து நின்றனர். பரமாசாரியர் அப்பாற்சிறிது தூரஞ்சென்றருள,

மாணிக்கவாசக சுவாமிகளும் அழுது கொண்டு அவர் பின் செல்ல, அதனைத் திருவுளத்திற் கொண்ட பரமாசாரியர் ஒரு கொன்றை மர நீழலில் இருந்தருளினர். இருந்த பரமாசாரியருடைய பாதங்களில் மாணிக்கவாசக சுவாமிகள் அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கி எழுந்து கண்ணீர் அருவிபோற் பெருக நிற்றலும், பரமாசாரியர் தமதன்பராகிய மாணிக்கவாசக சுவாமிகளைத் திருமருங்கிற் பரிவோடிருத்திப் பின்வருமாறு சொல்லியருளுவாராயினர்:—

"அன்பனே, பாலில் நெய்போற் சர்வவியாபகமுடையேமாயினும், இத் திருப்பெருந்துறையின் கண்ணுற்ற மெய்யடியார்கட்குத் திருவருள் செய்யவேண்டி இக் குருந்தமர நீழலில் தயிரின் கண் நெய்போல் வியாபகமாயிருப்போம். இது நாத லயஸ்தானமாதலினாலும், பார்ப்பதிகாண யாம் பஞ்சகிருத்தியத் தாண்டவஞ் செய்கின்ற இடமாதலும், மேல்நோக்கி வரும் ஒளியை உடைய சுழுமுனை நாடியிலே சத்திக்கும் சூக்குமநாதத்திற்குப் பிரதிநாத சின்னமாகிய சங்கவாத்தியமொன் றல்லது செவிப்புலன்கட்கு இன்பந் தரும் ஏனைய வாத்தியங்கள் எமக்கு ஆகாவாம்; இக் குருந்தமர நீழலின்கண்ணே ஏனைய அடியார்களோடு நீயும் என் பாதங்களைப் பூசித்துக்கொண்டிருக்குதி, தடாகத்தில் அக்கினி வந்து தோன்றும் போது மற்றைய எல்லாரும் அவ்வக்கினியிற் புக, நீ மாத்திரம் அதிற் புகாது இவ்விடத்தை விட்டு நீங்கி உத்தரகோசமங்கை என்னும் திருப்பதிக்குச் செல்லுதி; அங்கே இட்டசித்திகளெல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு, அதன்பின் இன்ன இன்ன ஸ்தலங்களைச் சென்று தரிசிப்பையேல் இந்தப் பரமாசாரிய வடிவத்தையே ஆங்காங்கு நீ காண்பாய்; இங்ஙனம் இவற்றையெல்லாம் தரிசித்தபின் திருக்கழுக் குன்றத்தையடைந்து அங்கே எம்மைத் தரிசித்துப் பின்னர் மீண்டு இங்கே வந்து சிதம்பரத்திற்குச் சென்று உன்னுடன் சமயவாதஞ்

செய்ய வரும் புத்தரை வாதில் வென்று, அதன்பின் நமது சாயுச்சிய பதவியைப் பெறக் கடவை" என்றருளினர்.

---

## திருவம்பல தரிசனம்

திருவாதவூரடிகள் பரமாசாரியரை வணங்கி "சுவாமீ, திருப்பெருந்துறையாகிய இப் புண்ணிய க்ஷேத்திரத்தின் கண்ணன்றிச் சிதம்பரத்திலுள்ள கனகசபையிலேயே நீ பரமுத்தி பெறுவையென்று தேவரீர் நாயேனுக்கு அநுக்கிரகித்ததன் காரணம் என்னவோ" என்று அதி விநயத்துடன் விண்ணப்பஞ் செய்தார். அப்பொழுது பரமாசாரியர் "அன்பனே, கேட்பாயாக, இந்தப் பூமியிலே புழுவானது தான் எடுக்கப்பட்ட இடத்திலன்றி, கொண்டுபோய் வைக்கப்பட்ட இடத்திலேயே அந்த வேட்டுவன் எனப்படும் வேட்டைவாளியின் வடிவத்தைப் பெறும்; அதுபோல நீ எமக்கு எதிர்ப்பட்ட இந்த ஸ்தலத்தின் கண்ணே நாம் உனக்கு மெய்ஞ்ஞானத்தை உபதேசித்தோம்; மேன்மை பொருந்திய சிவானுபூதியாகிய பரமுத்தி சிதம்பரத்தின் கணுள்ள கனகசபையிலேயே உனக்குக்கைகூடும். இச்சரீரத்தின்கண் மூலாதாரத்தினின்றும் எழுகின்ற சுழுமுனை நாடியோடு ஒருங்கு எழுகின்ற தேசோமயமாகிய அவ்வொளியிலே ஸ்ரீ பஞ்சாக்கரமும் ஏகாக்கரமாகியும், நாததாரையின் இயங்கும் ஒலியாகியும் அதிசூக்குமமாய் விளங்கும் அவ் வோசை மேனோக்கிச் சென்று ஒடுங்குமிடமே நாம் தாண்டவஞ் செய்யும் பொன்னம்பலமாகும். பஞ்ச பூதங்களும், இடை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்றும் சோமசூரியாக்கினி யென்னும் மண்டலத் திரயங்களும் இரு இடத்திலும் நிலைபெற்ற தொடர்பினுற் பிண்டமும் அண்டமும் தம்முள் ஒப்புடையனவாய், பிரமவிஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவனுகிய பஞ்சகர்த்தர்

களும் நிற்கின்ற முறைமையும் இந்த இரு இடத்திலும் ஒப்பக் காணலாகும். ஆதலினாலே இந்தப் பிரமாண்டத்தின்கண்ணே மூலத்தை யாராயுமிடத்து அது நமது சிவலிங்க வடிவமேயாகும். மேலாகவுள்ள அந்தப் பரநாத வெளியிற் சுத்த மாயாமயமாகிய கனகசபை விளங்குகின்றது; அச்சபையின் கண்ணே சிவகாமசுந்தரி தரிசிக்க நாம் அநவரத தாண்டவஞ் செய்வேம். அந்தத் திரு நடனந்தான் யாதென்று நீ வினவின், சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்தலேயாம். பக்குவான்மாக்களுடைய பாசக்கட்டை யவிழ்க்கும் இக்குருவடிவமும் அந் நடனகர்த்திருத்துவ வடிவமேயாகும். (கர்த்திருத்துவம்—செய்பவனது தன்மை) தரிசிக்க முத்திதரும் தலமும் அச்சிதம்பரமேயாகுமென அறிதி,"

"பிரம விஷ்ணுக்களும், வியாக்கிரபாதர் பதஞ்சலி என்னும் முனிவரிருவரும், தாரகாக்கன் கமலாக்கன் வித்தியுன்மாலி யென்னும் திரிபுரத்தசுரர் மூவரும், தில்லைவாழந்தணர் மூவாயிரவரும், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும், முப்பத்து முக்கோடி தேவர்களும் தரிசித்து வணங்கப்பெறும் மகாக்ஷேத்திரமாக வுள்ளது அத்தில்லைத் தலமேயாகும். அன்பனே, இந்த உண்மைகளை நீ சந்தேக விபரீதமின்றி அறிவாயாக" என்று உபதேசித்துத் திருவாதவூரடிகளின் நெற்றியில் தமது அருமைத் திருக்கரத்தினால் விபூதி சாத்தி அவரை "இங்கே நிற்பாய்" என்று பணித்தருளிக் கிருபா நோக்கஞ் செய்து பரமாசாரியர் அப்பாற்சென்று மறைந்தருளினார்.

மாணிக்கவாசக சுவாமிகள் பரமாசாரியர் மறைந்தருளியமையைக்கண்டு ஏக்கங்கொண்டு தமது சிரத்திற் குவித்த கரங்களுடன் கண்களில் நின்றும் நீர் அருவி போற் பெருக மீண்டும் சிவபத்தர்களின் திருக்கூட்டத்தை யடைந்தார். திருவாதவூரடிகளும் மற்றை

யடியார்களும் தங்கள் பரமாசாரியர் ஆஞ்ஞைப்படி அக் குருந்தமர நீழலிலே தெய்வபீடிகையையமைத்துத் திருவடிகளை நிருமித்து அர்ச்சனை செய்து கொண்டு இருந்தார்கள்.

இங்ஙனமாக, திருவாதவூரடிகள் "நமது இறையவர் அன்பில்லாதவரும் தம்மைப் பாடுவரேல்அவர்க்குத் திருவருள் புரிவர்'' என்றுதுணிந்து "நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க" என்றெடுத்துச் சிவபிரானுடைய திருவடிகளைத் துதித்து ஞானபாதப் பொருள் உடைய சிவபுராணமாகிய திருவாசகத்தைப் பாடியருள்வாராயினர். அதன்பின் "அற்புத மறியேனே" என அற்புதப் பத்தையும், "தன்னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே'' என்று அதிசயப்பத்தையும், "என்னைக் குழைத்தாயே'' என்று குழைத்த பத்தையும், "சேவடிக்கணஞ்சென்னி மன்னிச்சுடருமே" என்று சென்னிப்பத்தையும், "ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே" என்று ஆசைப்பத்தையும், "வாழ்கிலேன் கண்டாய் வருகவென்றருள் புரியாயே'' என வாழாப் பத்தையும், "அடியேனுன் னடைக்கலமே'' என்று அடைக்கலப்பத்தையும், "செத்திலேனந்தோ'' என்று செத்திலாப் பத்தையும், புணர்ச்சிப் பத்தையும், "அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே யென்றருளாயே'' என்று அருட்பத்தையும், பின்னர்த்திருவார்த்தையும் எண்ணப்பதிகமும் குற்றமற்ற வெண்பாப் பதினொன்றும் ஆகிய திருவாசகங்களையும் பாடியருளினர். திருப்பள்ளியெழுச்சி, திருவேசறவு, ஆனந்தமாலை, உயிருண்ணிப் பத்து, பிரார்த்தனைப்பத்து, திருப்பாண்டிப்பதிகம் என்னும் தமிழ்வேதமாகிய திருவாசகங்களையுந் திருப்பெருநதுறையிலே பாடியருளினர்.

மாணிக்கவாசக சுவாமிகள் அக்குருந்தமர நீழலின் கண்ணே ஏனையதிருத்தொண்டர்களுடன் கூடிச் சில நாள் இருக்கும்போது, பரமாசாரியர் திருவாக்கின் பிரகாரம் ஒரு தினம் ஞானக்கினி அத்தடாகத்திற்

றோன்றியது. உடனே ஏனைய தொண்டர்கள் எல்லாரும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உச்சரித்துக்கொண்டு பத்தியோடு அந்த அக்கினியின் கண்ணே பிரவேசித்தனர். அப்பொழுது நடராசப்பெருமான் சிவகாம சுந்தரியாரோடு இடபாரூடராய் அந்த அடியார்கட்குக் காட்சி கொடுத்தருள, அவர்களெல்லாரும் எம்பெருமானையும் ஈசுவரியையும் வணங்கித்தங்கள் பழைய கணநாத வடிவத்தைப் பெற்றுப் பெருமானார் சந்நிதியிற் சென்று சேர்ந்தனர்.

சிவபிரான் அவர்களைப் பார்த்து "அன்பர்களே, உங்களைப் பிரிந்து நாம் கைலாயத்திற்கு வந்தமையும் தடாகத்திற் றோன்றுஞ் ஞானக்கினியிற் பிரவேசியுங்களென உங்கட்கு யாம் பணித்தமையும் எக்காரணம் பற்றியெனிற் சொல்லுதுங் கேட்பீராக. உத்தம அடியனாகிய திருவாதவூரனைச் சிதம்பரத்திற்குச் சென்று அவனுடன் சமயவாதஞ் செய்யவரும் பௌத்தரைச் சமய வாதத்தில் வெல்லவேண்டி இன்னுஞ் சிலகாலம் பூவுலகில் இருக்கும்படி செய்தேம்; நாம் வரும்போது உங்களையும் உடனழைத்து வந்தேமாயின், அவன் தன்னந்தனியேயிருந்து பிரிவாற்றாது இரங்குவான் என்பதுபற்றி உங்களையுஞ் சிலகாலந் திருப்பெருந்துறையில் இருக்கும்படி செய்தேம்; ஆணவம் மாயை காமியம் என்னும் மும்மலங்களும் நீங்கப்பெற்ற ஞானிகளும் தாம்கொண்ட மனித சரீரத்தோடு சிலதினமேனும் பூமியிற் சீவிப்பரேல், அம்மல வாசனைமீள வந்து அவர்களைச் சேரும்; அக்காரணம்பற்றியே ஞானக்கினியைத் தடாகத்தின்கண் வருவித்து மாயா காரியமாகிய தூல சரீரத்தைத் தகித்து இந்தத்திவ்வியசரீரத்தைஉங்கட்குத் தந்தேம்" என்று இங்ஙனந் திருவாய் மலர்ந்தருளிக் கணநாதருடன் மறைந்தார்.

அதன்பின்னர் மாணிக்கவாசக சுவாமிகள் அவ்விடத்தை விட்டகன்று ஒரு கொன்றை மரத்தின்கீழ்ச் சிவயோகத்திலிருந்தார். இங்ஙனஞ் சிவயோகத்தில்

இருக்கும்போது, திருத்தொண்டர்கள் ஞானக்கினியிற் பிரவேசித்தமையையும், பரமசிவன் இடபாரூடராய் எழுந்தருளி அவர்களை யழைத்துச் சென்றமையையும், தமது பரமாசாரியருடைய திருக்கோலத்தைத் தாம் க்ஷேத்திரங்கள் தோறும் சென்று தரிசிப்ப விருப்பதையும், பௌத்தர்களைச் சமய வாதத்திலே தாம் வெல்ல விருப்பதையும், சிதம்பரத்திலே தாம் சபா நாயகரோடு இரண்டறக் கலத்தலையுமாகிய இறந்தகால எதிர்கால வர்த்தமானங்களைச் சிவயோகப் பிரத்தியக்ஷத்திற் கண்டார்.

இவற்றையெல்லாம் யோகத்தில் உணர்ந்த மாணிக்க வாசக சுவாமிகள் மெய்யன்பு மேலீட்டினாலே கண்களினின்றும் ஆனந்த பாஷ்பஞ்சொரிய, மனம் நெக்குருக, உரோமஞ் சிலிர்ப்பத் தமது இரு கரங்களையுஞ் சிரசின் மீது குவித்து எம்பெருமானாரை நினைத்து, "சுவாமீ, நாயேனைத் தன்னந் தனியே நின்று கலங்க விட்டு எங்கே ஒளித்தீர்" என்று புலம்பிப் பின்னர், பரமசிவன் அடியார்கட்குக் காட்சி கொடுத்தருளிய பரிசுத்த ஸ்தானமாகிய பொய்கைக் கரையை அடைந்து அந்த இடத்தில் வீழ்ந்து புரண்டு அழுதார். மாணிக்கவாசக சுவாமிகள் இங்ஙனம் கசிந்துருகியழுது பின்னர் ஒருவாறு தேறிக் காண்டற்கரிய இருபாத தாமரைகளையும் இறுகப் பற்றிக்கொண்டு "மெய்தானரும்பி விதிர் விதிர்த்து" என்னுந் திருச்சதகத்தைப் பாடியருளினார். இந்தப்பிரகாரம் பாடியருளி, தமது பரமாசாரியருடைய கட்டளை ஞாபகத்தில் வர, திருப்பெருந்துறையில் இறைவரை வணங்கி அவருடைய அநுமதி பெற்றுக்கொண்டு, மாணிக்கவாசக சுவாமிகள் திருவுத்தரகோச மங்கையென்னுந் திவ்விய க்ஷேத்திரத்திற்குச் சென்றார்.

திருவுத்தரகோச மங்கையிற் பரமாசாரியருடைய திருவாக்கின் பிரகாரம் அத்திருமேனியைத் தாம் தரிசிக்கப் பெறாமையால் சுவாமிகள் மனங்கலங்கி, இரண்டாம் அடிதோறும் "என்னை விட்டிடுதி கண்டாய்" என்னுந்

திருவாக்கு அமையப்பெற்ற நீத்தல் விண்ணப்பத்தைப் பாடியருளினர். உடனே பரமசிவன் தமது பரமாசாரியத் திருக்கோலத்தைக் காட்டியருள, மாணிக்கவாசகப் பெருமான் கண்டு மகிழ்ந்து வணங்கினர். இவ்வாறு சிலதினங்கள் திருவுத்தரகோச மங்கையில் அப்பெருமானரை வழிபட்டு அப்பெருமானருடைய திருவருளின்படி பல திவ்விய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு சோழமண்டலத்தில் விளங்குவதாகிய திருவிடை மருதூரை அடிகள் அடைந்தார்.

அத்தலத்தின்கண் எழுந்தருளியவராகிய மருதீசரைக் கும்பிட்டுக்கொண்டு சுவாமிகள் அங்கு நின்றும் புறப் பட்டுத் திருவாரூரை யடைந்து வன்மீகநாதரைத் தரி சித்து "பூங்கமலத் தயனெடுமால் அறியாத நெறியானே" என்னுஞ் சொற்றொடரை முதலாகவுடைய திருப்புலம் பலைப்பாடியருளினர். அதன்பின் பல தலங்களைச் சென்று சென்று வணங்கி மாணிக்கவாசக சுவாமிகள் சீர்காழிப்பதியை யடைந்தார். அங்கே மலையைப்போல உயர்ந்த கோபுரம் கைலாசகிரிபோல் விளங்குவதைக் கண்டு தரிசித்து உள்ளே சென்று பரமசிவனுடைய பாத தாமரைகளைப் பற்றிக்கொண்டு "உம்பர்கட்கரசே யொழிவற நிறைந்த யோகமே" என்று தொடங்கி "உன்னைச் சிக்கனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே" என்று இறுதி தோறும் முடித்து, பிடித்த பத்தென்னும் திருவாசகத்தை அடிகள் பாடியருளினர். சீர்காழியாகிய இப்புண்ணிய க்ஷேத்திரம் ஆன்மாக்கள் செய்துள்ள தீமைகளை யெல்லாம் தேய்க்குமென்னும் உண்மையைத் தமது உளத்திற் கொண்டு மாணிக்க வாசகசுவாமிகள் சிலநாள் அங்கேயிருந்து தோணி யப்பரை வழிபடுவாராயினர்.

அதன்பின்னர்த் திருவாதவூரடிகள் சீர்காழியை விட்டகன்று, சிதம்பரம் இருக்கும் திக்கை நோக்கி வணங்கி மணிமுத்தா நதிசூழ்ந்த விருத்தாசல மென்னுந்

திவ்விய க்ஷேத்திரத்தை யடைந்து அங்குக்கோயில் கொண்டருளிய விருத்தாசல ஈசுவரரைத் தரிசித்துக் கொண்டு பின்னர், சிவபிரானது திருவருட்டுறையென விதந்து சொல்லப்படும் சிறந்த க்ஷேத்திரமாகிய திரு வெண்ணெய் நல்லூரை யடைந்தார். திருவெண்ணெய் நல்லூரிற் கோயில் கொண்டருளிய பரமசிவனை அடிகள் வணங்கியபின் பல மலைகளையுங் காடுகளையும் பட்டினங் களையுங் கடந்துசென்று திருவண்ணுமலையைச் சேர்ந்தார்.

மலைபோல் உயர்ந்து விளங்கும் திருக்கோபுரத்தை யும் நீண்டமதில்களையும் மாவிலை தோரணங்கள் தொங்கும் திருவாயில்களையும் கமுகஞ்சோலைகளையும் அங்கே கண்டு மாணிக்கவாசக சுவாமிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். "பூர்வத்திற் பிரமவிஷ்ணுக்கள் முறையே முடியையும் அடியையும் தேடிக் காண்டற்கு அதீதமாய் நின்ற பரஞ்சோதி இதுவாகுமல்லவோ! நினைக்க முத்தி தரும் அண்ணுமலை இதுவாகுமல்லவோ!" என்று மனத்தின் கண்ணே சிந்தித்து வணங்கிக்கொண்டு திருக்கோயிலுள்ளே பிரவேசித்தார். அங்கே அருணச லேசுவரர் பரமாசாரிய திருக்கோலத்தைக் காட்டியருள, மணிவாசகப் பெருமான் அனலிடைப்பட்ட மெழுகு போல் மனமுருக உரோமஞ் சிலிர்ப்பச் சந்நிதியில் நின்று:—

" மாலுடன் பிரமன் றேவர் வந்துனக் கடிமையென்(று)
ஓலிடும் பொழுதில் ஆலம் உண்டிருள் கண்ட போற்றி!
மேலிடும் பவநோய் தீர விண்ணவர் மண்ணோர் பச்சைப்
பாலுடன் கலந்துட் கொள்ளும் பனிமலை மருந்தே போற்றி!

நெடியவன் கேழ லாகி நீழ்நிலம் அகழ்ந்துங் காணு
அடிகளென் றலைமேல் வைத்த அருட்பெருங்கடலேபோற்றி!
படியிடம் பரக்கு முண்ணு முலையெனும் பச்சை மேனிக்
கொடியிடங்கொண்டசெம்பொற்குன்றமேபோற்றிபோற்றி!

வென்றிடுங் கன்னி மேதிச் சென்னிவிக் கிரமன் றன்னைக்
கொன்றதன் பாவந் தீரக் குறித்திட வருள்வாய் போற்றி!
அன்று வந்தென்னை யாளும் அணியண்ணு மலையாய் போற்றி!''
என்று தம் பரிவர் லேத்தி இறைஞ்சிய குறையு நாளில்.

திருவண்ணு மலையின் கண்ணே வசிக்கின்ற பெண்க ளெல்லாரும் மார்கழி மாசத்திலே திருவாதிரைப் புண்ணிய தினத்திற்குப் பத்து நாள் முந்தித் திருவா திரை வரைக்கும் வைகறையிலெழுந்து கூட்டமாகக் கூடிக்கொண்டு தடாகங்களிற் சென்று புனலாடுவது வழக்கமாக விருந்தது; இதனை யுணர்ந்த திருவாதவூரடி கள் அந்தப் பெண்கள் அச்சமயத்திற் சொன்ன பான் மையாகத் திருவெம்பாவை யென்னுந் திருவாசகத்தை "ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ் சோதியை"என் றெடுத்துப் பாடியருளினர். அதன் பின்னர் அங்கு வசிக்கும் பெண்கள் விளையாடும் அம்மானையாட்டைக் கண்டு, மாணிக்கவாசக சுவாமிகள் அந்தப் பெண்களின் வாக்காகத் திருவம்மானை யென்னுந் திருவாசகத்தைப் பாடியருளினர்!

அதன்பின் மாணிக்கவாசகர் திருவண்ணமலையை விட்டகன்று காஞ்சிபுரத்தை யடைந்து அங்கு கோயில் கொண்டருளிய ஏகாம்பரநாத சுவாமியையும், முப்பத்திரண்டு தருமங்களுக்குந் தலைவியாகிய காமாக்ஷி யம்மையாரையும் வணங்கிக்கொண்டு, அங்கு நின்றும் நீங்கித் திருக்கழுக்குன்றத்தை யடைந்தார். திருக்கழுக் குன்றம் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின் கண்ணே அடிகள் சென்று தரிசித்தபொழுது, இறையவர் பரமா சாரியத் திருக்கோலத்தையே ஆங்குக் காட்டியருள, எல்லையில்லாத ஆனந்தமுடையவராய் "பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான் உன்நாமங்கள் பேசுவார்'' எனத் தொடங்கி "வந்து காட்டினய் கழுக்குன்றிலே'' என்று இறுதிதோறும் முடித்துத் திருக்கழுக்குன்றப்

பதிகமெனுந் திருவாசகத்தைப் பாடி, சிலதினம் அங்குத் தங்கி அப்பெருமானைத் தரிசித்துக்கொண்டு அத்தலத்தை விட்டுத் தெற்கு நோக்கித் திரும்பிச் சென்றார். தாம் செல்லும் மார்க்கத்திலுள்ள தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு பூஞ்சோலைகளையும் நதிகளையும் வாவிகளையுங் கடந்து சிதம்பரத்திற்கு மூன்று காத தூரத்திலே திருவாதவூரடிகள் வந்தார்.

பொன்போன்ற பூங்கொத்துக்களோடு கூடிய கொன்றை மரங்களும், நட்சத்திரங்கள் பரந்தாலன்ன வெள்ளிய மலர்களுடையனவாய் மந்திகள் கொம்பர்தோறும் வதியப்பெற்றனவாய் விளங்கும் புன்னை மரங்களும், வானளாவி யுயர்ந்த பசிய கமுகுகளும், கிளைகளிற் குயில்கள் வதிந்து இனிது கூவப்பெற்ற மாமரங்களும், வேரிலும் பழுக்கும் பலாமரங்களும், நாரத்தை, பாதிரி, தெங்கு, ஈரப்பலா, மந்தாரம் முதலிய பலவும் செறிந்த சோலைகள் மருங்கே விளங்குவனவும், தாமரைத் தடாகங்கள் விளங்குவனவுமாகிய மாட மாளிகைகளோடு கூடிய திரு வீதிகளைக் கடந்து கோபுரவாயிலைத் திருவாதவூரடிகள் அடைந்தார்.

தமது தலையிற் குவித்த கரங்களோடு திருக்கோயிலினுள்ளே பிரவேசித்தார்; கனகசபையைக் கண்டார்; ஆங்கு ஆனந்ததாண்டவஞ் செய்தருளும் நடராசப்பெருமானை, திருப்பெருந்துறையின்கண்ணே தமக்கு ஞானோபதேசஞ் செய்தருளிய பரமாசாரியத் திருக்கோலமாகக் கண்டு தரிசிப்பாராயினர். "என் ஆன்ம நாயகரே, பொன்னம்பலவாணரே, தமியேன் தேவரீருக்கு அடைக்கலம்" என்று சொல்லியழுதார். திருவாதவூரடிகள் கனகசபையின்கண்ணே சாஷ்டாங்கமாக வீழ்ந்து தமது பிரபு நடராசப்பெருமானுடைய குஞ்சித பாதத்திற் பொருந்தும்படி வணங்கினர்; பின் எழுந்தார், கண்டபத்தென்னுந் திருவாசகத்தைப்பாடினர், திருமூல ஸ்தானத்தில் விளங்கும் சிவலிங்கப்பெருமானாகிய சோதியும், கனகசபையாகிய சிதாகாசத்திலே

திரு நிருத்தஞ் செய்தருளுஞ் சபா நாயகராகிய சோதியும் தம்முள் இரண்டற்ற சிவானுபூதியை யடைந்து ஆன்ம சேட்டைகளற்று ஒரு சித்திரம் போன்றவராய்ப் பரவசப்பட்டு நின்றார். திருவாதவூரடிகள் பரவசராகிக் கை கால் அசைதலின்றிக் கண் இமைத்தலின்றிக் கம்பம் போல நிற்றலைக்கண்ட திருக்கோயிற் காவலாளர்கள் அதிசயமடைந்தவர்களாய் அவரை அணுகி "ஐயா, திருக்கோயில் கபாடபந்தனஞ் செய்யும் சமயமாய் விட்டது. இவ்விடத்தைவிட்டு வெளியே செல்லும்" என்றார்கள். காவலாளர் உரைத்த வார்த்தை மணிவாசகப் பெருமானது காதுகளிற்படவில்லை. அச்சமயத்தில் அடிகள், அண்டத்தே சுத்த மாயா மயமாகிய கனகசபையிலும், பிண்டத்தே தமது லலாடஸ்தானமாகிய புருவமத்தியிலும் முறையே தூல சூக்குமமாக நிகழும் அநவரத தாண்டவத்தை ஞானத்தினாலே தம்முள் ஒப்பத் தரிசித்து, அவ்வழிக் காணத்தக்க துரியாதீதமாகிய சுத்த நின்மல ஒளியின்கட்புக்கு அழுந்தி நெடுநேரம் தம்பம்போல் அசைவற நின்றார். "இவர் கோயிலை விட்டுப்போம் என்று யாம் சொல்லபோகின்றாருமில்லை; ஏதுஞ் சொல்லுகின்றாருமில்லை; இவருக்குப்பைத்தியம் போலும்; இதற்கென்செய்வோம்" என்று கோயிற் காவலர் வருந்தி நிற்கு சமயத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் போன உயிர் மீண்டு வரப் பெற்ற உடம்பைப் போல தம்வசமாகி, இருகரங்களையுந் தஞ்சிரமேற் குவித்து "சிவ சிவ போற்றி" என்றார். பின்னர் அடிகள் கனகசபையை மும்முறை பிரதக்ஷிணஞ் செய்து நடராசப்பெருமானையும் சிவகாமியம்மையாரையும் வணங்கிக்கொண்டு திருக்கோயிலினின்றும் புறப்பட்டு, மேற்குத் திக்கிலுள்ளதாகிய திருப்புலீச்சரத்திற்குச் சென்றார்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருப்புலீச்சரத்தையடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபிரானை வணங்கியபின் அவ்விடம் விட்டகன்று திருநாகேசுரத்

திற்குச் சென்று நாகேச்சுரரைத் தரிசித்துக்கொண்டு சிதம்பரத்தை யடைந்து குலாப்பத்து; கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல், என்னுந் திருவாசகங்களைப் பாடியருளினர். ஆங்குள்ள மகளிர் சுண்ணமிடிப்பதைக் கண்டு அவர்கள் பாடும்பொருட்டுத் திருப்பொற் சுண்ணத்தையும் பாடியருளினர். சிதம்பர தலத் திருவீதியின் கண்ணே மாணிக்கவாசக சுவாமிகள் செல்லும்போது, சிறுமியர் வீதிமருங்கிற் கூடிப்பாடி விளையாடுவதைக்கண்டு அவர்கள் ஓதும்படி திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் என்னுந் திருவாசகங்களைப் பாடியருளினர். அதன் பின்னர், ஒரு சிறுமி தன் தாயை நோக்கி வினவுவதான கருத்தமைந்த அன்னைப் பத்தையும், தும்பிகளை விளித்துச் சொல்வதான திருக்கோத்தும்பியையும், குயில்களை விளித்துக் குயிற் பத்தையும், கிளிகளை விளித்துக் கூறியதாகத் திருத்தசாங்கத்தையும் பாடியருளினர்.

அதன் பின்னர்த் திருவாதவூரடிகள் "புற்றில் வாழரவு மஞ்சேன், பொய்யர்தம் மெய்யுமஞ்சேன்" என்ற தொடக்கத்து அச்சப்பத்தையும் பாடியருளி அச்சிதம்பரத்தின் புறத்தே ஒரு பன்னசாலையை யமைத்து அதன்கண் இருந்துகொண்டு அநுதினமும் நடராசப் பெருமானரைத் தரிசனஞ் செய்து வருவாராயினர்.

உலகமானது முதனூல்களாகிய வேத சிவாகமங்களின் பாரம்பரியப் பொருளையுடைய இத் திருவாசககத்தைப் பாராயணஞ் செய்து, அநாதியாயுள்ள பிறவி நீங்க வந்தவதாரஞ் செய்த மாணிக்கவாசக சுவாமிகளின் இந்த அத்தியற்புத சமர்சாரங்களை யெல்லாம் சிதம்பர வாசிகள் எல்லாரும் தாங்கள் கூடியிருக்குஞ் சபைகள் தோறும் எடுத்துப்பேசி மகிழ்ச்சி யடைவாராயினர். இங்ஙனமாக, மாணிக்கவாசக சுவாமிகள் புத்தர்களைச் சமயவாதத்தில் வென்ற வரலாற்றைக் கூறுவாம்.

௨

# புத்தரை வாதில் வென்றமை.

பரமசிவனுடைய பாதாரவிந்தங்களை இடையீடின்றித் தியானிக்கும் இயல்பினையுடைய ஒரு தபோதனர், புண்ணிய தலங்களைத் தரிசிக்கவும் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்யவும் விருப்பங்கொண்டு, சோழ நாட்டிலுள்ள வளங்களையெல்லாம் கண்டபின் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜமூர்த்தியை வணங்கி அங்கு நின்று புறப்பட்டு, ஈழநாடெனப்படும் இலங்கைக்கு வந்தார். இங்ஙனம் வந்த அந்தத் தபோதனர் இலங்கையின் இராசதானியை யடைந்து தாம் நடக்கும்போதும் நிற்கும்போதும் இருக்கும்போதும் எந்நேரமும் "பொன்னம்பலம் நீடூழி வாழ்க" என்று சொல்லுவாராயினர். இங்ஙனம் இவர் சொல்லிக்கொண்டு திரியும்போது, இதனைக்கேட்ட இலங்கையரசனுடைய ஏவலாளர்கள் பௌத்தனாகிய தங்கள் அரசனிடஞ் சென்று வணங்கி "மகாராசாவே, மிக்க ஒழுக்கத்தோடு கூடிய ஒரு சைவர் இந்தப்பட்டினத்திலே சிலநாளாகச் சஞ்சரிக்கின்றார்; அவர் தம்முடைய உடம்பிலே உருத்திராக்க மாலைகளை அணிந்திருக்கின்றார்; பிச்சையெடுத்து உண்ணுகின்றார்; அவர் நிற்கும்போதும் இருக்கும்போதும் பொன்னம்பலம் நீடூழி வாழ்க என்று சொல்லுகின்றார்" எனக் கூறி நின்றனர்.

அதுகேட்ட அரசன் தன் ஏவலரை நோக்கி "நீவிர் போய் அந்தச் சைவரை இங்கே இட்டு வருதிர்" எனப் பணித்தான்; ஏவலர் உடனே சென்று தபோதனரைக் கண்டு "பெரியவரே, உம்மை வரும்படி எங்க ளரசன் கட்டளை செய்தான்" எனலும், தபோதனர் அவர்களை நோக்கி "நன்மை தீமைகளின்றிப் பிரபஞ்சத்தை வெறுத்துப் பிச்சையெடுத்துண்டுதிரியும் எம்போலியருக்கும் அரசனுக்கும் யாதுந் தொடர்பில்லையே" என்றார்.

இப்படித் தபோதனர் சொல்லக்கேட்ட ஏவலர் "ஐயா, பிரபஞ்சத்தை வெறுத்து நன்மை தீமை இன்றிப் பிச்சை யெடுத்துண்டாலும் இந்நாட்டிலே நீர் சஞ்சரிக்கும்வரையில் எங்களரசனுடைய பிரஜைகளுள் ஒருவராவீர்; ஆனதினால் அரசன் கட்டளைக்கமைந்து எம்முடன் நீர் வருவதே முறைமையாகும்" என்று சொல்ல, தபோதனர் உடன்பட்டு அரசனிடஞ் சென்றார்.

தனது பௌத்த குரு அருகிருப்ப, மந்திரிமாரும் சேனைத்தலைவரும் புடைசூழ, சிம்மாசனத்தில்வீற்றிருந்த ஈழநாட்டரசன் முன்பாக ஏவலருடன் சென்ற தபோதனர் "பொன்னம்பலம் நீடூழி வழ்க" என்று சொல்லிக்கொண்டு, திரிபுண்டரமாகத் தரித்த விபூதியும் புன்முறுவலும் விளங்கும் முகத்தினராய் ஒரு ஆசனத்தில் இருந்தார். இவ்வாறிருந்த தபோதனரை அரசன் பார்த்து "பெரியவரே, 'பொன்னம்பலம் நீடூழி வாழ்க' என்று இப்பொழுது நீர் சொல்லிக் கொண்டு இங்கே இருந்த காரணம் யாது" என்று கேட்க, தபோதனர் அரசனை நோக்கி "வேந்தனே, இதன் காரணத்தைச் சொல்லுகின்றேன் கேட்குதி" என்று பின்வருமாறு சொல்வாராயினர்.

"சோழ ராசனால் யாதுங் குறைவின்றி நீதியோடு பரிபாலிக்கப்படுங் காவிரி நாட்டிலே, புலியூரென்னுந் தலமொன்றுளது; அந்தப் புலியூர் முற்காலத்திலே தில்லைக்காடாகவிருந்தது; அதுவே இப்பூவுலகத்தில் முதன்முதல் உண்டாகிய சிவஸ்தலமாகும்; பூவுலகிற்கு மத்திய ஸ்தானமாக விளங்கும் அந்த ஸ்தலத்திலே பொன்னம்பல மிருக்கின்றது. பொன்னம்பலத்திலே எங்கள் நடராசப்பெருமான் ஆன்மாக்கள் ஈடேறும் வண்ணம், உலகமாதாவாகிய சிவகாமசுந்தரி யம்மையார் வாமபாகத்தில் நிருத்த சாட்சியாக நிற்க, ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுவர்; அந்த ஸ்தலத்திலே சிவ கங்கையென்று ஒரு தீர்த்தம் இருக்கின்றது; முற் காலத்திலே சிங்கவன்மன் என்னுஞ் சோழராச குமாரன்

அந்தப்புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கித் தன்னைப் பிடித்த குஷ்டரோய் நீங்கப் பெற்றவனாய் இரணியவன்மனெனுங் காரணப் பெயருடன் பேரழகுடையவனாய் விளங்கினான்; உலகத்திலே எள்ளளவு புண்ணியஞ் செய்யாதவரும், அந்தச் சிவகங்கையில் மூழ்கி எங்கள் நடராசப் பெருமான் செய்தருளும் ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசிக்கும் பேற்றைப் பெறுவாராயின், அவர்கள் தப்பாது இப் பிறவிப்பிணியினின்றும் நீங்குவார். அரசனே, இன்னுஞ் சொல்லுகின்றேன் கேள்; சிதம் பரத்தின் கண்ணே எங்கள் நடராசப்பெருமான், ஆன் மாக்களுக்கு முத்தி கொடுக்குந் தெய்வம் தம்மைத்தவிரப் பிறவில்லை யென்ற காரணத்தினால், தமது குஞ்சித பாதத்தின் கண் வீரக்கழலைத் தரித்து விருதுக் கொடியையுங் நாட்டிப் பஞ்ச கிருத்திய நிருத்தத்தைச் செய்தருளுகின்றார்; மனம் வாக்குக் காயங்களினாற் சிவனைப் பத்திசெய்யாப் பாவிகளும் தம் சீவிய காலத் தில் ஒருமுறை "பொன்னம்பலம் நீடூழி வாழ்க" என்று சொல்லி விடுவரேல், ஸ்ரீ பஞ்சாக்கரத்தை இரு பத்தோராயிரத்து நூறு தரஞ் செபித்த பெரும் பயனைப் பெறுவர்; ஆதலால் அரசனே, நான் பொன்னம் பலம் நீடூழி வாழ்க என்று சொல்லிக்கொண்டு திரியும் காரணம் இதுவேயாகும்."

தபோதனர் இங்ஙனம் ஈழநாட்டு வேந்தனுக்குச் சிதம்பர மான்மியத்தைச் சொல்லி முடிக்க, அரசன் பக்கத்து இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வனாகிய பௌத்தகுரு மிக்க சீற்றங் கொண்டு தபோதனரைப் பார்த்து "சிறந்த பிடக நூல் மூன்றையும் செய்தருளிய எங்கள் புத்த கடவுளுக்கு மேலான ஒரு தெய்வமும் உலகத்தில் உண்டா! நான் இப்பொழுதே நீர் சொல்லும் அந்தத் தில்லை யென்னும் ஊருக்குப்போய் உங்கள் சைவர்களுடன் சமயவாதஞ் செய்து அவர்களை வென்று, உங்கள் கடவுள் காலிலே கட்டியிருக்கும் வீரக்கழலை யறுத்து, நாட்டிய வெற்றிக்

கொடியையும் அகற்றி, அப்பொன்னம்பலத்தையே எங்கள் புத்தரான்வர் பள்ளி கொள்வதற்கான இடமாக்குவேன்; இந்தக் கருமங்களை யெல்லாம் மூன்று தினத்தில் யான் முடித்து விடுகிறேன்'' என்றான்.

பௌத்தகுரு இந்தப்பிரகாரஞ் சபதஞ் செய்துவிட்டு அரசனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தன்னுடைய சிஷர்களும் மாணாக்கரும் புடைசூழச் சிவிகையின்மீதேறிக்கொண்டு பல ஊர்களையும் கடல்களையும் நதிகளையும் கடந்து சிதம்பரத்தை யடைந்தான்.

அதன் பின்னர்ப் பௌத்தனாகிய ஈழநாட்டு வேந்தன் நால்வகைச் சேனைகளும் மந்திரிமாருஞ் சூழ, தனது ஊமையாகிய ஏகபுத்திரியையும் உடன் கூட்டிக்கொண்டு சிதம்பர ஸ்தலத்திற்குப் புறப்பட்டான். முந்திச் சென்றவனாகிய பௌத்தகுரு சிதம்பர ஸ்தல எல்லையை அடைந்த மாத்திரத்தே, தான் ஏறிச்சென்ற சிவிகையிலிருந்து இழிந்து நடந்து சென்று சிதம்பர ஆலயத்துட்போய் அங்குள்ள மண்டபத்தில் இருந்தான். புத்தகுரு அங்ஙனமிருப்பச் சென்ற ஈழநாட்டு வேந்தனும் ஆங்குச் சென்று தன் குருவைக்கண்டு வணங்கி மிக்க மகிழ்ச்சியோடு அம் மண்டபத்தி லிருந்தான்.

அந்நிய மதத்தர்களாகிய இருவரும் இங்ஙனம் ஆலயத்துட் பிரவேசித்து இருத்தலைக் கண்ட கோயிற் பணியாளர் மிகவும் மனம் வருந்திப் புத்த குருவை நோக்கி "பௌத்தனே, நீங்கள் இந்த ஆலயத்துள் அநுமதியின்றிப் புகுந்து இப்படியிருப்பது முறையல்ல; விரைவிலே இவ்விடம் விட்டுப்போதல் வேண்டும்'' என்று சொல்ல, பௌத்தகுரு "இந்த இடத்திலே சோழமகாராசனுடைய முன்னிலையில் எங்கள் பௌத்த சமயமே உண்மையான சமயமென்றும், சைவசமயம் பொய்யானதென்றும் வாதஞ்செய்து ஸ்தாபித்தலல்லாமல் நாம் இந்த இடத்தை விட்டுப்போக மாட்டோம்'' என்று கூறினான். இப்படிப் பௌத்தகுரு கூறக்கேட்ட

திருக்கோயிற் பணியாளர் யாதும் பேசாதவர்களாய் உடனே கோயிலிலிருந்து புறம் போந்து சிதம்பரத்தின் கண் வசிக்கும் பிராமணர்களுக்கும், பெரியோர்களுக்கும் மற்றுமுள்ளோர்க்கும் அவரவர் வீடுதோறுஞ் சென்று இச் செய்தியைத் தெரிவித்தனர். தில்லை வாழந்தணர் முதலானோர் உடனே திருக்கோயிலில் வந்து ஒருங்கு சேர்ந்து "பௌத்த குருவே, நீவிர் இங்கே வந்திருக்குங் காரணம் என்ன" என்று சிறிது சினத்துடன் வினவ, "சைவர்களாகிய நீவிர் உங்கள் சமய சாத்திரங்களை ஆதாரமாகக் கொண்டு சைவந்தான் உண்மையான சமயமெனத் தாபிப்பீரேல், நாம் அதனைக் கண்டித்து எங்கள் பௌத்த சமயமே மெய்ச்சமயமென வாதித்துப் போதற்கு வந்தோம்" என்று புத்தகுரு விடை கூறினன்.

தில்லைவாழந்தணர் முதலானோர் சிறிது யோசித்துப் பின்னர்ப் புத்தகுருவை அன்றிரவு மாத்திரம் அங்கிருக்கும்படி சொல்லிவிட்டு, சிதம்பரத்தின் கணுள்ள தபோதனர்களுக்கும் பிராமணர்களுக்கும் வேதாகம பண்டிதர்களுக்கும் புலவர்களுக்கும், பெரியோருக்கும் அடுத்தநாட் காலை நடராசதரிசனஞ் செய்தற்கு வருதல் வேண்டுமெனத் திருமுகமனுப்பினர்; பொழுதும் அஸ்தமித்தது.

தில்லைவாழந்தணர் முதலானோர் அன்றிரவு தத்தம் வீட்டில் நித்திரை செய்யும்போது, ஸ்ரீ நடராசப் பெருமான், விபூதி விளங்குகின்ற திருமேனியும் சடாமுடியும் திருக்கரத்திற் பொருந்திய பிரம்பும் உடையராய் ஒரு சித்த வடிவங்கொண்டு கனவில் அச் சிதம்பர வாசிகட்குத் தோன்றிப் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளினர்:—

"அன்பர்களே, வருந்துதல் ஒழிமின்; எமது அன்பனாகிய வாதவூரன் இச்சிதம்பரத்தின் எல்லையில் வந்திருக்கின்றான்; அவனிடம் நீவிர் சென்று இச்செய்தியை அவனுக்குச் சொல்வீரேல், அவன் உடனே இங்கு

வந்து புத்தரை வாதத்தில் வெல்லுவான்; ஆதலின் வாதவூரனை அதிகாலையிற் சென்றழைத்து வருதிர்."

இக் கனவைக் கண்ட எல்லாரும் விழித்தெழுந்து இது எங்கள் நடராசனுடைய திருக்கூத்து என்று நிச்சயித்து அப்பெருமானைக் கைகுவித்து வணங்கித் திருக்கோயில் மண்டபத்தில் வந்து ஒருங்கு கூடித் தாம் தாம் அன்றிரவு கண்ட கனவை ஒருவர்க்கொருவர் சொல்லி மனமுருகினர்.

உடனே தில்லைவாழந்தணர் முதலானோர் மாணிக்க வாசக சுவாமிகள் இருக்கும் பன்னசாலையை யடைந்த போது, அவர் பதுமாசனமாக யோகத்தில் இருப்பதைக் கண்டார்கள். சிறிது நேரஞ் செல்லச் சுவாமிகள் யோகங் குலைந்தெழுதலைக் கண்ட தில்லைவாழந்தணர் முதலானோர் அடிகளை வணங்கி நடராசப் பெருமான் தங்களுக்குக் கனவில் எழுந்தருளித் திருவாய் மலர்ந் தருளிய திருவாக்கை விண்ணப்பஞ் செய்தனர். சபா நாயகருடைய திருவாக்கைச் சொல்லக்கேட்ட திருவாத ஊரடிகள் எம்பெருமானரது திருவருட்டிறத்தை நினைத்து மனங் கசிந்து வியப்பெய்தி, அவர்களுடன் எழுந்தருளிக் கனகசபையை யடைந்து நடராஜப் பெருமானை வணங்கிக் கொண்டு பௌத்தர்களிருக்கும் மண்டபத்தை யடைந்தார்; திருநீறில்லாத முகத்தினை யுடையாராகிய பௌத்தர்களைத் தாம் பார்ப்பதும் பழுதாமெனத் தம் உள்ளத்திற் கொண்டு, அடிகள் தமக்கும் பௌத்தர்கட்கு மிடையே திரை கட்டுவித்து இப்புறம் இருந்தார். சோழ மகாராசனும் தன் சைநியங்கள் மந்திரி முதலானோருடன், பிராமணர் புலவர்கள் பெரியோர் முதலானோரின் மத்தியில் வந்து வீற்றிருந்தான்; சோழமகா ராசனைக் கண்ட ஈழநாட்டு வேந்தன் அவனை வணங்க அவனும் உபசாரவார்த்தை கூறி ஈழநாட்டரசனை இருக்கும்படி பணித்தான். நடக்கப்போகும் சமய வாதத்தைக் கேட்டுச் சரி பிழை சொல்லும்படி பல

அறிஞர்கள் அச்சபையில் மத்தியஸ்தர்களாக வந்திருந்தனர். சபையின் கண்ணே வீற்றிருந்த சோழ மகாராசன் மாணிக்கவாசக சுவாமிகளை வணங்கி "சுவாமீ; பௌத்த மார்க்கத்தைக் கண்டித்துச் சைவத்தை நிலை நாட்டுதல் தேவரீர் கடனாகும்; தோல்வி யுற்ற பௌத்தர்களைக் கழுவேற்றுதல் தமியேனுடைய கடனாகும்" எனலும் மாணிக்கவாசகர் புன்முறுவல் செய்ய, பௌத்தர்கள் திகிலடைந்தனர்.

மாணிக்கவாசக சுவாமிகள் திரைமறைவில் இருக்கின்ற புத்த குருவை விளித்து "நீவிர் இங்கே வந்த காரணம் யாது சொல்லுதிர்" எனலும், குரு பின் வருமாறு சொல்லுகின்றான்:— "நிலைபெற்ற எங்கள் புத்ததெய்வ மல்லாமல் வேறு தெய்வம் எவரும் இல்லை என்பதை நிலைநாட்டி எல்லாரும் காணும் வண்ணம் இந்தப் பொன்னம்பலத்தில் எங்கள் தெய்வத்தைத் தாபித்துப் போகும் நோக்கமாக நாம் வந்தோமேயல்லாமல் வேறு ஏதும் நோக்கங் கொண்டு வந்தேமல்லோம்."

இங்ஙனம் பௌத்தன் சொல்ல எங்கள் மாணிக்க வாசகர் புன்முறுவல் செய்து "பூர்வ புண்ணியஞ் சிறிது மில்லாத பௌத்தனே; முயல் யானையாகப் போவதில்லை; உனது தெய்வத்தின் இலக்கணத்தையும் அத் தெய்வத்தை வழிபடுவோர் பெறும் முத்தியிலக் கணத்தையும் இங்கே எடுத்துச் சொல்லுதி" என்றார்; அது கேட்ட பௌத்தன் சிறிது வெகுட்சி யடைந்து "பிறவிக் குருடராயுள்ளார்க்குச் சூரியனுடைய ஒளியைப் பற்றி எடுத்துக் காட்டுதல் முடியாத காரியமாகும்; எங்கள் கடவுளாகிய புத்தருடைய கீர்த்திப் பிரவாகங்களை யெடுத்துச் சொல்லுவதற்கு என்னுடைய இந்த ஒருநா போதியதன்று; ஆயிரம் நாக்கள் இருந்தாலே அவற்றைச் சொல்லுதல் முடியும்; எங்களிறைவர் கொல்லாமை முதலிய தருமங்களை விளக்கும் நல்ல பிடக நூலைக் கூறி உயிர்களிடத்துப் பேரன்பு உடையவராய்த் தாமே

பல யோனிகள் தோறுஞ் சென்று பிறந்து, அந்த உயிர்களுக்கு இதத்தைச் செய்து, (1) கொலையுடன் படல் (2) கர்த்தாவையுடன் படல், (3) அருவத்திர வியங்களையுடன் படல், (4) அவயவம் குணம் என்னும் பதார்த்தங்களைத் திரவியங்களுக்கு வேறென உடன் படல் என்னும் குற்றங்களை நீக்கி மேன்மை பொருந்திய வெள்ளரசமர நீழலில் உருவத் திருமேனி கொண்டிருப்பர். இதுவே எங்கள் கடவுளின் இலக்கணமாகும். இனி அவரை வழிபடுவோர் சென்று சேரும் முத்தியின் இலக்கணத்தைக் கூறுவோம்; உத்தரத்திற் பொருந்திய கருப்பத்திற்சேரும் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை விஞ்ஞானம் என்னும் பஞ்சகந்தங்களும்கூடித் தேகமானது உலகத்துப் பலவகை அறிவுகளும் உதிக்கப் பெற்று, பின்பு கூறியவாறே அக்கந்தங்கள் ஒவ்வொன்ருக அழிந்து போதலே பிறவித்துன்பமாகும்; அங்ஙனம் கூடிய பஞ்சகந்தங்களும் முற்ருக அழிந்து போதலே முத்தியெனப்படும்" என்று புகன்ருன்.

புத்தகுரு கூறிய கடவுளிலக்கணத்தையும் முத்தியிலக்கணத்தையும் கேட்ட திருவாதவூரடிகள் அருகிலிருந்த சோழமகாராசனைப் பார்த்து "மூழுமகனய் அறிமடம் பூண்டு ஒன்றற்கொன்று ஒவ்வாத வார்த்தைகளைப் பேசும் இப்புத்தகுருவின் அறியாமையிருந்தபடியென்னே" எனக் கூறி, பின்னருஞ் சொல்லுகின்ருர்;— "கொல்லாமை முதலிய தருமங்களுண்டென நல்ல பிடகநூலை உங்கள் கடவுள் கூறினரென இப்பொழுது சொல்லினை; அறிவானது உண்டாகி உண்டாகிக் கணந்தோறும் அழிந்து விடுமென்றுங் கூறினை; சொல்லையும் பொருளையுந் தேடி நூல் செய்வதற்கிடையில் அந்த அறிவானது கணந்தோறும் பங்கமுறுமானல் மயக்கத்தைத்தரும் உங்கள் பிடகநூலை இறைவன் சொல்வது எங்ஙனம்? இந்த நியாயத்தினலே தரும நூலெனவொன்று உன் சமயத்திற்கு இல்லையாகும்; இனி உன் கடவுள் ஆன்மகோடிகளுக்கு இதத்தைச் செய்யும்

பொருட்டு அந்த யோனி பேதந்தோறும் தாமே சென்று பிறப்பர் என்றனை. ஒருவருடைய மயக்கத்தைத் தீர்க்க வந்த அவரும் யோனி வாய்ப்பட்டுப் பிறந்து மயக்கத்தை யடைவரானால், பிறருடைய மயக்கத்தை நீக்குவது எவ்வாறாகும்."

"மேலும் உங்கள் கடவுள் கொல்லநினைக்கவும் மாட்டார் என்றனை; நீ சொன்ன பிரகாரம் அக் கடவுள் யோனிவாய்ப்பட்டுப் பிறக்கும் போது புலியாகவும் நரியாகவும் பிறக்க நேர்ந்தால், புலி நரிகளின் இயற்கை யுணவாகிய மாமிசத்தைப் புசிப்பாரா? அல்லது இயற்கைக்கு மாறாகப் புல்லையும் தழையையுந் தின்பாரா? அன்றியும் உனது பிடகநூலிற் பஞ்சகந்த சகிதமாகி உருவமும் பங்கமுறுமென்றனை; இதுவே உன் மத சித்தாந்தமாயின் உன் கடவுளுக்கு உருவமிருப்ப தெங்ஙனம்? பல யோனி தோறும் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் வண்ணம் நுங்கடவுள் ஒரு வடிவத்தைக கொண்டார் என்று சொல்வது பொருத்தமாகாதாக் காரண வஸ்துவாகிய ஆன்மாவோடு கூடும் காரிய வஸ்துவாகிய உருவம் இவ்வாற்றால் இல்லை யாயின், வெள்ளரசமர நீழலிலே வீற்றிருக்கும் உங்கள் தெய்வத்திற்கு உருவந்தான் இல்லையாயிற்றே. பூரண ஞானமற்ற பௌத்தனே, இங்ஙனம் பல ஆசங்கைகள் இருத்தலால், பஞ்சகந்தங்களுங் கெடுதலே மோக்ஷம் என்று சாதிக்கும் உன் பிடகநூலை யார் செய்தார்? மேலும் இருபத்தொருவர் என்னும் தொகையினையுடைய புத்தரெல்லாரும் யோனிவாய்பட்டுப் பிறத்தலின்றித் தாயாருடைய வயிற்றைக் கீறிக் கொண்டே பிறப்பரென்றனை. பத்துமாசம் பரிவுடன் சுமந்த தாயார் இறக்கும்படி அவர் வயிற்றைக் கீறிக்கொண்டு பிறந்து தாயைக்கொன்ற பாவத்தினால் மீளா நரகிற் கிடப்பாரைத் தெய்வமெனக் கொள்ளலாகா?

"தத்தங் காரண தன்மாத்திரைகளுள்ளே அடங்கி மறைதலையுடைய பிருதுவி முதலிய நான்கு பூதங்களின்

கலப்பினலாகிய வேறுபாடேயல்லாமல் இவ்வுருவத்தின் கண் இதற்கு அந்நியமான உயிரென ஒரு பதார்த்த மில்லையென்று உன்பிடகநூலிற் சொல்லுகின்றாய்; அங்ஙனமாயின் நீ இராக்காலத்தில் நித்திரைசெய்யும் போது அந்த நான்கு பூதங்களின் கலப்பினலாய வேறுபாடு, அதனை உன்னுடம்பில் ஒரு பாம்பு ஏறி ஊர்ந்து செல்லின் அறியாதது என்ன? உடம்பும் உயிருங் கூடுதலினலே அறிவு நிகழுமென்னுங் கொள்கை உனக்கு இல்லையாம்; அன்றேல் உடம்பும் உயிரும் யாது செய்யுமெனில், இவ்வுடம்பு இறந்தவழி அவ்வுயிர் சூக்கும தேகத்தோடு தன் வினை காட்டும் நிமித்தம்பற்றி விரைந்து செல்லும்; சென்றபின் யாது செய்யுமெனில், மேலும் அவ்வாறே தன்வினைக்கீடாகப் பொருந்துவதோர் தூல தேகமும் அவ்வுயிருங்கூடிப் பிறக்கும்; இவ்வாற்றான் உடம்பும் உயிருங் கூடியவழியே அறிவு நிகழக் காணும்; இவ்வனுமான அளவையால், இவ்வுடம்பும் உயிரும் தம் முள்ளே வேறாம் என்னும் நமது சித்தாந்தக் கொள் கையை ஒப்புக்கொள்ளுதி; மேலும் உனது பிடகநூலிற் பிருதுவி முதலிய நான்கு பூதங்களல்லாமல் ஆகாயம் என ஒருபூதமும் அந்த ஆகாயத்திற் பிறக்கும் நாதமும் இல்லையென்கிறாய்; நீ பேசும்பொழுது எழும் ஓசை யானது பிருதுவி முதலிய நான்கு பூதங்களும் கலத்தற்கு இடமாகவுள்ள ஆகாயத்திற் சம்பவிக்குங் காரியமல்லவா? இனி ஆகாயமென ஒன்று இல்லையென நீ சாதிப்பின் அதற்குரிய திசைகளுமில்லையாகும்; அங்ஙனமாக வடக்குத்திசையிலே வெள்ளரசமரம் நிற்கின்றதென நீ சொல்லி அத்திசையை நோக்கி வணக்கஞ்செய்வது எங்ஙனம் பொருந்தும்? புல் மரம் முதலியவற்றை உயி ரில்லாத சடப்பொருளென்று நீ சாதிக்கின்றாய்? பஞ்ச பூதங்களினல் ஆக்கப்பட்ட உடம்போடு கூடிய உயிருள்ள வர்போல் தண்ணீர் முதலியன இல்லாதபோது மரங்கள் தழைத்தலைவிட்டுச் சருகு உதிர்த்துப் பட்டுப்போகக் காண்கின்றோமே? ஆனமையினல் மரம் முதலியன

யாவும் உயிருள்ளனவேயாகும். எங்களிறைவன் ஆன்மாக்கள் பூர்வ ஜென்மங்களிற் செய்த பலவகையான தீவினைப் பயன்களை நுகர்வித்தற்காக ஆக்கிய வடிவங்களே மரங்களென்பதனையும் நீ யறிவாயாக."

"உயிர்களைக் கொல்வது பாவம், பிறர் கொன்றுதர அந்த வூனைப் புசிப்பது பாவமில்லையென்று உன்பிடக நூலிற் சொல்லப்பட்டிருக்கின்றதே; அங்ஙனமாஞல் உனக்கு ஊனை உண்ணும்படி உபகாரஞ்செய்த அவன் பாவத்தை யடைவது உனக்குச் சம்மதமா? காரணமாகிய ஆன்மா நித்தியப் பொருளாய் நிற்ப, காரியப் பொருளாகிய சரீரம் கேடடைவதே முத்தியாகுமென்று சிவாகமங்கள் கூறும்; ஆனல் உடம்பு முயிரும் ஒருங்கு அழிதலே முத்தியென்று நீ யறியாது கூறுகின்ருய்; பஞ்சகந்தங்களும் தீரக்கெடின் அதுவே முத்தியென்று கூறினை; அவ்வைந்தும் ஒருங்கு அழிந்தவழி முத்திபெற்றவர்தாம் யாவர்? தோன்றிய அறிவுதான் முத்தியடைவதென நீ சொல்வையேல், அப் பஞ்சகந்தங்களும் அழிந்தன வல்லவாகும்; ஆகவே முத்தியென ஒன்றில்லை" யென்று இங்ஙனம் திருவாதவூரடிகள் பரமத கண்டனஞ் செய்தனர்.

இவற்றைக் கேட்டமாத்திரத்தே புத்தகுரு மிக்க கோபமுடையவனுய் "நீர் எமக்குக் கடவுளும், நம்மாலடையப்படும் முத்தியும் இல்லையென்று சாதிக்கின்றீரே. அவைகிடக்க, சைவர்களாகிய உங்களுடைய கடவுளின் இலக்கணத்தையும், நீங்கள் அடையவிருக்கும் மோக்ஷத்தின் இலக்கணத்தையும் இச்சபையார் கேட்ப எடுத்துச் சொல்லுதிர்" என்றுகூற, மாணிக்கவாசகசுவாமிகள் பின்வருமாறு சொல்வாராயினர்:—

"நமது கடவுள் கல்லாலவிருக்ஷ நீழலிலே தக்ஷிணமூர்த்தியாகவிருந்து, சநகர் முதலிய முனிவர்களுக்குத் தருமோபதேசஞ் செய்பவர்; தமது திருமேனியைத் தம் அடியவர் பலருந் தரிசித்து வழிபடும் பொருட்டு இக்

கனகசபையின் கண்ணே எக்காலத்தும் ஆநந்தத் தாண்டவஞ் செய்தருளுபவர்; திருமேனியில் விபூதியை யணிந்துள்ளவர்; உமாதேவியாரை வாமபாகமாகவுடையவர்; இப்படிப்பட்ட திருவருளினையுடையவராகிய நம் கடவுளது மகிமை இத்தன்மைத்தென நாம் வரையறுத்துச் சொல்லவும் முடியுமோ? அவருடைய மகிமைப் பிரதாபங்கள் எல்லையில்லாதனவாதலால், அவற்றையெல்லாம் யாம் உனக்கு எப்படிச் சொல்வோம்" என்று மாணிக்கவாசகசுவாமிகள் சொல்லிப் பின்னும் சொல்வதற்கிடையில், புத்தகுரு தடுத்து "நீர் அவைகளையெல்லாம் மிக விரிவாகக்கூறுது அவ்வளவில் நிறுத்தும்; நான் கேட்கும் கேள்விகளுக்கு மாத்திரம் பதில் கூறும்" என்ருன்.

"நுமது கடவுள் கல்லாலவிருக்ஷ நீழலிலிருந்து தருமோபதேசஞ் செய்பவரென்று கூறினீர். அக்கடவுள் தமது கையிற் செபமாலையைக் கொண்டிருப்பது தமக்குந் தியானப்பொருளாகவுள்ள மேலாகிய கடவுள் வேறொருவருண்டென்று கருதியோ? நுமது கடவுள் இவ்வுலகத்தார் தரிசித்து வணங்க ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுவார் என்று கூறினீர். ஆனல் இவ்வுலகத்திலே தம்மினும் மேம்பட்டவர் காணுமிடத்தன்றித் தம்மிற்ருழ்ந்தவர்கள் காணும்பொருட்டுச் சுவேச்சையாக நடனஞ் செய்பவருமுண்டோ? அவர் தமது திருமேனியில் விபூதியைத் தரித்துள்ளவரென்றுமிகமேன்மையாகக்கூறினீர், தமது திருமேனியிலும் பார்க்க விபூதி அதிக பரிசுத்தமுடையதெனக் கருதியோ பூசினர்? அவர் உமாதேவியாரை வாமபாகமாக வுடையவரென்று அதனையும் ஓர் மேம்பாடாகக் கூறினீர். உலகத்திலே பாதி ஆணும் பாதி பெண்ணுமாகிய ஒரு வடிவமும் உண்டோ? அல்லாமலும் உம்முடைய கடவுள் அப்படியிருக்க நீர் இல்லறத்தை விடுத்துத் துறவறத்தை யநுட்டிப்பது அநியாயமல்லவா?" என்று அப் புத்தகுரு கூறிய வார்த்தைகளைக் கேட்டு, மாணிக்கவாசகசுவாமிகள் அவனுடைய அறிவின்மை

யைக் குறித்து நிந்தைச் சிரிப்புச் சிரித்து, "நீகேட்ட வினுக்களுக்கு நாம் கூறத் தகுந்த சமாதானங்கள் வேத சிவாகமங்களிலே கூறப்பட்ட அரிய இரகசியப் பொருள் களாகும். பூர்வ ஜென்மத்தில் தவமொரு சிறிதுமில்லாத புத்தகுருவே! அவைகள் அறிவில்லாத நின் போலி யர்க்குச் சொல்லத் தகுந்தனவல்ல" என்று கூறிப் பின்னருஞ் சொல்லுகின்றூர், "நமது கடவுள் உயர்வு பொருந்திய செபமாலையைத் தமது திருக்கையிற் கொண்டு எழுந்தருளியிருத்தல் இவ்வுலகத்தவர்களுக்கு யோக நிலையை அறிவுறுத்தற்கன்றித் தம்பொருட்டல்ல வென அறியக்கடவாய்; அது எப்படியெனில் மாணுக்கர் களுக்குப் படைக்கலப் பயிற்சியைப் பழக்கும் ஆசிரியர் பயிற்றும்போது தமது கையிற் கொண்ட வாட்படையை நிகர்க்கும். நம் கடவுள் இவ்வுலகத்திலுள்ள சாமானிய நாடகர்களைப் போலத் தம்மிற் கீழ்ப்பட்ட உலகத்தவர் காண அவர்களெதிரே ஊன நடனஞ் செய்பவரென அறியாது கூறினுய். அப்படியன்று, அவர் விறகின் கண்ணே தீயைப்போல உடம்பின்கண் வியாபித்து நின்று உயிர்களையெல்லாம் பஞ்ச கிருத்தியத்தில் அகப் படுத்தி, இகபரங்களில் விட்டாட்டி, ஞானக்கண்ணையுடை யவர்கட்கு மாத்திரம் ஒருவாறு புலப்படும் ஓர் ஞான நாட கரென்றறிவாயாக."

"நமது கடவுள் தம் திருமேனியில் விபூதியணிந்தது எதற்காகவென வினவினுய். அது ஆன்மாக்களது பிறவித்துன்பத்தை நீக்கி அருள் செய்யும் பொருட் டென அறிவாயாக; அது எப்படியெனில் தனது குழந்தையின் கொடிய நோயை நீக்கும் பொருட்டுத் தாய் உட்கொண்ட மருந்தைப்போல விருக்கும்; அற்ப அறிவைக்கொண்டு பல பொய் வார்த்தைகளைக் கற் பித்துக்கூறும் புத்த குருவே, பிறர் துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டுத் தமது திருமேனியில் விபூதி தரித்து அதனைத் தீர்க்க வல்லவர் நமது சிவபிரா

ஞொருவரே யல்லாது வேறு யாராவதுண்டோ? விபூதி யினிடத்துள்ள மகிமையை வேத சிவாகமங்களே யொழிய மற்றொருவராற்சொல்லமுடியாது, தம்பாகத்தில் உமாதேவியாரை வைத்தது குற்றமென்று கூறினாய்; அபக்குவான்மாக்களுக்கு போகத்தையூட்டித் தொலைத் துப் பக்குவம் வருவித்தற் பொருட்டே அங்ஙனஞ் செய் தார். ஆனாற் பக்குவான்மாக்கட்கு யோகம் உதவுதற் பொருட்டு யோக வடிவாயிருந்தார் என அறிவாயாக; பிற விக் குருடர்கள் தம் கையிற் பற்றிய ஊன்று கோலையல் லாமல் வேறொன்றையும் அறிய மாட்டாமை போல, இவ் வினாக்களை மாத்திரம் வினவக்கற்றுக் கொண்டாய். இவற் றிற்கு நாம் சொன்ன சமாதானங்களை நீ அறியமாட்டாய். மேலும், வலிமை பொருந்திய தருமதேவதையாகிய இட பத்தை வாகனமாகக் கொண்ட நம் சிவபிரான் பூவில் மணம்போல உலகெங்கும் வியாபித்து நிற்கும் நிலையை நீ சிறிதும் அறிந்தாயில்லை.''

"தக்ஷிண மூர்த்தியும், அர்த்த நாரீசுரவரும், விந்துநாத சத்தி சிவங்களும்; பிரம விஷ்ணு உருத்திர மகேசுவரரும், சதாசிவ மூர்த்தியும், இப்பேதங்களையெல்லாம் கடந்த நிரா மய நிதியுமாகி அதிசய நிலையை உடைய நங் கடவுள் இக் கனகசபையில் நின்று நடிக்கும் ஆனந்தத் தாண்டவ நிலையை அறிவதல்லாது அவருக்குத் திரு முடியாது, திரு வடி யாது, அவர் தன்மையை யார்தாம் அறியவல்லவர்"

இங்ஙனஞ் சமாதானஞ் சொல்லியபின் வாக்கி றைவியாகிய சரசுவதியைக் குறித்து மாணிக்கவாசக சுவாமிகள், "ஆண் பெண்ணாகிய இருபாலாருடைய வாக்கிலிருந்து வசனிப்பிக்குந் தலைவியாகிய சரசுவதி தேவியே! நீ இந்தப் புத்தகுரு முதலாயினோர் வாக்கி லிருந்து இவ்வாறு பொய் வார்த்தைகளைக் கூறுவிக் கின்றது என்னை" என்று கோபித்துப் பின்னரும் கூறுவாராயினர். "கலைமகளே, பிரமாவின் வாக்கிலிருந்து

சிவபெருமானையே பரமபதியென்று தொகுதியாகிய நான்கு வேதங்களைக் கூறிய நீ இப்பொழுது அதற்கு மாறாக இப்புத்தகுரு முதலானோரின் வாக்கிலிருந்து அவர் பரமபதி யல்லரென்று பொய் மொழிகளைக் கற்பித்துக் கூறுவதென்னையோ? முற்காலத்திலே சிவபெருமானைப் புறக்கணித்துச் செய்த தக்கனது யாகத்தே உடன்பட்டிருந்த நினது மூக்கை வீரபத்திரக் கடவுள் துணித்ததை மறந்து விடலாமா? சிவபெருமானது திருவருள் உலகத்தில் இல்லையென்று மறுத்துக் கூறும் இப்புத்தர்களுடைய நாவை விட்டு நீ சிவாஞ்ஞைப்படி போய்விடு" என்று கூற, அதற்கு நாமகளும் அச்சங்கொண்டு, கபடிகளாகிய புத்தர்களது வாக்கில் நின்றும் நீங்கியபின்னர்; அப்புத்தர்களனைவரும் நஞ்சையுண்டவர்களைப் போல் மனமொடுங்கிச் சரீரம் நடுங்கி ஊமர்களானார்கள்.

இச்சம்பவத்தை ஈழநாட்டரசன் கண்டு மனம் வருந்திச் சிவஞான நூல்களில் மிக வல்லவராகிய மாணிக்கவாசக சுவாமிகளுடைய பாதங்களில் விழுந்து வணங்கி "பிறவி தொடக்கம் பேசக்கூடியவர்கள் இப்பொழுது ஊமரானார்கள். பிறவி தொடக்கம் ஊமையாகிய என்னுடைய மகளுக்கு அவ்வூமைத் தன்மை நீங்கிப் பேசத் தக்க சக்தி வருமானால் தமியேன் தேவரீருக்கு அடிமையாவேன்" என்று விண்ணப்பஞ் செய்ய, மாணிக்கவாசக சுவாமிகள் "அப்பெண்ணை இங்கே சீக்கிரமாக அழைத்து வா" என்றுசொல்ல, பௌத்தராசனும் அவளை அந்தச் சபை முன்பு அழைத்துவந்தான். அப்படியாக வந்து தமக்கு எதிரேநிற்கும் அந்தக் கன்னிகைமீது மாணிக்கவாசக சுவாமிகள் அருட்பார்வைசெய்து அதிக சமீபத்தில் அழைத்து இருத்தி "மகளே, பயத்தினால் மனம் நடுங்கி இங்கேயிருக்கும் புத்தகுரு நமது கடவுண்மீது குற்றமாக வினாவிய வினாக்களுக்கெல்லாம் இனி நீயே சமாதானங் களைச் சொல்லுவாயாக" எனக்கட்டளை யிட்டார்.

புத்தர்கள் வினவிய தர்க்க வினாக்களுக்கெல்லாம் அங்கே வந்திருந்த அந்தக் கன்னிகையே, வேத சிவாகமங்களைக் கற்றுணர்ந்த மகா பண்டிதர்களைப் போல எதிருத்தரங் கூறினாள். அப்பொழுது மாணிக்கவாசக சுவாமிகள், அவ்வினாக்களையும் அவற்றின் சமாதானங்களையும் மற்றையோர்கட்கும் அறிவுறுத்த விரும்பி, கன்னியர்கள் தம்முட்கூடிக் கைகொட்டி விளையாடும் சாழல் விளையாட்டாக "பூசுவதும் வெண்ணீறு" என்றெடுத்துத் திருச்சாழலென்னும் திருவாசகத்தைப் பாடியருளினர்.

ஈழமண்டலத் தரசனாகிய புத்தராசன் தான்முன் செய்துகொண்ட வாக்கின்படி ஸ்ரீ பஞ்சாக்கரத்தைச் செபித்து விபூதியைத் தரித்து மாணிக்கவாசக சுவாமிகளை வணங்கி அவருக்கு அடியவனாயினான். சோழராசனும் தில்லைவாழந்தணர்களும் "பொன்னம்பலம் நீடூழி வாழ்க" என்று துதித்து; மாணிக்கவாசக சுவாமிகளை வணங்கினார்கள்; ஈழநாட்டரசன் உருத்திராக்க மாலைகளையும் விபூதியையும் அணிந்து சைவனாகிய பின்னர், மாணிக்கவாசக சுவாமிகளை நோக்கி "சுவாமி, இப்புத்தர்களுக்கெல்லாம் இப்பொழுது நேர்ந்த ஊமைத்தன்மையை நீக்கியருள வேண்டும்" எனப் பிராத்தித்தான்.

சோழமகாராசாவும் தில்லைவாழந்தணர் முதலியோரும், புத்தராசன் வேண்டிக்கொண்ட பிரகாரம் அப்புத்தர்களின் ஊமைத்தன்மையை நீக்கியருள வேண்டுமென அன்போடு வணங்கினார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் அதற்கிரங்கி மனமகிழ்ந்து கிருபாநோக்கஞ் செய்ய, அப்புத்தர்களின் ஊமைத்தன்மை நீங்கியது. அவர்கள் மாணிக்கவாசக சுவாமிகளை வணங்கி "சைவாசாரியரே, நாம் பூர்வ சன்மங்களிலே மிகுந்த தீவினைகளைச் செய்திருந்தமையால் இதுகாறும் குற்றமற்ற விபூதியைத் தரித்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தைச் செபிக்கப்பெற்றிலேம்; ஆயினும் பூசத்தக்க விபூதியோடு அணியத்தக்க உருத்திராக்க மாலைகளையும் காவி உடையையும் எமக்கு இனித்

தந்தருளும்; எமது துவராடைகளை அக்கினியிலிட்டுச் சுட்டு விடுக'' என மிகச் சமீபத்திற் சென்று வணங்கி விண்ணப் பஞ் செய்தார்கள்.

மாணிக்கவாசகசுவாமிகள் இப்புத்தர்கள் பூர்வ புண்ணிய முடையவர்களெனத் தமது திருவுள்ளத்திற் சிந்தித்துத் திருப்புன்முறுவல் செய்து, விபூதியையும் உருத்திராக்க மாலைகளையும் தமது திருக்கரத்தினால் அவர் கட்கு அணிந்து அவர்களுடைய துவர் வஸ்திரங்களை அக்கினிக் கிரையாகக் கொடுத்தனர்.

மாணிக்கவாசக சுவாமிகளும், தில்லைவாழந்தணர் களும், விபூதியை யணிந்த புத்தர்களாகிய அந்திய சைவர்களும் சோழ மகாராசாவும் ஈழநாட்டரசனும், நடராசமூர்த்தியின் சந்நிதானத்திற் சென்று வணங்கி னார்கள். பல நதிகள் சமுத்திரத்திற் சேர்ந்து அந் நீரோடு கலந்து தம்மியல்பு முழுவதுங் கெட்டு அச் சமுத்திர நீரேயாய் பின் மீளாதவாறு, பஞ்சகந்தங் களும் முற்றக் கெடுதலே முத்தியென்று கூறியுழலும் புத்தர்கள் இங்ஙனம் தில்லைமாநகரை யடைந்து கனக சபையைத் தரிசித்து அன்போடு வணங்கிச் சைவ ரானார்கள்.

கனகசபையை விட்டு நீங்கிய பின்னர் மற்றையோ ரெல்லாரும் தத்தமிடங்களுக்குச் செல்ல, மாணிக்கவாசக சுவாமிகள் திருப்புலீச்சரத்தில் வீற்றிருக்கும் சிவபெரு மானுடைய பாதங்களை வணங்கித் தமக்கும் பிறர்க்கும் நன்மை மிகும்படி அங்கே சிவயோகத்திலிருந்தார். தில்லைவாழந்தணர்கள் "சுவாமீ, நீர் எம்பொருட்டு எப்பொழுதும் இங்கேயே இருந்தருளும்'' என்று கூறித் தத்தம் இல்லங்களுக்குச் சென்றார்கள்.

சோழ மகாராசனும், ஈழதேசத்தரசனும் புத்தர் களாகிய அந்திய சைவர்களும், சமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகளின் முன்சென்று வணங்கி

விடைபெற்று அவ்விடத்தை விட்டகன்று சோழமகாராசாவின் அரண்மனையிற்சிலநாட்கள் தங்கியிருந்தார்கள்; பின் தில்லைமாநகரையே தமது வாசஸ்தானமாகக் கொண்டு அங்கிருந்தனர்.

## திருவடி பெற்றமை.

இங்ஙனம் பௌத்தர்களைச் சமயவாதத்தில் வென்ற பின் மாணிக்கவாசக சுவாமிகள் திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி, அச்சோப்பதிகம், யாத்திரைப் பத்து என்னுந் திருவாசகங்களைப் பாடியருளி, தமது அகத்தரிசனத்துக்கு அகப்படும் அறிவுருவாகிய சிவத்தை ஒரோருகால் மறந்து தேடுதலும், தேடிய வழிக் காணது திகைத்தலும், பின்னர்க் கண்டு தெளிதலுமாகிய ஆன்மபோதச் சேட்டைகளைப் பொருந்தி அவற்றால் துன்புறுதலில்லாதவராய்ச் சதா தரிசன மெனப்படும் பேரின்ப வாழ்வையுடைய சிவஞானச் செல்வராயினர். சிதம்பர தலமே மேலாகிய சிவலோக மென்பதை அவர் தமது அநுபூதியிற் கண்டு தெளிந்தார்.

மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு சிவயோக சாதனைசெய்துகொண் டிருக்கையில், பொன்னம்பலத்தில் தாண்டவஞ் செய்தருளும் நடராசப் பெருமானர் ஆன்மாக்கள்மீது கொண்டுள்ள பேரருள் காரணமாக, ஒருநாள் பூணுல் விளங்கும் திருமார்பும் வெள்ளேடு பொருந்திய திருக்கரமுமாகப் பிராமண வடிவங்கொண்டு தமது அருமைத் திருவடிகள் நிலத்திற் பொருந்த நடந்தருளித் திருப்புலீச்சரத்திற்குச் சென்று திருவாதவூரடிகட்கெதிரே நின்றார்.

திருவாதவூரடிகள் தமக்கெதிரே நிற்கும் சிவப் பிராமணரை நோக்கி முகமலர்ந்து 'ஐயரே, இப்படி யிரும்' என, அவர் ஒரு ஆசனத்திருப்ப "வேதியரே

நீர் எங்கிருப்பது" என்று வினவ, சில மறையவர் "நாம் வசிப்பது பாண்டிநாடு" என்று சொல்லக் கேட்ட அடிகள் மிக்க பரிவுடையவராய் "மறையவரே, நீர் இப்பொழுது இங்கே வந்த காரணம் யாது" என வினவ, உம்மைத் திருப்பெருந்துறையில் அடிமை கொண்டருளிய ஆன்மநாதசுவாமியின் ஆஞ்ஞைப்படி இங்கே வந்தோம்; சோமசுந்தரக் கடவுளை வேதமாகிய வெண்பரியின்மீது நீர் எழுந்தருளச்செய்த மகா விசேடத்தினற் பாண்டிநாடு எவ்வகையான குறைவு மின்றி வாழ்வோடு கூடியிருக்கின்றது; நீர் திருப் பெருந்துறையினின்றும் புறப்பட்டுத் திருக்கழுக்குன்ற மெனப்படும் திவ்விய ஸ்தலத்தைத் தரிசித்துக்கொண்டு இச் சிதம்பரத்தை யடைந்து இங்கே சமயவாதஞ் செய்யவந்த புத்தர்களை வென்றீர் என்ற இந்த வரலாறுகளை யெல்லாம் கேள்வியுற்றுப் பாண்டிநாட் டார் மிக்க மகிழ்ச்சியுடன் இருக்கின்றார்கள்; இனி நாம் இங்கே இப்பொழுது வந்த காரணத்தைச் சொல்லுகின்றேம்; நீர் இறைவன்மீது பத்திமேலீட்டி னற் பாடிய அதியற்புத மதுர வாசகமாகிய திரு வாசகத்தை ஏனைய ஆன்மாக்களும் படித்து ஈடேறுதல் வேண்டும்; ஆதலால் இத் திருவாசகங்களை நீர் சொல்ல நாம் எழுதலாமென எண்ணி வந்தேம்" என்று சிவப் பிராமணர் கூறியருளினர்.

சிவவேதியர் திருவாக்கின் வண்ணம் மாணிக்கவாசக சுவாமிகள் அனலிடைப்பட்ட மெழுகென மனமுருக வுரு கத் தாம்பாடிய திருவாசகங்களை யெல்லாம் முறையே சொல்ல, அம்பலத்தாடுமையர் தமது அருமைத் திருக்கரங் களில் ஏடு எழுத்தாணி என்னுமிவைகளைப் பரித்தவராய் அவற்றையெல்லாம் எழுதி முடித்தார். எழுதி முடித்த பின் சிவப்பிராமணர் மணிவாசகரைப் பார்த்து "அன்பரே, சிவகாமசுந்தரி சமேதராகிய நடராஜப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஒரு கோவை பாடவேண்டும்." என்று கேட்ப, அடிகளும் அதற்கிசைந்து திருக்கோவையாரைப் பாட, ஐயரும்

உடனே எழுதிமுடித்தனர். எழுதிமுடித்தபின் ஏட்டையுங் கட்டிக்கொண்டு ஐயர் மின்னல் மின்னி மறைந்தாற்போல, உடனே மறைந்தருளினர். தமக் கெதிரே நின்று தாம் சொல்லச் சொல்லத் திருவாசகந் திருக்கோவையாரென்னு மிவைகளை எழுதிக்கொண் டிருந்த ஐயர் மின்னென மறைந்தமையைக் கண்ட மணிவாசகப்பெருமான் திகைத்தார்; உடனே எழுந்து ஓடிச்சென்று எங்குந்தேடினர்; கண்டிலர். சிறிது சிந்தித் தார்; "இங்கே எழுந்தருளி வந்தவர் எம்பெருமானென் பதை முந்தி யறிந்திலேனே! சுவாமீ, என்னைத் தன்னந் தனியே விட்டு எங்கே யொளித்திருக்கின்றீர்" என்று கண்ணீர் பொழிந்தார்; மண்மேல் விழுந்து புரண்டார்; பின்னரெழுந்தார்; பரந்த சிவானந்தமாகிய சமுத்திரத் திற் படிவாராயினர்.

இவ்வாறாக, கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி யாகிய நடராசப்பெருமானர் உடனே கனகசபையை அடைந்தருளி, ஆங்குத் தம்மைத் தரிசிக்கும் வண்ணம் வந்துள்ள அரிபிரமேந்திராதி தேவர்களை நோக்கி "எமது அடியவனாகிய வாதவூரன் பாடிய இந்த இனிய பாடல்களைக் கேளுங்கள்" என்று திருவாசகம் திருக் கோவையார் என்னும் இரண்டினையும் அத்தேவர்கள் கேட்கும்படி திருவாய் மலர்ந்தருளினர். அதன்பின் சபாநாயகர் திருக்கோவையாரின் இறுதியில் "வாதவூரன் சொல்லப் பொன்னம்பலவன் எழுதியதாகும்" எனத் தமது அருமைத் திருக்கரத்தினல் வரைந்து திருமுறை யைச் சேமித்து, மாணிக்கவாசக சுவாமிகளின் மெய் யன்புத் திறத்தை ஆன்மகோடிகள் உணர்ந்து உய்ய வேண்டுமென்ற திருவுள்ளக் குறிப்பினாற் பொன்னம் பலத்துள்ள பஞ்சாக்கரப்படியில் வைத்தருளினர்.

அடுத்தநாட் புலரிக்கால பூசை செய்யும் வண்ணம் அங்கு வந்த ஆதிசைவர், பஞ்சாக்கரப்படியில் ஒரு ஏடு இருப்பக்கண்டு ஆச்சரியமடைந்து, அது தெய்விக

மென நினைந்து உடனே சிதம்பர வாசிகட்கெல்லாம் இந்தப் புதுமையைத் தெரிவித்தார். பூசை செய்யும் அந்த வேதியர் சொல்லக் கேட்டாரெல்லாரும் விரைவிற் பொன்னம்பலத்தை யடைந்து பார்த்தபோது பஞ்சாக்கரப்படியிற் புத்தகமிருக்கக் கண்டு "அகாலத்திலே அரிபிரமேந்திராதி தேவர்களும் இங்கு அணுகுதல் அசாத்தியம்; ஆதலால் இது தெய்வீகமாக இருத்தல் வேண்டும்" என மதித்து "இத்திருமுறை வடமொழியிலுள்ள சைவாகமமோ, இன்றேற் செந்தமிழ்நூலோ என்பதை அறிவேம்" என்றனர். அங்கு நின்றோருள் ஒரு அன்பர் பெரியோர் சொற்படி மலர்கொண்டு அத்திருமுறையை அருச்சித்து எடுத்துக் கட்டவிழ்த்து, சிவபுராணம், கீர்த்தித் திருவகவல் முதலிய நான்கு திருவாசகங்களையும் ஓதினர். எல்லாரும் அற்புதத்துடன் மனமுருகக் கேட்டுக்கொண்டு நின்றனர்; அந்த அன்பர் எஞ்சிய திருவாசகங்களையும் திருக்கோவையாரையும் ஓதி முடித்தார். முடிவிடத்து "வாதவூரன் சொல்ல, பொன்னம்பலவன் எழுதியதாகும்" என்று வரைந்திருப்பக் கண்டு எல்லாரும் நடராசப் பெருமானின் பேரருட்டிறத்தை வியந்து மனமுருகினர்.

பொன்னம்பலத்தின்கண்ணே கூடிய அன்பர்களெல்லாரும் திருவாசகம் திருக்கோவையா ரென்னுமிரண்டினையும் கேட்டு "வீட்டு நெறிக்கு இனிச்சிவநூல் வேறும் வேண்டுமோ" என வியந்துகொண்டு "இவற்றின் பொருளை அந்த மாணிக்கவாசக சுவாமிகளே சொல்ல, நாம் நேரிற் கேட்போம்" என்று கூறி அவருடைய பன்னசாலையை யடைந்தனர். அடைந்தவர்கள் திருமுறையை மாணிக்கவாசக சுவாமிகள் முன்னிலையில் வைத்துவிட்டு, பொன்னம்பலவர் செய்த திருவிளையாடலைச் சொன்னார்கள். உடனே மாணிக்கவாசக சுவாமிகள் மனம் நெக்கு நெக்குருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தபாஷ்பஞ் சொரிய நின்று "சுவாமீ,

நாயேனுடைய புன்பாடலையும் தேவரீர் ஏற்றருளத் தமியேன் என்ன புண்ணியஞ் செய்தேனோ" என்றார்; அப்பொழுது அங்கு நின்றோர் "சுவாமீ, திருப்பாடலின் பொருளை அடியேங்களும் அறியும்வண்ணம் நீரே சொல்லவேண்டும்" என்று பணிவுடன் கேட்ப, மாணிக்கவாசக சுவாமிகள் மிக்க மகிழ்ச்சி யுடைய வராய், "நீவிரெல்லீரும் வாருங்கள்; நாம் அந்தப் பொன்னம்பலத்துக்குச் சென்று அங்குத்தானே இவற்றின் அர்த்தத்தைச் சொல்லிவிடுகின்றோம்" என்று அவர்களையும் அழைத்துக்கொண்டு கனகசபையை அடைந்தார்; அடைந்தமாத்திரத்தே மாணிக்கவாசக சுவாமிகள் "இந்த நடராசப் பெருமானாரே எமது பாடலிற் பிரதிபாதிக்கப்பட்ட தத்துவப் பொருள்" என்று சுட்டிக்காட்டிக்கொண்டு கனகசபையின் கண்ணே பிரவேசித்தார்; நடராசமூர்த்தி தமது மெய் யன்பரைப் பாலுடன்கலந்த நீர்போலத் தம்முடன் இரண்டறச் சேர்த்தருளினார்.

சரியையாளர்; கிரியையாளர், ஞானிகள், யோகிகள் எனப்படும் இவர்களும், சிதம்பரவாசிக ளெல்லோரும் திருவாசகந் திருக்கோவையாரெனப்படும் திவ்விய பிர பந்தங்களின் மெய்ப்பொருளைத் திருவருட்டிறத்தால் உணர்ந்தார்கள்.

"பூதல மாதும் வாழ்க பொன்மழை பொழிந்து வாழ்க
வேதவா கமமும் வாழ்க வேந்தர்செங் கோலும் வாழ்க
தீதிலஞ் செழுத்தும் நீறும் சிவனடி யாரும் வாழ்க
வாதவூ ரிறைபு ராணம் படித்தவர் கேட்டோர் வாழ்க"

முற்றும்.

உ

# திருவாசகம்.

[திரட்டு]

## நூற்சிறப்பு.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

## சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்.*

நமச்சிவாய வா அழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாழ்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாழ்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாழ்வாழ்க
ஏக னனேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னும்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னுற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோலபோர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்தமலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளாத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி லுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*

## திருச்சதகம்.

*திருச்சிற்றம்பலம்.*

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதான் னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே, (1)

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லானரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே. (2)

தவமே புரிந்திலன் தண்மல ரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேனின் திருவடிற்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்கெம் பரம்பரனே. (3)

புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே, (4)

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா அன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. (5)

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றாய் யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே. (6)

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதா லுடம்பெல்லாங் கண்ணாய்க் கண்ணீர்
வெள்ளந்தான் பாயாத னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. (7)

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்
மேவினோம் அவனடியா ரடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே. (8)

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. (9)

*திருச்சிற்றம்பலம்.*

## நீத்தல் விண்ணப்பம்.

*திருச்சிற்றம்பலம்.*

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம் பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய் வியன் மூவுலகுக்
கொருதலைவா மன்னு முத்தர கோசமங்கைக் கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலிபவனே.

ஏசினும் யானுன்னை யேத்தினு மென்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம் பவள வெற்பின்
தேசுடையா யென்னை யாளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாயமு துண்ணக் கடையவனே.

*திருச்சிற்றம்பலம்.*

## திருவெம்பாவை.

*திருச்சிற்றம்பலம்.*

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்கன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னே யென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். (1)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் மளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார் யாம் ஆரேலோ ரெம்பாவாய். (2)

முத்தன்ன வெண்ணகையாய் முன் வந்தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். (3)

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளி மொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். (4)

மாலறியா நான் முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்

பாலூறு தேன் வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (5)

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணுமே
போன திசை பகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான் வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். (6)

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றெ வாய்திறப்பாய்
தென்னாவென்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (7)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய் திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். (8)

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக் கேங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். (9)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண் முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓதவுலவா வொரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்ரு ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (10)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல் பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீருடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடைந்த மணவாளா
ஐயா நீ யாட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (11)

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்த நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகளும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (12)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (13)

காதார் குழை யாடப் பைம்பூண் கலனுடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளைதன்
பாதத் தினம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (14)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (15)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னியவ ணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (16)

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் மில்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடிநலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் (17)

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்

பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளி சேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூப்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (18)

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப் போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய். (19)

போற்றியருளுக நின் னாதியாம் பாதமலர்
போற்றியருளுக நின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா லான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (20)

*திருச்சிற்றம்பலம்.*

## திருப்பொற்சுண்ணம்.

*திருச்சிற்றம்பலம்.*

முத்து நற் றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைமின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சிந்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடற்பொற் சுண்ண மிடித்துநாமே. (1)

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
        பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
        வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
        குனிமின் றொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
        செம்பொன்செய் கண்ண மிடித்துநாமே. (2)

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
        தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கும்
        எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
        ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தர மாளுமை யாள்கொளுநற்
        கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே. (3)

காசணி மின்க ளுலக்கை யெல்லாங்
        காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
        நின்று நிலாவுக வென்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
        திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
        பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (4)

அறுகெடுப் பாரய னும்மரியும்
        அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
        நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்த வில்லி
        திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
        காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (5)

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
        உலகமெலா முரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
        காண வுலகங்கள் போதாதேன்றே

நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் கண்ண மிடித்துநாமே. (6)

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
நாமுமவர் தம்மை யார்ப்ப வார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே. (7)

வாட்டங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துண்டந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (8)

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கை பற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (9)

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (10)

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
கரடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (11)

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (12)

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமைய னெம்மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (13)

சங்க மரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழையீர் சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (14)

ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல

கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (15)

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவக னாமங்கள் பாடிப் பாடிச்
செய்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. (16)

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (17)

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல் பாடி
யேழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றுடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே. (18)

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றுடு மாவம்பாடி
யீதற்குச் சுண்ண மிடித்துநாமே. (19)

வேதமும் வேள்வியு மாயினர்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினர்க்குச்
சோதியு மாயிரு ளாயினர்க்குத்
துன்பமு மாயின்ப மாயினர்க்குப்
பாதியு மாய்முற்று மாயினர்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினருக்
காதியு மந்தமு மாயினருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (20)

*திருச்சிற்றம்பலம்*

## அன்னைப்பத்து

*திருச்சிற்றம்பலம்*

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனு ரன்னே யென்னும்.

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னிய ரன்னே யென்னும்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே யென்னும்

*திருச்சிற்றம்பலம்*

## திருப்பள்ளியெழுச்சி

*திருச்சிற்றம்பலம்*

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் றிருமுகத் தெமக்கருள் மலரும்
எழினகை கொண்டுநின் றிருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையா
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (1)
அருணனிந் திரன்றிசை யணுகின விருள்போய்
அகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்

கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை யறுபத முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே !
அருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. (2)

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (3)

இன்னிசை வீணைய ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (4)

பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. (5)

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே

இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே (6)

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் திருவுரு இவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்ன
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (7)

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங்காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே (8)

விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (9)

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர் ந்தமெய்க் கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (10)

*திருச்சிற்றம்பலம்.*

## கோயின் மூத்த திருப்பதிகம்.

*திருச்சிற்றம்பலம்.*

உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்பதானு லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்ருளைப் புரியாய்பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும்வண்ணம் முன்னின்றே.

நல்கா தொழியா நமக்கென்றுன் நாமம்பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வரய்குழரு வணங்கா மனத்தா நினைந்துருகி
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே.

*திருச்சிற்றம்பலம்*

## அடைக்கலப்பத்து.

*திருச்சிற்றம்பலம்.*

செழுக்கமலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்தடியே னுடையாயுன் னடைக்கலமே.

வழங்கு கின்றுய்க் குன்னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின்றே னுடையா யடியேனுன் னடைக்கலமே.

*திருச்சிற்றம்பலம்.*

## திருக்கழுக்குன்றப் பதிகம்

*திருச்சிற்றம்பலம்.*

பிணக்கி லாதபெ ருந்துறைப்பெரு மானுன் னுமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந் துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை யாமலென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோலநீ வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.

பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத சழக்க னேனுனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு நாயினுங் கடையாயவெங்
கட்ட னேனை யுமாட்கொள் வான்வந்து காட்டினுய் கழுக்குன்றிலே.

*திருச்சிற்றம்பலம்.*

## குழைத்தபத்து.

*திருச்சிற்றம்பலம்.*

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவாயுடையாய் கொடு வினையேன், உழைத்தாலுறுதி யுண்டோதா னுமையாள் கணவா எனை யாள்வாய், பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ பிறைசேர் சடையாய் முறையோவென், றழைத்தா லருளா தொழிவதே யம்மா னேயுன் னடியேற்கே.

அழகே புரிந்திட் டடிநாயே னரற்று கின்றே னுடையானே
திகழா நின்ற திருமேனி காட்டி யென்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதமெனக்குப் புராணநீதந் தருளாதே
குழகா கோல மறையோனே கோனே யென்னைக் குழைத்தாயே.

*திருச்சிற்றம்பலம்.*

## அச்சப்பத்து.

*திருச்சிற்றம்பலம்.*

புற்றில்வா ளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாதநண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னையுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே.

கோணிலா வாளியஞ்சேன் கூற்றுவன் சீற்ற மஞ்சேன்
நீணிலா அணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்தமாட்டா
ஆணலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே.

*திருச்சிற்றம்பலம்.*

## திருவேசறவு.

*திருச்சிற்றம்பலம்,*

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனுயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுரு முயிர் வாழ்க்கை பொறுத்தன்றே வெறுத்திடவே.

*திருச்சிற்றம்பலம்.*

## திருப்புலம்பல்.

*திருச்சிற்றம்பலம்.*

பூங்கமலத் தயனெடுமா லறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறுவெண் ணீருடி
ஓங்கெயில்சூழ் திருவாரு ருடையானே அடியேனின்
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே.

சடையானே தழலாடி தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையா யடியேனுன்
உடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே.

உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

*திருச்சிற்றம்பலம்.*

## திருப்படையெழுச்சி

*திருச்சிற்றம்பலம்,*

ஞானவா ளேந்து மையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறு மையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநா மாயப்படை வாராமே.

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோநா மல்லற்படை வாராமே.

*திருச்சிற்றம்பலம்.*

## திருப்படை யாட்சி

சீவோபாதியொழிதல்.

*திருச்சிற்றம்பலம்.*

கண்களிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே
காரிகையாளர்தம் வாழ்விலென் வாழ்வு கடைப்படுமாகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப் பாதமிரண்டும் வணங்குதுமாகாதே
பண்களிகூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன்னாடுடை யான்படை யாட்சிகள் பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படுமாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே, (1)

ஒன்றினெ டொன்றுமொ ரைந்தினெ டைந்து முயிர்ப்பறு மாகாதே
உன்னடி யாரடி யாரடியோமென வுய்ந்தன வாகாதே
கன்றைநினைந்தழு தாயென வந்த கணக்கது வாகாதே
காரண மாகும னுதிகுணங்கள் கருத்துறுமாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்க நடந்தன வாகாதே
நாமுமெ லாமடி யாருட னெசெல நண்ணுது மாகாதே
என்றுமெ னன்புநி றைந்தப ராவமு தெய்துவ தாகாதே
ஏறுடையானெனை யாளுடை நாயகனென்னுள் புகுந்திடிலே. (2)

பந்தவி கார குணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே
பாவனை யாயக ருத்தினில் வந்த பராவமு தாகாதே
அந்தமி லாதஅ கண்டமு நம்முள கப்படு மாகாதே
ஆதிமுதற்பர மாய பரஞ்சுட ரண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை சிந்திடு மாகாதே
சேலன கண்க ளவன்திரு மேனி திளைப்பன வாகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துய ரேகுவ தாகாதே
என்னுடை நாயக னுகியவீச னெதிர்ப்படு மாயிடிலே. (3)

என்னணி யார்முலை யாகமளைந்துட னின்புறுமாகாதே
எல்லையின் மாக்கரு ணைக்கட லின்றினி தாடுது மாகாதே
நன்மணி நாதமு ழங்கியெ னுள்ளுற நண்ணுவ தாகாதே
நாதன ணித்திரு நீற்றினை நித்தலு நண்ணுவ தாகாதே
மன்னிய அன்பரி லென்பணி முந்துற வைகுவ தாகாதே
மாமறை யும்மறி யாமலர்ப் பாதம்வ ணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மல ரென்றலை யெய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மானரு ளீச னெழுந்தரு ளப்பெறிலே. (4)

மண்ணினின் மாயை மதித்து வகுத்த மயக்கறு மாகாதே
வானவ ரும்மறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
கண்ணிலி காலம னைத்தினும் வந்த கலக்கறு மாகாதே
காதல் செயும்மடி யார்மன மின்று களித்திடு மாகாதே
பெண்ணிலி யாணென நாமென வந்த பிணக்கறு மாகாதே
பேரறி யாதவ னேகபவங்கள் பிழைத்தன வாகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை யெய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மானரு ளீச னெழுந்தரு ளப்பெறிலே. (5)

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து பொழிந்திடு மாகாதே
மின்னிய னுண்ணிடை யார்கள்கருத்து வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழு மோசையி லின்ப மிகுத்திடு மாகாதே

தன்னடி யார்அடி யென்றலைமீது தழைப்பன வாகாதே
தானடி யோமுட னேயுய வந்து தலைப்படு மாகாதே
இன்னிய மெங்கு நிறைந்தினிதாக வியம்பிடும் மாகாதே
என்னைமு னாளுடை யீசனெனத்த னெழுந்தரு ளப்பெறிலே. (6)

சொல்லிய லாதெழு தூமணி யோசை சுவைதரு மாகாதே
துண்ணென வென்னுள மன்னியசோதி தொடர்ந்தெழுமாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த பராபர மாகாதே
பண்டறி யாதப ரானுபவங்கள் பரந்தெழு மாகாதே
வில்லிய னன்னுத லார்மய லின்று விளைந்திடு மாகாதே
விண்ணவ ருமறி யாதவி ழுப்பொருளிப்பொரு ளாகாதே
எல்லையி லாதன எண்குண மானவை யெய்திடு மாகாதே
இந்துசி காமணி யெங்களை யாள எழுந்தரு ளப்பெறிலே. (7)

சங்குதி ரண்டுமு ரன்றெழு மோசை தழைப்பன வாகாதே
சாதிவி டாதகு ணங்கள்நம் மோடு சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனு மாயை யடங்கிடு மாகாதே
ஆசையெ லாமடி யாரடியோமெனு மத்தனை யாகாதே
செங்கய லொண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பன வாகாதே
சீரடி யார்கள்சி வானுப வங்கள் தெரிந்திடு மாகாதே
எங்குநி றைந்தமு தூறுப ரஞ்சுட ரெய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோனெனை யாள எழுந்தரு ளப்பெறிலே. (8)

*திருச்சிற்றம்பலம்*

## அச்சோப்பதிகம்

*திருச்சிற்றம்பலம்*

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்த னெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும் வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே.

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

*திருச்சிற்றம்பலம்*